


# தாயுமானவர் பாடல்களில் மனம்

# 1. மனம் ஒரு அறிமுகம்

உண்மையில் பெரும்பாலோரின் சிந்தனையில் ஒரு கேள்வி எழுந்தபடியே உள்ளது.

அது மனம் என்பது என்ன என்பதுதான். இதற்கான விடை காணும் முயற்சியினையும் பலர் செய்துள்ளார்கள்.



ஆயினும் சிலருக்கு மட்டுமே நிலையான பதில் கிடைத்துள்ளது. "மனசு மாதத்துவ ஞானிகளாலும், விஞ்ஞானிகளாலும் இதுவரையில் முழுமையாக விளங்க முடியாத புதிராகவே" இயங்குகின்றது.

மனதைவிடப் பெரியதாக ஒரு பொருள் இந்த பிரபஞ்சத்தில் எங்குமே இல்லை.

ஏன் என்றால் அந்த மனதைக் கொண்டு தான் நாம் எதையும் அறிய முடிகிறது.

விஞ்ஞானத்தால் எத்தனை எத்தனையோ கருவிகளைக் கொண்டும் அறிய முடியாத பிரபஞ்ச ஆற்றலாகிய இறைவெளியினைக் கூட மனம் தான் யூகித்து உணருகிறது.

## வேதாந்த சாத்திரத்தில் மனம்

**<u>இந்து சமய</u> <u>வேதாந்த சாத்திரங்கள்</u>, குறிப்பாக <u>சாங்கிய மெய்யியல்</u> தத்துவங்களில் ---—மனம் நான்கு பணிகள் செய்யும் போது நான்கு பெயர்களில் அழைக்கப்படுகிறது.**

- **மனம்**: சந்தேகம் எழும் போது மனதிற்கு மனம் என்ற பெயர் பெறுகிறது. எதையும் உறுதியாக தீர்மானிக்க இயலாத குழம்பிய மன நிலை இது.
- **சித்தம்**: பார்த்தவைகள், கேட்டவைகள், உணர்ந்தவைகள் என வாழ்க்கையில் பெறுகின்ற அனுபவங்கள் அனைத்தும் பதிவுகளால்

(சமஸ்காரங்கள்) மனதில் சேமிக்கப்படுகிறது. அந்த சேமிப்பு நிலையமாக திகழும் மனதை சித்தம் எனப்படுகிறது.

- **புத்தி**: தொலைவில் வருபவன் இராமனா அல்லது கிருட்டிணனா என்று குழம்பிய மனம், சேமிப்பு நிலையமான சித்தத்தில் தொலைவில் வருபவனை இராமன் என்றோ அல்லது கிருட்டிணன் என்றோ ஒப்பிட்டு நோக்குகிறது; சித்தத்தில் ஏற்கனவே இராமனை அல்லது கிருட்டிணனைப் பற்றிய பதிவுகள் இருக்குமானால் அவன் இராமன் அல்லது கிருட்டிணன் என்ற முடிவிற்கு வருகிறது. ஒரு வேளை அவர்களைப் பற்றிய தகவல்கள் எதுவும் சித்தத்தில் இல்லாவிட்டால், `அவன் யார் என்று தெரியவில்லை` என்று முடிவு செய்கிறது மனம். இவ்வாறு முடிவு செய்கின்ற மனமே புத்தி ஆகும்.
- **அகங்காரம்**: மேற்கண்ட மூன்று படிகளின் மூலமாக ஒருவரை அல்லது ஒரு பொருளை அறியும்போது, *நான் இராமனை* அறிகிறேன், *நான் கிருட்டிணனை அறியவில்லை*, என்று உறுதி செய்கின்ற **நான்** எனும் உணர்வாகத் (Ego) திகழும்போது மனம் அகங்காரம் எனப்படுகிறது.

## மாயையின் வெளிப்பாடுகள்.

மனம் பல பிரச்சனைகளை, பல போலிகளை உருவாக்கிக் காண்பிக்கும் தன்மை கொண்டது. அவற்றில் ஒன்று தான் மாயை!

மாயை என்பது இல்லாத ஒன்றை இருப்பதுபோல காண்பிப்பது. இல்லாத ஒன்றை இருப்பது போல நினைத்து அதனால் அதிகம் பயப்படுவது அல்லது அதிக ஆசைப்படுவது இரண்டுமே மாயையின் வெளிப்பாடுகள்.

*வாழ்க்கை என்ற ஒன்று இருக்கும் வரை இதுபோன்ற மாயை இருந்து கொண்டே இருக்கும். இதில் இருந்து விடுபட ஒரே வழி இறைவனைச் சரணடைவது தான்.*



நாரதர் ஒரு சமயம் கிருஷ்ணரைத் தரிசிக்கச் சென்றார். அவரை கிருஷ்ணர் ஆசீர்வதித்தார். இருவரும் உரையாடியபடியே உலாவச்

சென்றார்கள்.

அப்போது நாரதர், ““கிருஷ்ணா! உங்களுடைய மாயை மிகவும் வலிமை வாய்ந்தது என்று சொல்கிறார்கள். அது உண்மைதானா?

“தேவரிஷி’ என்று எல்லோரும் என்னை அழைக்கிறார்கள். பிரம்மத்தை (தெய்வத்தை) உணர்ந்த பிரம்ம ஞானியாகிய என்னை உங்களுடைய மாயை என்ன செய்யும்? மாயையால் நானும் பாதிக்கப்படுவேனா?” என்று கேட்டார்.

அதைக் கேட்ட கிருஷ்ணர், நாரதரின் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், சற்று தூரத்திலிருந்த ஒரு குளத்தைச் சுட்டிக்காட்டி, ““நாரதரே! அதோ அந்தக் குளத்தில் மூழ்கி எழுந்து வாருங்கள்…” என்று கூறினார்.

கிருஷ்ணர் கூறியபடியே, நாரதர் தன் கையில் இருந்த “மகதி’ என்ற வீணையைக் குளக்கரையில் வைத்துவிட்டு, குளத்தில் சென்று மூழ்கி எழுந்தார்.

மூழ்கி எழுந்தாரோ இல்லையோ, அவர் அழகிய இளம் பெண்ணாக மாறியிருந்தார்! “தான் நாரதர்’ என்ற பழைய நினைவுகள் அனைத்தும் அவருக்கு அறவே இல்லாமல் போயிற்று; குளக்கரையில் அவர் வைத்த வீணையும் இல்லை. கிருஷ்ணரும் அங்கு இல்லை.

இப்போது நாரதப் பெண், குளத்தின் படிகளில் ஏறி மேலே வந்து கொண்டிருந்தாள். அந்த வழியாக அந்த நாட்டு அரசன், குதிரையில் வேகமாக வந்தான்.

அவன் இளைஞன், அழகானவன். நாரதப் பெண்ணை அவன் பார்த்தான். அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினான்.

“நான் இந்த நாட்டின் அரசன். உன்னைத் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன், உனக்குச் சம்மதமா?” என்று கேட்டான்.

நாரதப் பெண் மவுனமாகத் தலையசைத்து, தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

அரசன் அவளைத் தன்னுடன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றான்.

இருவருக்கும் முறைப்படி திருமணம் விமரிசையாக நடந்தது. இருவரும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்கள்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. ஒரு சமயம் பக்கத்து நாட்டு அரசன், இந்த நாட்டு அரசன் மீது போர் தொடுத்தான். இருதரப்புக்கும் கடுமையாகப் போர் நடந்தது.

போர்க்களத்தில் நாரதப் பெண்ணின் கணவன் கொல்லப்பட்டான். அதைத் தொடர்ந்து, நாரதப் பெண் இருந்த நாட்டின் தலைநகரைக் கைப்பற்றுவதற்கு பகைவர்கள் விரைந்து வந்தார்கள்.

அப்போது வீரர்கள் சிலர், போர்க்களத்தில் இருந்து தப்பி அரண்மனைக்கு வந்து நாரதப் பெண்ணிடம், ""அரசியாரே! போரில் நமது அரசர் கொல்லப்பட்டார்! பகைவர்கள் அரண்மனையைக் கைப்பற்ற நெருங்கி வந்து கொண்டிருக்கிறார்கள்! உங்களையும், நமது அரச குமாரர்களையும் பகைவர்கள் சிறை பிடிப்பதற்குள் இங்கிருந்து நீங்கள் தப்பிச் சென்றுவிடுங்கள்,” என்று கூறினர்.

நாரதப் பெண்ணும், குழந்தைகளுடன் அரண்மனையிலிருந்து தப்பி ஓடினாள். ஆனாலும், பகைவர்கள் இதை அறிந்து விட்டனர்.

அவளைத் தேடிச் சென்றனர். அவர்கள் தன்னைத் துரத்தி வரும் சப்தம் அவளுக்குக் கேட்டது. அவள் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க வேக வேகமாக அருகிலிருந்த காட்டிற்குள் ஓடினாள்.

விரைந்து ஓடியபோது, அவள் தன் மூத்த மகனின் கையைத் தவற விட்டாள். இப்போது அவள் தன் ஒரு குழந்தையை மார்போடு அணைத்தபடியே ஓடிக்கொண்டிருந்தாள்.

இதற்குள் பகைவர்கள் அவளை மிகவும் நெருங்கி விட்ட ஆரவாரம் கேட்டது. இதனால் பயந்து வேகத்தை அதிகரித்த போது, அவள் கையில் இருந்த குழந்தையும் தவறி கீழே விழுந்தது.

குழந்தையை எடுக்க முடியவில்லை. பகைவர்களிடம் சிக்காமல்

---

தப்ப கல்லிலும் முள்ளிலும் விழுந்தாள். அதனால் உடலில் பலமான காயங்கள் ஏற்பட்டன.

நீண்ட தூரம் ஓடிய பிறகு, பகைவர்கள் துரத்தி வந்த சப்தம் கேட்கவில்லை. பகைவர்களிடமிருந்து தப்பியதை அவள் உணர்ந்தாள்.

காட்டிலிருந்த ஒரு மரத்தடியில் அமர்ந்து தன் நிலையை நினைத்து அவள், "ஐயோ! என் நிலை இப்படி ஆகிவிட்டதே!

நான் என் கணவரை இழந்துவிட்டேன்! குழந்தைகளையும் பறிகொடுத்து விட்டேன்.... நாட்டையும் பகைவர்கள் பிடித்து விட்டார்கள். ஆதரவற்ற அநாதையாக நான் இப்போது இருக்கிறேன். இனிமேல் நான் யாருக்காக உயிர் வாழ வேண்டும்?

கல்லிலும் முள்ளிலும் அடிபட்டு உடல் முழுவதும் ஏற்பட்ட இந்தக் காயங்களின் வலியை என்னால் பொறுக்க முடியவில்லை. பசியும் தாகமும் என்னை வருத்துகின்றன!" என்று பலவாறு கூறி கதறி அழுதாள்.

அப்போது கிருஷ்ணர் ஒரு முதியவர் வடிவத்தில் அங்கு வந்து, "அம்மா! நீ யார்? ஏன் இப்படி இந்தக் காட்டில் தனிமையில் அழுது கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

நாரதப் பெண், தன்னுடைய அவல நிலையை அவரிடம் கூறி அழுதாள்.

முதியவர் அவளிடம், "அம்மா! அதோ தெரியும் அந்தக் குளத்தில் நீராடி விட்டு வா! அதனால் உனக்கு நன்மை ஏற்படும்," என்று தெரிவித்தார்.

முதியவர் கூறியபடியே நாரதப் பெண் குளத்தில் மூழ்கி எழுந்தாள். உடனே நாரதப் பெண் உருவம் மாறி, பழைய நாரதர் வடிவம் கொண்டார். அவருக்கு நடந்தவை அனைத்தும் நினைவுக்கு வந்தன.

குளத்தின் படிகளில் ஏறி வந்த நாரதர், குளக்கரையில் தான் வைத்துச் சென்ற வீணையை எடுத்துக் கொண்டார். சற்று தூரத்தில் கிருஷ்ணர் நின்று கொண்டிருப்பதையும் பார்த்தார்.

நடந்ததையெல்லாம் நாரதர் நினைத்துப் பார்த்த படியே கிருஷ்ணரிடம் சென்று, ""பகவானே! நான் கர்வம் கொண்டதற்கு என்னை மன்னியுங்கள்.

உங்கள் மாயை மிகவும் வலிமை வாய்ந்தது என்பது உண்மை தான். மாயைக்கு நான் ஒருபோதும் வசப்படாமல் இருக்க வேண்டும் என்று என்னை ஆசீர்வதியுங்கள்," என்று வணங்கிக் கேட்டுக்கொண்டார்.

கிருஷ்ணரும் நாரதரின் பிரார்த்தனையை ஏற்று ஆசீர்வதித்தார்.

வாழ்க்கை என்ற ஒன்று இருக்கும் வரை இதுபோன்ற மாயை இருந்து கொண்டே இருக்கும். இதில் இருந்து விடுபட ஒரே வழி இறைவனைச் சரணடைவது தான்.

தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா! மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே!!. - பகவத்கீதை 7.14

"முக்குணங்களால் ஆகிய என்னுடைய இந்த மாயை தெய்வீகமானது, யாராலும் கடக்க முடியாதது. ஆனால் யார் என்னையே சரணடைகிறார்களோ, அவர்கள் இந்த மாயையைக் கடக்கிறார்கள். "

மனதைப்பற்றி வேதாத்திரி மகரிஷி அவர்கள் கூறும்பொழுது, அது ஆராயப்படவேண்டிய ஒன்று என்றும், அப்படி ஆராய்ந்தால் தான் அது வளப்படும் என்றும் கூறுகிறார். எனவே இதை மனவளக்கலை என்று அவரது போதனையாக அறிமுகப்படுதியிருக்கிறார்."

செங்கற்பட்டு வழக்கமான வாழ்த்துக்களுடன்

14.08.2019 பானுகுமார்.

# 2. மனமே மனிதன்.

மன இதன் என்ற இரண்டு வார்த்தை சேர்ந்ததுதான் மனிதன். மனதை இதமாக வைத்துக் கொள்ள வேண்டும். முரண்பாடாக இல்லாமல் (இதம் – இணக்கம்)

மனம் என்றால் என்ன? மனிதன் என்றால் என்ன? மனம் தான் மனிதன். மனிதன் தான் மனம்.

மனம் இரண்டு வினைப் பதிவுகளாலே ஆக்கப்பட்ட ஒரு தத்துவம்.

மனம் ஒரு பருப்பொருள் அல்ல. நமது உயிரிலிருந்து தொடர்ந்து வந்து கொண்டே இருக்கக்கூடிய ஓர் அலையியக்கம் தான் அது.

## மனதை அறியலாம் அடக்க முடியாது - மகரிசி

மனம் என்ற மதிப்புக்குரிய மாபொருளை மனத்தால்தான் உணரவேண்டும். மனம் என்பது காந்த அலையாக இருக்கிறது.

மனம் காந்த அலையாக இருப்பதால் , அது இயக்கத்தின் சுழற்சி அலைகளை உடையதாக இருக்கிறது.

மனதின் சுழற்சி அலைகளை "அதிர்வு எண்" (Mental Frequency)என்று அழைக்கிறார்கள்.

மனதை புறப்பொருட்களின் வழியே செயல்படும்போது அடையும் தன்மைக்கேற்றவாறு மன அலைநிளத்தை வகுத்துக் கொள்கிறது.

ஒரு வினாடிக்கு எத்தனை அலைகைள் உருவாகிறதோ அந்த எண்ணிக்கையை அதிர்வெண் என்று சொல்வார்கள்.

தொடர்ந்து வரும் உயரமான பகுதி அல்லது பள்ளமான பகுதி, இவற்றிற்கிடையேயுள்ள தூரத்தை அலைநீளம் என்று சொல்வார்கள்.

மனித மனம் இதுவரையில் விஞ்ஞானக் கருவிகளைக் கொண்டு குறிப்பாக Electro Encephalograph (EEG) என்ற கருவியைக் கொண்டு ஆராயந்த போது அது விநாடிக்கு ஒன்று முதல் நாற்பது சுழல் வரை

இயங்கி வருகிறது என்ற உண்மைய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மனம் இயங்கு நிலையில் விஞ்ஞானமாகவும், அடக்கநிலையில் மெய்ஞானமாகவும் திகழ்கிறது.

மனித மனதை விஞ்ஞானக் கருவிக் கொண்டு ஆராய்ந்தபோது. அது விநாடிக்கு ஒன்று முதல் நாற்பது சுழல் வரையில் இயங்கி வருகிறது என்ற உண்மையை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர்.

இந்த மன அலைச்சுழல் இயக்க நியதியைப் பொதுவாக நான்கு பிரிவுகளாக உளவியல் அறிஞர்கள் பிரித்துள்ளார்கள்.

அவை 1. பீட்டா அலை (Beta Wave) 2. ஆல்பா அலை (Alpha Wave) 3. தீட்டா அலை (Theta Wave) 4. டெல்டா அலை (Delta Wave).

பீட்டா அலை – உணர்ச்சி அலை 40 – 14 சுற்றுகள் – விநாடிக்கு.

ஆல்பா அலை - அமைதி அலை – 13 - 8 சுற்றுகள் – விநாடிக்கு.

தீட்டா அலை – நுண்ணலை 7 – 4 சுற்றுகள் விநாடிக்கு.

டெல்டா அலை – அறிதுயில் அலை 3 – 1 சுற்றுகள் விநாடிக்கு.

## மன அலைச்சுழலின் செயல்பாடுகள்

பெரும்பாலும் எல்லா மனிதர்களின் மன அலைச்சுழல் பீட்டா அலையிலேதான் இயங்குகிறது.

மனித மனம் ஐம்புலன்களின் வழியாக இயங்கும்போது, மன அலைச்சுழல் விநாடிக்கு 14 முதல் 40 சுழற்சி வரையில் இயங்குகிறது.

பீட்டா அலையிலேதான் சீவகாந்தம் அதிகமாகச் செயல்படுகிறது.

இதுவே நமது உருவமாகவும், குணமாகவும் மனமாகவும் மாறுகிறது. மனம் பீட்டா அலையில் இயங்கும்போது உணர்ச்சி மயமான எண்ணங்கள் உண்டாகின்றன.

தவம் செய்யும்போதும், தூங்கும்போதும் மனம் ஆல்பா அலைக்கு வருகிறது. மன அலைச்சுழல் விநாடிக்கு 8 முதல் 13 வரையில் இருக்கிறது.

தூக்கத்தின்போது மனம் விழிப்பு நிலையில் இருக்காது. அதனால் அறிவுப் பெருக்கம் இல்லை.

தவத்தில் அதே ஆல்பா நிலையில் இருக்கும்போது தூங்காமல் இருக்கிறோம். விழிப்புடன் இருக்கிஆறாம்.

இந்த சுகத்தைத்தான் "தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது" என்று சொல்லி வைத்தார்கள்.

ஆல்பா நிலையில் மனம் நுண்மையான நிலைக்கு வருகிறது. மனம் அமைதி அடைகின்றது.

ஆல்பா நிலையில் அறிவு கூர்மையாகிறது. பொருள் வயப்பட்ட ஆறு தீய குணங்களும் நற்குணங்களாக மாறிவிடுகின்றன.

நாம் தவத்தில் ஆழ்ந்து போகும்போது மன அலைச்சுழல் இன்னும் குறைந்து தீட்டா அலைக்கு அதாவது 4 – 7 சுழல் – செல்கிறது. மனம் பிரபஞ்சம் வரை விரிவடைகிறது.

தவத்தில் மேலும் ஆழ்ந்து போகும்போது மனம் டெல்டா அலைக்குப் (விநாடிக்கு 1 – 3) போய்ச் சேருகிறது. அப்போது பிரபஞ்சத்தை எல்லாம் தாண்டி சுத்தவெளி என்ற இறைநிலையோடு மனம் ஒன்றாகக் கலந்து இறநைிலையாகவே மாறிவிடுகிறது.

மனிதன் பீட்டா அலையிலேயே வாழ்கிறான். உணர்ச்சி வயப்பட்டுகிறான்.

ஆழ்ந்து சிந்திக்கும்போது சில நேரங்களில் ஆல்பா அலைக்கு வருகின்றான்.

தீட்டா அலைக்கோ, டெல்டா அலைக்கோ சில மனிதர்களே வருகின்றார்கள். எல்லோராலும் நுண்ணிய அலைக்கு மனத்தைக் கொண்டு செல்ல முடியும்.

மகரிசியின் மனவளக்கலை மன்றங்களில் மனதை பக்குபவப்படுத்தும் பல தவநிலைகள் கற்றுத்தரப்படுகின்றன. பயற்சியினால் நமது அலைச்சுழல் வெகுவாக குறைந்து வளமாக வாழலாம்.

## மனதின் செயல் என்ன?

மனம் இரண்டு செயல்களைச் செய்கின்றது.

1. சுருக்கி வைக்கிறது.
2. விரித்துக் காட்டுகிறது.

நமது அனுபோக அனுபவங்களைக் கருமையத்தில் பதிவுகளாகச் சுருக்கி வைக்கிறது. பின்னர் அவற்றை எண்ணங்களாக விரித்துக் காட்டுகிறது.

காந்த ஆற்றல் கண்களின் மூலமாக ஒளி அலைகளாக மாறி ஒரு பொருளைப் பார்க்க உதவுகிறது. இந்தப் பதிவு நாம் பார்த்த பொருளைத் திரும்பத் திரும்ப நமது நினைவிற்குக் கொண்டு வருகிறது.

தேவை, பழக்கம், சூழிநிலைக்கு ஏற்ப, சீவகாந்த அலையில் உள்ள நமது அனுபவங்கள் எண்ணங்களாக மலர்கின்றன.

### சுருக்கி பதிவு செய்தல் எவ்வாறு?

பசு ஒன்றைப் பார்க்கின்றோம். பசுவிலிருந்து வருகின்ற ஒளி அலை கண்ணிற்குள் குவிந்து கொசு அளவில் தெிகிறது. மூளையில் புள்ளி அளவில் சுருங்குகிறது.

அங்கு காந்த அலையாக மாற்றப்பட்டு உடலில் ஓடிக் கொண்டிருக்கின்ற சீவகாந்த அலையில் கலந்து பதிவாகின்றது.

சுழன்று ஓடிக் கொண்டிருக்கின்ற சீவகாந்தம் துல்லிய சமதளச் சீர்மை என்ற தத்துவப்படி சுத்தவெளியின் பேரழுத்தத்தால் ஒரு காந்த மையத்தை அமைத்துக் கொள்கிறது. இதுவே கருமையம்.

இது மூலாதாரத்தில் கருமையமாக அமைந்துள்ளது. சீவகாந்த அலையில் பதிவான பசுவின் உருவமும், குணங்களும் கருமையத்தைச் சென்று அடைகின்றன.

காதின் மூலம் ஒரு பாடலைக் கேட்கிறோம். ஒலி அலைகள் காதில்பட்டு, மூளைக்குச் சென்று, புள்ளி அளவில் சுருங்கி சீவகாந்தத்தில் அலையில் பதிவாகி, கருமையத்தை அடைந்து சேர்த்து வைக்கப்படுகிறது.

மூக்கின் மூலம் ஒரு பூவின் மணத்தை உணர்கிறோம். மனம் மூளையில் மணத்தைப் புள்ளியளவில் சுருக்கி சீவகாந்த அலையில் பதிவாகி கருமையத்தில் சேர்த்து வைக்கிறது.

நாக்கின் மூலம் இனிப்பான உணவைச் சுவைக்கிறோம் மனம இச்சுவை உணர்வையும மூளையில் சுருக்கி கருமையத்தில் திணிவு பெற்ற அலையாகச் சேர்த்து வைக்கிறது.

தோலின் மூலம் மற்றொரு பொருளைத் தொட்டு அப்பொருளை அழுத்தமாக உணர்கிறோம். அந்த அழுத்த உணர்வும் மூளையில் புள்ளியளவில் சுருக்கி கருமையத்தில் திணிவு பெற்ற அலையாகப் பதிவாக சேர்த்து வைக்கிறது.

உணர்ந்த எல்லாவற்றையும் உருவங்களாகவும், குணங்களாகவும் கருமையத்தில் மனம் இவ்வாறு சுருக்கி இருப்பு வைத்துள்ளது.

## விரித்துக் காட்டுதல் எவ்வாறு?



முன்பு பார்த்த பசுவை கருமையத்திலிருந்து மூளைக்கு கொண்டு வந்து சீவகாந்த அலையை விரித்து எண்ணமாக மலர்த்திக் காட்டுகிறது மனம்.

முன்பு கேட்ட பாடல் நினைவுக்கு வருகிறது. முகர்ந்த பார்த்த ரோசா மலரின் மணம் மனத்திற்கு வருகிறது.

சுவைத்த இனிப்பு உணவு நினைவுக்கு வருகிறது. தொட்டுப் பார்த்த பொருளின் அழுத்தம் மனத்திற்கு எண்ணமாக வருகிறது.

இவ்வாறு மனம் ஐந்து உணர்வுகளையும் எண்ணமாக விரித்துக் காட்டுகிறது.

## மனம் அது செம்மையானால்

**மனம் என்பது நம்மை நமக்கு அடையாளப்படுத்த உதவும் அற்புத ஆற்றல். உள்முக அவயம். பொறிகளை இயக்கும் மென்பொருள்.**

**மனதினைக் கொண்டே மனிதனை அறியலாம். ஒருவரை அடையாளப்படுத்தும் உடல், உடலினை இயக்கும் மனதை மையமாக வைத்தே அமைந்துள்ளது.**

**மனம் உடலில் உள்ளதாக அறிவதால் உள்ளம் என்றும் நேர்மை அல்லது தன்னை தானே ஒழுங்கு படுத்தும் தன்மையுடன் இருப்பதால் நெஞ்சம் என்று அழைக்கிறோம்.**

**மனிதன் இல்லாததை கற்றுக் கொண்டு தனது இயல்பான குணத்தை இழந்துவிட்டான்.**

**மனிதன் என்பவன் மண்ணால் செய்யப்பட்டவன் என்று வர்ணிப்பதைவிட மனதால் வளர்க்கப்பட்டவன் என்பதே சாலச்சிறந்து எனலாம்.**

**மனம் என்பது சிறப்பாக செயல்படும் இயக்க சக்தி. உடல் இயங்க மனம் கட்டளையிடுகிறது. மனதின் கண் எழும் எண்ணங்கள் உடலினை இயக்கி மனதின் தேவைகளை சந்திக்கிறது.**

**மனம் உள்ளதால் மனிதன் என்பது சிறந்தது. மனம் என்பது பார்க்க முடியாத ஒன்றாக இருப்பினும் உணரமுடிந்த ஒன்று என்பது யாவருக்கும் புரியும்.**

**மனம் என்பது மனிதனுக்கு மட்டுமா? அல்லது பிற உயிர்களுக்கும் உண்டா? என்பதை அறிய முற்பட வேண்டும்.**

**தன்னை தானே இயக்கும் உயிர்கள் பல இருக்கின்றன. மரம் தன்னை தானே இயக்கும் ஆற்றல் உடையது.**

---

**சூரிய ஒளியை தேடிச்செல்லும் கிளைகள், நீர் இருக்கும் இடத்தை தேடிச்செல்லும் வேர்கள், பருவ காலத்தில் பூப்பது, இலை உதிர்வது என பல தொழில்கள் மரம் செய்கின்றது.**

**மரத்திற்கு உயிர் இருப்பதால் செய்கின்றதா! மனம் இருப்பதால் செய்கின்றதா! உயிர் என்றால் என்ன? மனம் என்றால் என்ன? இப்படி கேள்விகள் நமது மனதில் எழுகின்றன.**

**எல்லா பொருள்களும் மனத்துடனே இருக்கிறது. உயிர் உள்ளது என்றால் மனம்,**

**உயிரற்றது என்றால் மனம். எந்த பொருளும் அதற்கென தனியாக மணம் இருப்பதை அறியலாம். ஆயினும் உயிருள்ளவற்றின் மனம் அதன் செயல் தன்மையால் "மனம்" என்று அழைக்கப்படுகிறது.**

**உயிர் என்பது மனதின் இச்சைக்கு வசப்படும் ஓர் இறைப் பேராற்றல். அற்புத சக்தியாக இருக்கும் ஒன்று மனதிற்கு இசைந்து இருக்கிறது.**

**மனம் என்பது ஒரு பொருளின் உள்ளே இருந்து "நான்" என்ற ஓர் உணர்வை தருவது.**

**மனம், மரம் என்ற உயிரின் உள்ளே செயல்படும் பொருளாக இருப்பதால் ஓர் எல்லைக்குள் மட்டுமே செயல்படுகிறது. மரத்தின் குணம் அதன் வாழும் தன்மையை பொருத்து அமைகின்றது.**

**மனதை அளக்க பயன்படும் அளவுமுறையே அறிவு எனப்படும். அறிவு என்பது ஓர் அறிவு முதல் ஆறு அறிவுவரை பழந்தமிழர்களால் முறைபடுத்தப்பட்டுள்ளது.**

**தமிழர்களின் பழைமையான இலக்கண நூலாம் தொல்காப்பியத்தில் அதற்கான விளக்கம் தரப்பட்டுள்ளது. இது மனித நாகரிகத்தின் உச்சத்தையும், தமிழர்களின் புரிதலையும் வெளிப்படுத்துகிறது.**

***ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே***

***இரண்டு அறிவதுவே அதனொடு நாவே***

***மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே***

***நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே***

***ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே***

***ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே***
***நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே.*** **தொல் - 1526.**

**அறிவினை அளந்த தமிழர்களின் திறமைக்கு தலை வணங்கி மேலும் தொடர்வோம். மனம் மகிழ்ச்சியில் திளைக்கும் வரை ஆராய்வோம்.**

**உலக மனிதர்களின் உள்ளம் தெளிவானால் உண்மை யாவரையும் வாழச்செய்யும்.**

-------------------

# 3. மனம் ஒரு மாபெரும் பொக்கிஷம்

விலங்கினத்திடம் இல்லாத ஒரு சிறப்பு மனிதனிடத்தில் உள்ளது. அதன் பெயர் மனம், மனிதன் என்றால் மனம் தான். மனம் என்றால் மனிதன் தான் மனம் என்பது நம்முடைய எண்ணங்களின் தொகுப்பு.

புறத்தே உள்ள அனைத்தையும் அறிவது மனம். அனைத்தையும் அறிகிற மனம் தன்னை அறியாது போனால் அறிவு முழுமை பெறாது.

மனம் தன்னையும் அறியும் போது தான் ஞானம் பெற்று முழுமையடைந்து. அந்த முழுமையின் ஆனந்தத்தை உணர்ந்து பேரானந்தம் அடைகிறது.

நம்முடய மனமே நாம் பெற்றுள்ள ஒரு அரும்பெரும் பொக்கிஷமாகும். அதை எப்படி நாம் பயிற்றுவிக்கிறோமோ அப்படியெல்லாம் அது விரிந்தும் சுருங்கியும் சிறப்போடும் செயல்படும்.

அணு அளவுக்கு சுருங்கவும் உலகளவுக்கு விரியவும் பேராற்றல் பெற்றதுதான் நம் மனம்.

அதை நாம் எந்தெந்த நிலையில் வைத்து அனபவிக்கிறோமோ அந்தந்த நிலைக்கேற்ப அதியும் மகிழ்வும் கிட்டும் அவ்வளவு தான்.

தவத்தால் இடம்தான் மாற்றம் அடைகிறதோ ஒழியச் செயல்படுவது ஒரே மனம்தான்.




நம் மனம் பேராற்றல் களத்தோடு ஒன்றுபடும்போது பேராற்றலோடு கூடிப் பேரின்பம் பெறுகிறது.

விரிந்து புறமனமாகப் புலன்வழி செல்லும் போது அதற்குண்டான இன்ப துன்ப அனுபவங்களைப் பெறுகிறது.

இதுதான் இந்த மனதின் விசித்திரமாகும். எனவேதான் இதை விசித்திர லோகம்.

# 4.மனதைப் பற்றி ஆராய்ந்தவர்கள்.

மனதைப் பற்றி ஆராய்ந்தவர்களில் குறிப்பிடத்தகவர்கள், சாக்கரட்டிஸ், அரிஸ்டாட்டில், பிளோட்டோ சிக்மண்ட் ப்ராய்டு, லொக், கான்ட், வில்லியம் ஜேம்ஸ், டேக்காட், கியூம், வேதாத்திரி மகரிஷி போன்றவர்கள்.

### அரிஸ்டாட்டில்

மனம் ஒரு வஸ்து எனக் கூறியதுடன் மனதிற்கும், உடலிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு எனக் கூறுகின்றார்.

மனிதனின் முழுமுதற் செயலாக்கத்திற்கு அறிவுயர்ந்த தரத்திலான சக்தியாக மனம் அமைகின்றது. இஅதாவது ஒழுங்குபடுத்தும் தத்துவமாக அமைகின்றது என்கிறார்.

## கான்ட்

மனம் என்பது ஒரு வஸ்தல்ல என்பது இவரது கருத்தாகும்.

### பிளோட்டோ

---



மனம் சடலமல்லாத வஸ்து எனக் கூறியதுடன் அதன் செயல்பாட்டினை மூன்று வயையாகப் பிரித்துக் காட்டினார்.

நியாயம் -------------- ஆன்மாவின் தெய்வீகம் சார்ந்த பகுதி

விருப்பு --------------- வயிறு

உணர்வு ---------------- மார்பு

## கியூம்



மனம் என்பது அனுபவங்களின் கூட்டுத் தொகையாகும். என்பது இவரது கருத்தாகும்.

## வில்லியம் ஜேம்ஸ்

மனம் உணர்வுகளின் ஒட்டக் போட்பாடு என்பது இவரது கருத்தாகும்.

## டேக்காட்.



மனம் சடமல்லாத வஸ்து எனக் கூறினார். (இவரது கோட்பாடு என அழைக்கப்டுகின்றது.) மனம், சடம் என்பதன இரு பொருட்கள்

மனம், சடம் என்பன இரு பொருட்கள் என்பது இவரது கருத்தாகும். நான் சிந்திக்கின்றேன். ஆதலால் நான் உள்ளேன் என்ற கூற்றின் வழி மனதின் இருப்பினை நிறுவியதுடன் மனம் சடமல்லாத வஸ்து. சிந்திக்கும் இயல்புடையது.

உணர்தல், விரும்புதல், ஞாபகப்படுத்தல், தீர்மானித்தல். ஐயமுறுதல், புரிந்து கொள்ளல் ஆகிய இயல்புகளை கொண்டதுடன் கடவுள் தவிர்த்த வேறு எந்த வகையிலும் மனதினை அழிக்க முடியாது எனக் கூறினார்.

## கில்பேட்றையில்


மனம் நடத்தையின் வடிவம் எனக் கூறினார். மூளையைத் தான் ஆன்மா, மனம் என ஒன்றில்லை என்ற கருதும் காணப்படுகின்றனது.

## தொல்காப்பியம்

“ஆறறிவது அவற்றொடுமனனே” என்பது தொல்காப்பியம்

## வேதாத்திரி மகரிஷி

- மனித மனம் என்பது இறைநிலையும், அதில் தோன்றும் காந்த அலையுமேயாகும்.
- நம் உடலில் ஓடிக் கொண்டிருக்கும் அலையே – காந்த லையே – சீவகாந்த அலையே மனமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.
- மனித மனம் ஒரு மறைபொருள். புலன்களுக்கு எட்டாதது. அது இல்லை என்று யாராலும் கூற முமடியாது.
- மனம் என்னும் ஆற்றலுக்குள் உயிர், அறிவு, தெய்வம் மூன்றும் இருளில் நிழல் போன்று அடங்கி உள்ளன.
- மனத்தை அடக்க நினைத்தால் அலையும். மனத்தை அறிய நினைத்தால் அடங்கும்.



உண்மையில் மன நிலைக்கு அடித்தளம் இறைநிலையாகும். இறைநிலையானது “இருப்பு நிலை” அல்லது “மெய்நிலை”யாகும். மனநிலையே இயக்க அலை, மனநிலை உயிர்” என்றும் வழங்கப்படுகினறது.

ஆகவே. இறைநிலையும் மனநிலையும் பொருளில் ஒன்றுதான்.

இருப்பு நிலையான மெய்ப்பொருள் இயக்கநிலையாகச் சிறப்படைந்து விளங்கும் அலையே மனம்" என்று வேதாத்திரி மகரிஷி விளக்கம் தந்துள்ளார்கள்.

## இந்திய மெய்யியல்

இந்திய மெய்யியலிலும் மனம் முதன்மை பெறுகின்றது. சைவ சித்தாந்தம் மனதினை அறிதலுக்குரிய பொருளாகக் கூறி, அதன் செயல்பாடுகளை நான்கு வகையாகக் கூறுகின்றன. அவை

1. மனம்
2. புத்தி
3. சித்தம்
4. அகங்காரம்

வேதாந்திகள் மனதினை அறிவைத் தரும் அந்தக்கரணமாகக் கூறுகின்றனர்.

மனம் என்றால் என்ன ? மகரிஷி கூறும் விளக்கங்கள்.

1. "உயிரின் படர்க்கை நிலையே மனம்."

உயிருக்கு கவசமாக இருப்பது மனித உடல். பல்லாயிரக்கணக்கான உயிர்த் துகழ்கள் உடல் முழுவதும் சுற்றோட்டமாக சுழலும் போது புலன்களாகிய கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகியவற்றின் வழியாக நம்முடைய உயிர் தான் படர்க்கை நிலையில் செயல்பட்டு உணரப் பெறுகிறது என்ற பேருண்மையை எடுத்துக் கூறுகிறார் மகரிஷி.

2. "சீவகாந்த அலையே மனம்"

அப்படி உயிர்த் துகளானது உடல் முழுவதும் சுற்றும் போது அதிலிருந்து வெளியேறும் அலை தான் சீவகாந்தம் எனவும், அந்த அலை தான் மனம் என்றும் குறிப்பிடுகிறார்.

3. "எண்ணங்களின் தொகுப்பே மனம்."

"எண்ணமே இயற்கையதன் சிகரமாகும்

---

இயற்கையே எண்ணத்தில் அடங்கிப் போகும்......."

"எண்ணம் இல்லையெனில் ஏதுமில்லை

எண்ணத்திற்கு அப்பால் ஒன்றுமில்லை..."

என்று எண்ணமே தனித்து வந்தால் அது எண்ணம் என்றும், தொடர்ச்சியாக வந்தால் அது மனம் என்றும் விளக்குகிறார்.

எப்படி கதம்பம் என்ற ஒரு மலர் இல்லை, ஆனால் பல மலர்களை தொடுத்துக் கட்டினால் அது கதம்பமோ அதுபோல, மனம் என்ற ஒன்று தனித்து இல்லை பல எண்ணங்களின் கோர்வையே மனமாகும்.

மனதைப் பற்றி தெரிந்து கொண்டோம், இனி அதை எப்படி ஆற்றுப் படுத்துவது சுலபம் தானே! தொடங்குவோமா...!!!

-----------------------------

# 5.தாயுமானவர் பாடல்களில் மனம்.

இவர் தமிழ்நாட்டில், திருமறைக்காடு என்று அழைக்கப்படும் வேதாரண்யத்தில் பிறந்தார். இவர் தந்தையார் கேடிலியப்பர் மற்றும் தாயார் கெஜவல்லி அம்மையார் ஆவார்கள்.

இவர் வடமொழி, தமிழ் மொழி ஆகிய இருமொழிகளிலும் புலமை பெற்றவர். தாயுமானவர் திருச்சிராப்பள்ளியை ஆட்சிபுரிந்த விசயரகுநாத சொக்கலிங்கரிடம் அரச கணக்கராகப் பணிபுரிந்தார்.

அப்போது முக்கியமான ஆவணம் ஒன்றை அரசவையில் இவர் கையால் கசக்கிப் போட, இவர் தன்னிலை மறந்து இறைவியுடன் ஒன்றிப்போய் இந்தக் காரியம் செய்வதை அறியாத சபையினர் அரசனுக்கும், அரசிக்கும் அவமரியாதை என அவதூறு பேசினார்கள்.

ஆனால் அதே சமயம் திருவானைக்கா அகிலாண்டேசுவரி கோயிலில், அம்பாளின் ஆடையில் நெருப்புப் பற்றியதைச் சிவாசாரியார்கள் கவனிப்பதற்குள் தாயுமானவர் நுழைந்து தம் கையால் கசக்கி அந்த நெருப்பை அணைத்ததைச் சிவாசாரியார்கள் கண்டனர்.

அவர்கள் உடனே ஓடோடி வந்து நடந்ததைக் கூற, தாயுமானவரின் சக்தியைப் புரிந்து கொண்டு வியந்தனர் என்பார்கள்.

தவநெறியில் சிறந்து விளங்கிய தாயுமானவர், பல்வேறு திருத்தலங்களுக்கும் சென்று இறைவனைப்பாடி வழிபட்டார். இறுதியில் இராமநாதபுரம் மாவட்டம் இலட்சுமிபுரம் என்னும் ஊரில் சமாதி அடைந்தார்.

## தாயுமானவர் பாடல்கள் சிறப்பு

தம் எளிய பாடல்கள் மூலம் தமிழ்ச்சமயக் கவிதைக்கு ஒரு தூணாக இருந்தவர் தாயுமானவர். வள்ளலாரும், பாரதியாரும் இத்தகைய எளிய கவிதைகள் பாட இவர் முன்னோடியாகத் திகழ்ந்தார் என்றும் சொல்லுவதுண்டு.

மனம், மனதின் செயல்பாடுகள், மனம் அடங்குவதற்குரிய வழிகள், மனம், மாயை என்பனவற்றுக்கு இடையேயான தொடர்புகள், மனதின் இழிநிலை, மனதின் செயல்பாட்டிற்கும் பிறப்பிறப்பிற்கும் இடையேயான தொடர்புகள் பற்றித் தாயுமானவர் தம் பாடல்களில் மிகத் தெளிவாக் கூறுகின்றார்.

தாயுமானவர் மனதை உள்ளம், ஆத்மா, நெஞ்சு, இதயம், சிந்தை என வேறு பெயர்களினால் சுட்டுகின்றார்.

மனதின் செயல்பாடுகள் நடவடிக்கைகள் என்பனவற்றின் அடிப்படையாகக் கொண்டு மனதிற்கு மேல்வரும் அடைமொழிகள் கொடுக்கிறார்.

பாழான மனம், அறிவில் மனம், மூட மனம், மாயையின் செயலான மனம், பம்மபர மனம், வஞ்ச மனம், கரங்க மனம், கல்மனம், இழிவான மனம், கள்ள மனம், அருள் இன்மை மனம், மருட்டன்மை மனம், மானைப் போன்ற மனம்.

பாழான மனம் என்பதனை

- “பாழான என்மனம் குவியவொரு தந்திரம் பண்ணுவ” (பரிபூ 12)

புழுவை போன்ற கொடியது மனம் என்பதனை,

---

- “பற்றுவெகு விதமாகி ஒன்றைவிட்டு ஒன்றிணைப்

பற்றிஉழல் கிருமிபோல்

- பாழ்ஞ்சிந்தை........” (மௌனகுரு.46)

என்றும்,

மனதின் பழிப்புரை என்ற பாடல் தொகுதியில் ,

ஆன்மாவின் மனம் மூடமனம் என்றும், இறைவின் மனம்அருள்மனம் என்றும் கூறுகின்றார்.

- “தாயான கருணையும் உனக்குண்டு எனக்கு இனிச்

சஞ்சலம கெட அருள்செய்வாய்” (சச்சிதான.107)

என்றும்

மனம் ஒரு குரங்கு என்பதனை

- “மறுகிச் சுழலும் மனக் குரங்கு” (ஆசை.334 )

என்றும்,

- “காடுங் கரையும் மனக்குரங்கு” (காடும் கரையும்.553)

என்றும்

எல்லாத் துன்பங்களுக்குக் காரணமாக மனமானது பேய்க்குரங்கு என்பதனை..

“கொள்ளித்தேன் கொட்டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்

கள்ளமனம் துள்ளுவதுஎன் கண்டோ பராபரமே”(பரா.807)

என்றும்,

“குணமிலா மனம் எனும் பேய்க் குரங்கின் பின்னே

மாறாத கவலையுடன் என்னைச் சுழல வைத்தாயே”(கல்லாலின்609) என்றும்

“ஆடும்கறங்கு ஆகி அமைந்து உழன்றுமனம்

வாடும் எனை ஐயாநீ வானயும் காண்பேனே!” (காண்.கண்ணி 1336)

என்றும் கூறுகின்றார்.

மேலும் வானத்தில் பறக்கும் காற்றாடிக்கு தன் மனிதனை ஒப்பிட்டுக் காற்றாடியினை போன்று தன் மனம் சுழன்று வருந்துகின்றது என்று கூறுகின்றார்.

இன்னும் ஒரு பாடலில் வாலற்றக் காற்றாடிக்கு மனதினை உவமித்து, அதன் மூலமாக தன் மனம் வலியற்றுக் கிடக்கின்றது என்றும் அதற்கு இறைவன் அருள்புரிய வேண்டும் என்று கூறுகின்றார்.

“வால்அற்ற பட்டம்என மாயா மனப்படலம்

கால்அற்று விழவும்முக் கண்ணுடையாய் காண்பேனோ”

என்ற பாடல் அறியத் தருகின்றது

மரத்தைப் போன்றது மனம் என்பதனை,

“மரப்பான்மை நெஞ்சினன்யான் வேண்டுவகேட்டி” (ஆசைஎ.323)

என்றார்.

வலியமனம், இரக்கமல்லாத மனம், மண்ணாங்கட்டி மனம் என்பதனை,

“தன்நெஞ்சம் நினைப்புஒழியாத அறிவிலிநான் ஞானம்எனும்

தன்மை பேச

- - - - - - -

வன்நெஞ்சோ இரங்காத மர நெஞ்சோ இரும்பு நெஞ்சோ

வயிரமான

அலதுமண்ணாங் கட்டிநெஞ்சோ எனது நெஞ்சம்

கருதிற றாவே” ( ஆசைஎ.325)

என்றும்

மனம் அலைபாயும் தன்மையது என்பதனை,

“இல்லாத காரியத்தையிச்சித்துச் சிந்தைவழிச.
செல்லாமை....” (பரா.828)

என்றும்

“பற்றற்று இருக்கும் நெறி பற்றிற் கடல்மலையும்
கற்ற நினைக்குமனம் சொன்னேன் பராபரமே” (பரா.877)

என்றும்

““ஆசை எனும் பெருங்காற்றூடு இலவம்பஞ்சு எனவுமனம்
அலையும் காலம்.....” (ஆசை.322)

என்று கூறுகின்றார்.

வஞ்ச நெஞ்சம் என்பதனை,

“ஆழாழி என்ன அளவுபடா வஞ்சநெஞ்சம்” பரா.1137)

எனக் கூறுகின்றார்.

உடலுக்கு உயிர் இன்றியமையாதது, உயிர் ஈடேற்றத்துக்குத் தடையாக அமைவது மனம். மும்மலங்களாலும் மாயையாலும் இறைக்கும் உயிருக்கும் இடையே திரை அமைத்து விடுகின்றது.

இந்த மனத்தின் இயல்புகளும் செயலும் பற்றி மிகப் பல இடங்களில் பேசுகின்றார் தாயுமானவர்.

மெய்ப்பொருளை உணராவண்ணம் அமைகின்றது மனம். அதுவே பக்குவப்படும்போது மெய்ப்பொருட்க்கு இடம் ஆகின்றது.

# 6.மனதின் தன்மை

உலகப்பற்றும் இல்லாது கடவுள் பற்றும் இல்லாது நின்றவிட்டது மனம் கேவல நிலையில் விழுந்துவிடும்.

“பற்றி னதைப் பற்றும் எந்தாய் பற்றுவிட்டாற் கேவலத்தில்

உற்றுவிட நெஞ்சம் உனை ஒன்றி நிற்பது எப்படியோ? (பல்வகை.1)

எல்லாவிதமான நினைவிற்கும் மனம் இடமாக இருக்கின்றது. உலகில் கண்டவற்றை மனம் தன்னில் பதிவு செய்து, உயிர் மீண்டும் அவற்றை நினைப்பதற்குக் காரணமாயிருக்கின்றது.

இவற்றால் அதனைப் பெரியதொரு மாயா தத்துவமமாகக் கூறுகின்றனர்.

மனத்தை ஒடுக்காது உலகத்தில் செல்ல விட்டால், அத அலைந்து எங்கெங்கும் தாவிச் சென்று அறிவுடைப் பொருளாகிய உயிருக்கும் பல்வகை இன்னல் விளைவித்து அதனைச் சீர்குலைக்கும் (எந்.தத்.5-பரா.172-காடுங்.1 – கல்லால்.4) என்பது தாயுமானவர் கருத்து.

“மனம்ஆன வானரக்கைம் மாலைஆ காமல்

எனைஆள் அடிகள்அடி எய்துநாள் எந்நாளோ.” (எந்.தத்.5)

குரங்கு கையில் கிடைத்த பூமாலைபோல் மனம் சீரழிகிறது.

“கூறாய ஐம்பூதச் சுமையைத் தாங்கிக்,

குணம்இலா மனம்எனும் பேய்க் குரங்கின் பின்னே

மாறாத கவலையுடன் சுழல என்னை

வைத்தனையே பரமே. நின் மகிமை நன்றே! (கல்லால்.4)

ஐம்பூதங்களால் ஆன உடலாகிய சுமையைத் தாங்கிக் கொண்டு, குணம் சிறிதும் இல்லாத மனம் என்னும் பேய் பிடித்த குரங்கின் பின்னே எப்பொழுதும் தீரா கவலையுடன் ஒடும் தன்மை உடையது.

"காடும் கரையும் மனக்குரங்கு கால்விட்டு ஓட, அதன்பிறகே

ஓடும் தொழிலால் பயன்உளதோ? ஒன்றாய்ப், பலவாய், உயிர்க்குஉயிராய்

ஆடும் கருணைப் பரஞ்ஜோதி அருளைப் பெறுவதற்கு அன்புநிலை

தேடும் பருவம் இதுகண்டீர். சேர வாரும் ஜகத்தீரே! (காடுங்.1)

காட்டிலும் மேட்டிலும் மனமாகிய குரங்கு கால் வைத்துப் பாய்ந்து ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த மன ஓட்டத்தை எப்படி நிறுத்துவது?

மன ஓட்டத்தை எப்படி நிறுத்துவது?

சூரிய ஒளியினால் சூடு பெற்றுக் கடலிலிருந்து ஆவியாக மாறி மேகமாகி அது குளிர்ந்து, மழையாகி, எந்த இடத்தில் மழையாகப் பெய்தாலும், அந்த நீர், தனக்குப் பிறப்பிடமாகிய கடலை நாடியே ஓடும். அதுபோல,

இறைநிலையிலிருந்து புறப்பட்டு, பல தலைமுறைகளாக. சீவ இனங்களில் இயங்கி மனிதனிடம் இறுதியாக வந்து இயங்கிக் கொண்டிருக்கும் சிற்றறிவு, முற்றிவான இறைவனை நாடியே அலைகின்றது.

அத்தகைய வளர்ச்சி நிலையில் உடல் தேவைக்கான பொருள், புலன் இன்பம் இவற்றில் ஈடுபடுகிறது.

இங்குதான் அறிவானது தான் போக வேண்டிய இடத்தை மறந்து, அடுத்தடுத்துத் தொடர்பு கொண்ட பொருள்கள்,

மக்கள், புலன் இன்பம் இவற்றோடு தொடர்பும் மேலும் பொருள்களும் இன்பமும் எளிதாக -- மேலும் மேலும் உழைக்காமலே கிடைக்கக்கூடிய வழிகளாகிய அதிகாரம், புகழ் இவற்றின் மீது நிறைவு பெறாத அவாவையும் பெருக்கிக் கொள்ளுகிறது.

---

எவ்வளவுதான் பொருளோ, புலன் இன்பமோ, புகழோ அதிகாரமோ அமைந்தாலும் இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்ற உணர்ச்சிமயமான மன அலையில் இயங்குகிறது.

இதனால், அளவு மீறியும் முறை மாறியும் ஞானேந்திரியங்களையும், கர்மேந்திரயங்களையும் பயன்படுத்த அவைகள் பழுதுபட்டு உடல் துன்பம், மன அமைதியின், செயல்திறம் இழத்தல் ஏற்படுகிறது.

இதனால் சமுதாயத்தில் மதிப்பிழத்தல் ஆகிய குறைபாடுகளோடு வருந்திக் கொண்டே இருக்க வேண்டியதாகிறது.

மெய்யுணர்வு பெற்ற குருவழியால் அறம் பயின்று இறைநிலை விளக்கமும் பெறும் போது தான் தடம் மாறிய மன ஓட்டம் நேர்மையான இயக்கத்திற்குவரும்.

துன்பத் தொடரிலிருந்து விடுலை கிடைக்கும். வேறு எந்த வழியும் மனிதன் உயர்வதற்கு இல்லை.

---

## 7. மனம் ஒரு நிலையற்ற, நிலையாமை உடைய பொருள்

மனம் இறத்தல், இழத்தல் பற்றித் தாயுமானவர் பேசும்போது, மனம் ஒரு நிலையற்ற, நிலையாமை உடைய பொருள் எனத் தோன்றுகின்றது.

அதாவது மெய்ப்பொருள் அல்லாத, மெய்ப் பொருளிலிருந்து மாறுபட்ட ஒரு பொய்ப் பொருள் என, உயிர், உடலில் இணையும் போது அல்லது புகும்போது மனமும் அங்கேயே தங்கி விடுகின்றது.

உயிர் உடலோடு கலந்து இருக்கும் காலம் அனைத்தும் மனதும் அங்கேயே குடியிருக்கின்றது. அந்த நிலையில் இறைவன் சித்தாக அவற்றை நடத்துகின்றான் போலும்.

எந்நாளும் உடலிலே உயிராம் உனைப்போல்
இருக்கஇலை யோ ? மனதுஎனும்

யானும் என் நட்பாம் பிராணனும் எமைச்சடமது
  என்றுஉனைச் சித்தென்றுமே
அந்நாளில் எவனோ பிரித்தான் (சுகவாரி12)

இராமலிங்க வள்ளலாரின் பிரார்த்தனை




நிலையாமை உடைய மனதை அடக்கி ஆள்வதற்குத் துணைபுரிக எனக் கந்தகோட்ட கந்தனிடம் வேண்டுகிறார் இராமலிங்க அடிகள்.

- மனம் நிலையாமை உடையதால் இறைவனை உணராத காரணத்தால் இறைவனைப் பற்றிக் கூறுகின்ற தனது குருவையும் மதிக்க மாட்டான்.
- இறைவனாகிய உன்னுடைய பெருமைகளைப் பேசுகின்ற கல்வியையும் கற்க மாட்டான்.
- சும்மாவும் இருக்க மாட்டான்.
- உள்ளத்தில் காம எண்ணங்களை நினைத்துக் கொண்டு அதில் கிடந்து துன்புறுவான்.
- கோபம் என்னும் கொடிய நீரில்லாத காட்டில் துன்புறுவதைப் போலத்தான் துன்புறுவான்.
- பேராசை காரணமாகப் பிறருக்குக் கொடுக்காமல் குறுகிய புத்தியுடன் குகைக்குள் வாழ்வது போன்று வாழ்வான்.
- ஆசை, மயக்கம் காரணமாக வாழ்க்கையை இருளாக்கி அங்குச் செல்வான்.
- மனிதர் உருவாக்கிய மதம் என்ற செய்யப்பட்ட குன்றில் ஏறிக் கீழே விடுவான். அதனோடு தொடர்புடைய பொறாமை, பகைமை, ஆகிய படுகுழியில் உள்ளே இறக்குவான்.
- நான் சொன்னதைக் கேட்டமாட்டான்.
- எனது செயலுக்குள் அடங்கமாட்டான்.
- அதற்கு நான் என் செய்வேன்

மனமான ஒரு சிறுவன் மதியா குருவையும்
  மதித்திடான் நின் அடிச்சீர்
மகிழ்கல்வி கற்றிடான் சும்மாஇ ரான்காம

---

மடுவினிடை வீழ்ந்துசுழல்வான்
சினமான வெஞ்சுரத் துழலுவன் உலோபமாம்
சிறுகுகையி னூடுபுகுவான்
என்சொல்கே ளான்எனது கைப்படான் மற்றிதற்
கேழையேன் என்செய்குவன்...
(இராமலிங்க அடிகளார்.அருட்பா.22)

என்று மனத்தை அடக்கி ஆள்வதற்கு துணை புரிய வேண்டும் என வேண்டுகிறார்.

# 8.மனதின் இயல்புகள்

ஐந்து பூதங்களின் நுட்பத்தை ஐம்புலன்கள் வழியாக மனம் உணருகின்ற பொழுது, அது உலகப்பற்றில் ஈடுபடுகிறது.

எல்லாவிதமான நினைவுகளுக்கும் மனம். இடமாக இருந்தாலும் உலகில் கண்டவற்றை மனம் பதிவு செய்து, மீண்டும் உயிர் அவற்றை நினைப்பதற்குக் காரணமாயிருந்தாலும் மனத்தினைப் பெரியதொரு மாயா தத்துவமாகத் தாயுமானவர் கருதினார்.

எனவே மனதினை இயல்புகளைப் பராபரக் கண்ணிகளில் பல இடங்களில் விளம்பியுள்ளார்.

மனம் துன்பப்படக்கூடியது. ஆசைக்கு உட்பட்டு அழிவினைத் தேடிக் கொள்ளும் தன்மை உடையது.

"கொள்ளித் தேன்கொட்டிக் குதிக்கின்ற பேய்க் குரங்காய்

கள்ளமனம் துள்ளுவது என் கண்டாய் பராபரமே" (பராபர.10)

ஒருவர் எத்தகைய சித்தியைப் பெற்றிருந்தாலும், மனதை அடங்காமல் வெறும் வாய்ப்பேச்சினால் பயன் ஒன்றும் இல்லை என்பதை விளக்க வந்த தாயுமானவர்,

"சினம் இறக்கக் கற்றாலும் சித்தி எல்லாம் பெற்றாலும்

மனம்இறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே" (பராபர.11)

- தீய செயல்களை செய்யவல்லது. அடக்கமற்றது. யான் எனது என்னும் பற்றுடையது.
- ஐம்புலன்வழி செல்லவல்லது. இரக்கமற்றது. குறிக்கோள் இல்லாதது .
- நான் நினைத்தால் போல வேறொன்றினைப் பற்றி உழலும் தன்மையது. அறியாமை உடையது.
- வஞ்சம் உடையது.
- இழிவானது.
- வஞ்சம், பொய் என்பனவற்றினை மனதில் கொண்டுத் தடுமாறும் இயல்புடையது

எனத் தாயுமானவர் மனதின் இயல்புகள் பற்றி பாடியுள்ளார்.

மனம் பிறவியை உண்டாக்குகின்ற பொறி புலன்களில் செல்லவல்லது என்பதனை பின்வரும் பாடல் வாயிலாக அயியத்தருகின்றார் . அப்பாடல்...

"தவமே தரும்ஐம் புலப்பொறிக் கேஎன் அறிவுபொல்லாப்

பவமே லிளைக்க என் றோ. வெளி மான்எனப் பாய்ந்ததுவே. (பாயப்புலி(10)

மனம் துயர் கொள்வல்லது என்பதனை,

"எண்ணாதது எண்ணிய நெஞ்சே! துயர்ஒழி....."(பாயப்புலி(13)

என்றும் -  மனம் துள்ளும் இயல்புடைய என்பதனை,

துள்ளும் அறி யாமனது பலிகொடுத் தேன் கர்ம
  துஷ்டதே வதைகள் இல்லை
துரியநிறை சாந்ததே வதையாம் உனக்கே
  தொழும்பன்அன் புஅபிடேகநீர்

உள்ளுஉறையில் என்ஆவி நைவேத்தி யம்ப்ராணன்
  ஓங்குமதி தூபதீபம்

---

ஒருகாலம் அன்றுஇது சதாகால பூசையா
ஒப்புவித் தேன் கருணைகூர் ......

தெள்ளிமறை வடியிட்ட அமுதப் பிழம்பே
தெளிந்ததே னேசீனியே
திவ்யரச மியாவுந் திரண்டொழுகு பாகே
தெவிட்டாத ஆனந்தமே
கள்ளன் அறி வூடுமே மெள்ளமெள வெளியாய்க்
கலக்கவரு நல்லஉறவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே. (கருணா.கடவுள் 54).

என்றும் கூறுகின்றார்.

துள்ளுமறியா மனது என்ற பாடலில், மனதினை துள்ளுகின்ற ஆட்டிற்கு உவமித்து, மனம் உலகப் பெ்ருட்களைப் பற்றுகின்றது என்றும், அதனால் பிறப்பு இறப்பு என்பன ஏற்படுகின்றன என்றும் கூறுவது குறிப்பிடத்தக்கது.

மனம் மோகம் முதலான குணங்களில் என்பத்னை வலியுறுத்தும் பாடல் வருமாறு.

வேத முதலாய் விளங்கும் சிவவடிவாம்
போத நிலையிற் பொருந்தாமல்-ஏதமிகு
மோகாதி அல்லலிலே மூழ்கினையே நெஞ்சே!இத்
தேகாதி மெய்யோ? தெளி. (உடல்.பொ.476)

கள்ளம், பொறாமை முதலிய குணங்களில் உள்ளம் சூழப்பட்டது என்பதனை அறியத்தரும் பாடல் இதோ......

வஞ்சனை அழுக்கா று ஆதி வைத்திடும் பாண்ட ம்ஆன நெஞ்சனை, வலிதில் மேன்மேல் நெக்குநெக்கு உருகப் பண்ணி அஞ்சலி செய்யுங் கையும் அருவிநீர் விழியு மாகத் தஞ்சமென் றிரங்கிக் காக்கத் தற்பரா பரமு னக்கே. (வம்பேனேன்.295)

மனம் உயிர்களுக்கு துன்பத்தினை விளைவிக்கவல்லது என்பதனை

“மனமான வானரக்கைம் மாலை ஆ காமல்

எனையாள் அடிகள் அடிஎய்தும் நாள் எந்நாளோ? (எந்நாள்கண்ணி. 1146)

மனம் எண்ணுகின்ற எண்ணங்களுக்கு அளவில்லை என்பதை என்ன அருமையாகச் சொல்கிறார் பாருங்கள்.

“எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிஎண்ணி ஏழை நெஞ்சம் புண்ணாகச் செய்தது இனிப் போதும் பராபரமே. (பரா.670)

தம் அன்பாலும் பண்பாலும் அறிவாட்சியை மலர வைத்த அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி

“மனமது இயற்கையின் மாபெரும் நிதியலோ

மனமதைத் தாழ்த்திட மயக்கத்தால் துன்பமே

மனமதை உயர்த்தினால் மட்டில்லா இன்பமாம்

மனத்திலே உள எல்லாம் மற்றுஎங்கு தேடுவீர்?” (ஞா.வாழ்வும்.பா.303)

என்றும் மனதின் இயல்புகளை விவரிக்கின்றார்கள்.

# 9.மனம் பல செயல்கள்

மனம் பல செயல்களைச் செய்யும் இயல்பினது. சிறு போதையைப் பெரிதாகவும், நீண்ட காலம் நிலை நிறுத்தும்.

மிகச் சாதாரணமான இந்த உலகை ஏதோ உலகம் என எண்ணச் செய்யும்.

சிற்றின்பமே உயர்ந்தது எனத தவறாக உணர்த்தும். தேவையற்ற சுமையைச் சுமக்க நம்மை ஆயாக்கித் தான் சும்மாடு ஆகும்.

அதோ நில்லாது,

---

- நாளும் துர்ப்புத்தி புகுத்தி நற்புத்தியைச் சூறையிட்டு இந்திர ஜாலக் கோலம் காட்டும் (சச்சி.4)
- பொன், புவி, மடப் பூவையரை மெய் எனக் காட்டி நம்மைக் கவர்ந்திழுக்கும் (தன்னை.1)
- வாதனை பெருக்கும். வசம் செய்து துன்மார்க்க போதனை செய்யும் (கற்புறு.4)
- பள்ளம் தோறும் புனல் பரவவது போல, அந்த உள்ளம் உலகில் எல்லாம் பறக்கும் (பல்வகை.10)

இத்தகு செயல்களுடைய நெஞ்சை,

- அளவளாவு நெஞ்சாகவும் (மௌன.10)
- துன்றும் கவலை பொருந்தியதாகவும் (ஆகார.30)
- சடம் ஒத்த தாகவும் (நினைவுஒன்று.9)
- உகந்து நேசிக்கு நிலையிலும் (பொன்.170)
- தன்னர் நெஞ்சாகவும் (ஆசைஎனும்.24)
- அடியார் தொடர்பு கிடையாமையால் வாடிய நெஞ்சாகவும் (திடமுறவே.7)
- நேய நெஞ்சாகவும் (எந்.அன்பர்.10)
- பழுத்த மனமாகவும் (எந்.அன்பர்.11)

தாயுமானவர் காட்டுகின்றார்.

சங்க இலக்கியம் முதல் பாரதியார் வரையுள்ள கவிஞர்கள் தம் பாடல்களுள் தமக்கு ஏற்பட்ட அனுபவங்கைக் கொண்டு, மனத்தின் செயல்களைக் கருதி உள்ளனர்.

அவற்றுள் நல்ல செயல்களும், தீயசெயல்களும் அடங்கிஉள்ளன. அவற்றின் அடைச் சொற்கைக் கொண்டு பார்க்கும் போது நமக்குச் சில செயல்களை ஓரளவுக்குக் கணிக்கலாம்.

1. அவவுக்கொள் மனம்
2. அவிழும் மனம்
3. அன்பு கலந்த மனம்
4. ஆர்வ மனம்
5. அன்பிழைத்த மனம்
6. அற்றம் நீத்த மனம்
7. ஆய்வுறு மனம்

8. அறம் திகழுமனம்
9. ஓர்ந்தமனம்
10. உருகிய மனம்
11. உவக்கின்ற மனம்
12. களித்த மனம்
13. சுரவிலா மனம்
14. காதல் செய் மனம்
15. கோணா மனம்
16. குளிர் மனம்
17. களிப்புறு மனம்
18. செம்மை மனம்
19. செயல்படு மனம்
20. குறையா மனம்
21. சாந்த மனம்
22. துள்ளு மனம்
23. துளக்கமில் மனம்
24. தூயமனம்
25. தோன்றிவிரிபு மனம்
26. நல்ல மனம்
27. நீள்மனம்
28. நேய மனம்
29. நசையறுமனம்
30. தெய்வமனம்
31. பரந்த மனம்
32. பரவு மனம்
33. புரைபடாமனம்
34. மன்மனம்
35. மையறு மனம்
36. மறுவிலாமனம்
37. மனமெனும் தோணி
38. மனவிளக்கு
39. மனமே கோயில்

40. விரிந்த மனம்
41. வஞ்சமிலா மனம்
42. வெள்ள மனம்
43. உன்னுமனம்
44. கனி மனம்

மனதிற்கு வேண்டாத தன்மைகளும் பல காணப்படுகின்றன.

1. அவிழும் மனம்
2. அடிமை மனம்
3. அற்ப மனம்
4. அறிவில் சிறுமனம்
5. இரங்கா மனம்
6. இரும்பு மனம்
7. இருள் உறுமனம்
8. ஈனம் பழுத்த மனம்
9. உழலு மனம்
10. ஓடுகின்ற மனம்
11. கல்மனம்
12. கல்லினையொத்த வலியமனம்
13. கரிய மனம்
14. கள்ளமுள்ள மனம்
15. கல்லாமனம்
16. கருங்கா மனம்
17. கதவுமனம்
18. கன்றிய மனம்
19. கொடுமைசெயு மனம்
20. கொடிய மனம்
21. கொதிக்கும் மனம்
22. கறுத்த மனம்
23. கவர் மனம்
24. கட்டுங்கடங்காமனம்
25. காழ்த்த மனம்
26. குரங்கு மனம்
27. சவலை மனம்
28. சிறுமனம்

29. சஞ்சலப்படு மனம்
30. செற்ற மனம்
31. சோகமனம்
32. திருந்தா மனம்
33. துன்புறுத்து மனம்
34. துன்று மனம்
35. தொடக்கறா மனம்
36. தெருளுடைமனம்
37. தேட்டுகடங்காமனம்
38. பழான மனம்
39. பாழ்த்த மனம்
40. புல்லிய மனம்
41. பேய் மனம்
42. பொறாமை மனம்
43. பரிவிசுத்த மனம்
44. பேதை மனம்
45. பித்தேறிஉழல் மனம்
46. பாவி மனம்
47. புரைசேர் மனம்
48. பித்த மனம்
49. புழுங்கு மனம்
50. பேயாய் உழல் மனம்
51. மனம் எனும் தீ
52. மனப்பேய்
53. மனப்பாம்பு
54. மனவஞ்சகமாகக் கடல்
55. மனக்கருங்கல்
56. மனக்குகை
57. மனப்பம்பரம்
58. மனம் பிள்ளைக்குரங்கு
59. மனங்கங்குல்
60. மனமான சிறுவன்
61. மனப் பீடம்
62. மனச்சிறுபுள்
63. மாயாமனம்

64. மையல் கொள்மனம்
65. மருளார் மனம்
66. மாயங்கலந்த மனம்
67. மருவிய மனம்
68. மயலுள்ள மனம்
69. மலங்கழிக்கின்ற மனம்
70. மையல் கூர்மனம்
71. மனம்பொழி மனம்
72. மருட்டுக்கடை மனம்
73. மருள்வலையிலகப்பட்ட மனம்
74. மருள் நிறைந்த மனம்
75. வஞ்ச மனம்
76. விலங்கு மனம்
77. மும்மலமடஞ்செறிமனம்
78. மால்கொள்ளும்மனம்
79. வணங்கா மனம்
80. வேனிற் மனம்
81. வினைமனம்
82. வெறுப்பு மனம்
83. வெங்கதம் மனம்
84. வீசய மனம்
85. வீண்செலவு மனம்
86. வாது நினைக்கு மனம்
87. வேகாத மனம்.

இவ்வாறு மனம் நல்லதைச் செங்வதைவிடத் தீமையை மிகுதியாகச் செய்கிறது என்பதை இதனால் உணரலாம். அதனால் தான் தாயுமானவரும் தீமை செய்யும் மனதை பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

## அளவளாவு நெஞ்சாகவும்.....

நமது உள்ளம் ஒரு தூய தடாகத்திற்கு சமமானது. அதில் எழில் நின்ற தாமரையும் அல்லியும், தன் குடும்பத்துடன் வாழ வண்டு என்னும் விருந்தாளியை உபசரித்து நிற்கும் அழகு அன்புமயமாகத் தெரியும்.

அந்த நீரில் கல் ஒன்று எறிந்தால் கலங்கும் அதே நிலைதான் நம்மனமும். மனதை பராமரித்து தொடர்ந்து கவனித்து ஆராய்ச்சி செய்தோமானால்.....

உள்ளம் என்னும ஓர் உன்னத நண்பனைபோல வேறு எதனையும் காண இயலாது.

## முண்டக உபநிடதத்தில்.........

மனம் என்கிற ஒரு சொல் ஏன் இவ்வளவு பெருமையாக பேசப்படுகிறது என்பதற்கான காரணம் முண்டக உபநிடதத்தில் உள்ளது.

- “எதனிடம் பிராணன் ஐந்து விதமாகப் புகுந்து உள்ளதோ, இந்திரியங்களுடன் கூட மக்களின் மனதும் எல்லாமும் எதனிடம் சேர்க்கப்பட்டுள்ளதோ அந்த ஆத்மா சூட்சமமானது, சித்தத்தால் அறியக்கூடியது. பரிசத்தமானது. உள்ளத்தில் அது தானாகவே பிரகாசிக்கும்.”

மனம் என்பது இங்கு நினைவின் இருப்பிடமாகக் கருதப்படுகிறது. சித்தம் என்பது சிந்தனையின் கருவறை, சித்தத்தை அடக்கியவன் சித்தன்.

## உள்ளம் கூறும் உண்மை.

முற்காலத்தில் ஞானிகள், உள்ளம் பற்றியும், ஆன்மாவைப் பற்றியும், மூலப்பொருள் எது என்றும் ஆராய்ந்தனர். ஆனால் வேதாத்திரி மகரிஷியோ, அதனைத் தெள்ளத் தெளிவாய் நான்காக பகுத்துள்ளார்.

1. புத்தி 2. சித்தம் 3. பேரறிவு 4. ஆதிநிலை 5. புத்தி

## மனதின் இருப்பிடம்....

பல செயல்கள் செய்யும் மனதின் இருப்பிடத்தை நாம் தெரிந்து கொள்வது அவசியமல்லவா?

---

மனம் ஒவ்வொரு உடலிலும் தனியாய் அமைந்த ஓர் இன்பம். அதனைக்காண வேண்டுமாயின் உடல் நிலையினை அறிதல் அவசியம். உடல் ஐந்து நிலைகளைக் கொண்டது.

1. உணவு மயமான உறை
2. காற்றுமயமான உறை
3. மனமயமான உறை
4. அறிவு மயமான உறை
5. ஆனந்த மயமான உறை.

மேற்கூறப்பட்ட ஐந்து உறையில் மனோமய உறையில்தான் உள்மனம் ஐந்து பொறியின் வாயிலாக “நான்” என்ற தன்முனைப்புடன் உலகத்தை உணர்கிறது.

வேதாந்தக் கோட்பாடுபடி அந்தகரணம் என்று மனத்தில் நிலைகளைப் பிரிப்பர். மனம், புத்தி,அகங்காரம், சித்தம், ஆன்மா.

புத்திபுத்தி என்பது புறமனமாகவும் அறிவின் நான்காவது படி நிலையில் நிற்கவும் செய்கிறது. இது மேலோட்டமாக மனத்தின் வேறுபெயர் என்றும் சொல்லலாம்.

## சித்தம்.

சித்தம் என்பது நடுமனம். அறிவியக்கப் படி நிலையில் மூன்றாம் இயக்க நிலையமாகக் கொண்டு இயங்குகின்றது. பல பிறவிகளில் உணர்ந்த அறிவுச் சிறப்பினை ஆற்றல் வடிவில் தம்மிடம் கொண்டது.

## பேரறிவு

இது அடிமனமாக கருதப்படுகிறது. வித்து என்னும் சத்துப் பொருளை இயக்க நிலையமாகக் கொண்டு இயங்குகின்றது. பல பிறவிகளின் உணர்ந்த அறிவுச் சிறப்பினை ஆற்றல் வடிவில் தம்மிடம் கொண்டது.

## ஆதிநிலை

இதனை தெய்வ நிலை அறிவாகக் கூறுகிறார். இது பிரம்மநிலை என்றும், பேராதார நிலை என்றும், ஒடுக்க நிலை என்றும் வேதாத்திரியார் கூறுகிறார்.

# 10.மனதின் அறியாமை

மனம் அறியாமை உடையது என்கிறார் தாயுமானவர். எனவே

- மடநெஞ்சம் எனப்படுகின்றது. (நினைவுஒன்று.4 – ஆசையெனும் – பாயப்புலி.17)
- சில நிலைகளில் திண்மையும் வலியும் உடையது. (எந்.அடி.-பைங்.32)
- வன்மை இழந்து குழையும்போது. உள்ளிருந்த கள்ளம் குழைகின்றது. (பரா.361)
- உள்ளக் கொதிப்பு அகலும் போது இறைவன் கணை பூக்கின்றது.(பரா. 368)
- வன்நெஞ்சத்தால் இழந்த வாழ்வு மீண்டும் கிடைக்கின்றது.

## மனத்தூய்மை

அறியாமை உடைய மனதை அறிவுள்ளதாக மாற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும். மனத்தூய்மை பெற வேண்டும்.

"சித்த விகாரத்தால் சின்மயனைக் காணாமல்

புத்தி கலங்கிப் புகுந்தென் பொறிவழியே"

மனம் சிந்தனையின் சாயலாக உருமாற்றம் அடையும் என்பது யோகிகளின் அசைக்க முடியாத நம்பிக்கை.

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்

ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்" (திருமந்திரம்)

ஒவ்வொரு மத நூலும் தங்களுக்கென்று சில வழிமுறைகளைக் கைக்கொண்டுள்ளது.

ஆனால், உள்ளத்தில் குற்றம் இல்லாதிருப்பதே ஒழுக்கம் என்று அனைத்து அறிவு நூல்களும் கூறுகின்றது.

திருவள்ளுவப் பெருந்தைகையோ மனத்தூய்மையே சரியான ஒழுக்கம் என இங்கு வலயுறுத்துகிறார்.

"புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை

வாய்மையால் காணப்படும்."

மனத்தூய்மையைக் கடைப்பிடிப்பவனே உண்மையான அறத்தைக் கடைப்பிடிப்பவன் ஆகிறான். உண்மை இன்பம் என்ன என்று தெளிகிறான்.

# 11.மனதின் பல்வேறு பெயர்கள்

இதயம், உள்ளம், நெஞ்சம், நெஞ்சு, நெஞ்சகம், மனம் போன்ற சொல்வடிவங்கள் ஒரு பொருள் குறித்து வருவதுபோல் தோன்றுகின்றன. ஆயின்..

"தொடக்கும் என் நெஞ்சம் மனமற்ற பூரணத்

தொட்டிக்குளே...." (பாயப்.12)

என்ற தொடர், நெஞ்சம் என்பதன் உளளிருந்து அதனைச் செலுத்தி ஆட்டிப்படைப்பது மனம் என்ற எண்ணத்தை உருவாக்குகின்றது. எனினும் இதனை விளக்குதல் எளிதன்று.

மனம், நெஞ்சு, அகம், உள்ளம் பொன்ற பல சொற்கள் மனத்தைக் குறிப்பிட்டாலும் செயல்பாடுகளுக்குத் தக்கச் சொற்கள் அமைகின்றன.

அதில் உள்ளம் என்ற சொல் வினை அடிப்படையில் தோன்றிய சொல், உள்ளுதல் என்றால் நினைத்தல் என்று பொருள்.

----------------------------------------------------------------------------------------------

உள்ளி, உள்ளானான், உள்ளுவான், உள்ளல், உள்ளப்படும் போன்ற சொற்கள் திருக்குறளில் வினை அடிப்படையில் வந்துள்ளன.

மனத்தின் உறுதியைக் காட்டுவது உள்ளம் என்றசொல். உள்ளம் என்ற சொல் திருக்குறளில் அறத்துப்பாலில் ஒரு இடத்திலும், பொருட்பாலில் எட்டு இடங்களிலும், இன்பத்துப்பாலில் ஐந்து இடங்களிலும் வருகிறது.

பொருள் ஈட்டுவதற்கு உள்ளம தேவை. அதனால் பொருட்பாலில் எட்டு இடங்களில் வருகிறது.

"உள்ளம் உடைமை உடைமை பொருள் உடைமை

நில்லாது நீங்கி விடும் (குறள் 592)

"வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்த

உள்ளத்து அனையது உயர்வு. (குறள்.595)

திருமூலர்

"உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்

வள்ளல் பிரானார்க்கு வாய் கோபபுரவாசல்

தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்

கள்ளப்புலன் ஐந்தும் காணா மணிவிளக்கே" (திருமந்திரம்)

மனம் உறுதியான நிலையிலும் தெளிவான நிலையிலும் உள்ளம் ஆகிறது. உள்ளம் அறிவோடு இணைத்து இறைநிலை அடைகிறது.

அதனைத்தான் தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம் என்று கூறுகின்றார். இதனை இன்னும் விளக்கமாக பாமரமக்களின் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் இவ்வாறு கூறுகிறார்.

மனம் உறுதியான நிலையிலும் தெளிவான நிலையிலும் உள்ளம் ஆகிறது.

உள்ளம் அறிவோடு இணைத்து இறைநிலை அடைகிறது. அதனைத்தான் தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம் என்று கூறுகின்றார்.

இதனை இன்னும் விளக்கமாக பாமரமக்களின் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் இவ்வாறு கூறுகிறார்.

- மனதை அதன் அலை விரைவுச் சிறுகச்சிறுகக் குறைத்து நிலைப்படுத்தி, அறிவாக உள்ள தானே அதுவாகி காண்பது மெய்யுணர்வு தானே அதுவாகி அறிந்து கொள்ளக்கூடிய நிலையில்தான் அவனே நான், நானே என்று உணரக்கூடிய தெளிவு உண்டாகிறது.
- மனதுக்கும் அறிவுக்கும் உள்ள தொடர்பு என்ன என்றால் அலையும், நிலையும் போன்றதே அந்தத் தொடர்பு, மீண்டும் அதை ஆழமாக நினைவு கொள்வோம்.
- அசையாத நீராக இருக்கக்கூடிய நிலையிலே இறைநிலை என்று சொல்கிறோம். அசையும் இடத்திலே அலை என்கிறோம். அங்கே நிலைத்த நிலையில் அறிவு. இங்கே அலையும் செயலில் மனம்.

# 12.மனம் இழந்த நிலை

"மனம்" இல்லாத, இழந்த நிலையைத் தூயநிலை எனத் தாயுமானவர் கருதுவது தெரிகின்றது.

இந்த "இன்மை" எனத் தாயுமானவர் கருதுவது தெரிகின்றது. இந்த "இன்மை" மனதின் செயலற்ற நிலையாக இருக்க வேண்டும்.

இதனைத் தாயுமானவர் பாடல்களின் சில அடிகள் தெளிவுறுத்துகின்றன. "மறிந்த மனமற்ற மௌனம்" செறிந்திடவே...(உடல்.76)

"உள்ளதே போது நான்எனக்கு உளறியே

ஒன்றைவிட்டு ஒன்று பற்றிப்

பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற

பரிசுத்த நிலையை அருள்வாய்" (பரிபூரணா.10)

வாடுதலும் மற்றுமேல் ஒன்றற்று இரண்டற்று

வாக்கற்று மனமும் அற்று....." (சின்மயா.8)

"மனம் இல்லை அம்மனத்தின மில்லை வேறுமாரு

வரவில்லை போக்கும் இல்லை." (ஆனந்த.10)

இத்தகு, மனதற்ற பரிசுத்த நிலை பெற வழியும் கூறுகின்றார் நம் தாயுமானவர்.

ஆசை அறுத்தல், யோகம், பிராணலயம் என்பவற்றால் இந்த நிலை உறும் என்பது தெரிகின்றது.

"பற்றுவன அற்றிடும் நிராசை என்று ஒரு பூமி,

பற்றிப் பிடிக்கும் யோகப்

பாங்கில் பிராணலயம் என்னும் ஒரு பூமி, இவை

பற்றின்மனம் அறும் என்னவே.....(சுகவாரி.6)

இவ்வாறு, மனதை இல்லாமல் செய்தல், செயலற்ற தாக்குதல், உயர்நிலை அதாவது முக்திக்கு முன்படிநிலை எனலாம்.

# 13.பலவகைப் பற்றுகள் உள்ள மனம்.

பலவகைப் பற்றுள்ள மனதை தாயுமானவர் தம் பாடல்களில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

- பல்வகைப் பற்றுக்கள் உடையது மனம். அது ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றி உழல்கின்றது.(மௌன 10)
- ஒன்றை நினைந்து ஒன்றை மறந்து ஓடுகின்றது. ((பரா.87)

- அந்த உறழ்ச்சியையே விதவிதமாகப் படைக்கும்போது பலகோணக் காட்சியாக மனம் தென்படுகின்றது. தெருளாகி மருளாகி உழலுவது அதன் இயல். (ஆனந்த.2)
- சாண் வயிற்றின் பொருட்டாக மண்டலமும் விண்டலமும் ஒன்றாகி மனது உழன்று மயங்குதலும் உண்டு. (ஆனந்த.3)
- அம்மறுகிச் சுழலும் மனக்குரங்கு மாள வேண்டும். (ஆசை.13)
- எத்தனை விதங்கள் தான் கற்றாலும் கேட்டாலும் எந்தன் இதயம் ஒடுங்கவில்லை. (ஆனந்த.9)
- கல்லாத மனம் ஒடுங்கி யபரதி பெற இயலாது (எங்கு8)
- அம்மனது என்பது தன் வசமாய் வராது நிற்பதாக எடுத்து மொழிகின்றார். (தன்னை.5) தாயுமானவர்.
- பலமுறை எடுத்துக் கூறினும் உணராது அமைகின்றது மனம் (ஆசை.8)
- எண்ணாத எண்ணித் துயருறுகின்றது. (பாய்ப்.13)
- பொல்லா மயக்கத்தில் ஆழ்கின்றது. பயனற்று அமிழ்கின்றது. (பாயப்.45)
- தன்னை அடுத்து வந்த எல்லாவற்றினையும் பற்றிக் கொள்கின்றது. (பாயப்.49)
- நிலையமைக் கருத்தைத் தன் அறிவில்வைத்துக் கொள்ளாத புன்மை நெஞ்சு அது (பாயப்.51)
- மெய்யைப் பொய் எனவும் பொய்யைத்தான் மெய் எனவும் கூறும் இயல்புடைய அந்நெஞ்சை, மெய்அணையாப் பொய் நெஞ்சு எனல் (உடல்.67) ஏற்புடைத்தே
- அத்தகு நெஞ்சின் பின்னே ஓடலால் பயன் இன்று (காடுங்.1)
- அக்குணம் இலா மனம் எனும் பேய்க் குரங்கின் பின்னே மாறாத கவலையுடன் சுழலும் வண்ணம் என்னை ஏன் வைத்தாய் (கல்லா.4)?
- அந் நெஞ்சமோ ஆயிரம் சொன்னாலும்அறியாத வஞ்ச நெஞ்சமாய் இருக்கின்றது (பரா.195)
- ஒன்றும் அறியா அவ்விருளாம் உள்ளம் (பரா.300)
- வன் நெஞ்சம் (பைங்.32)

நாதரைச் சேர்ந்து வாழும் வாழ்வை இழக்கச் செய்கின்றது என வருந்துகின்றார் தாயுமானவர்.

# 14.மனதின் பல்வேறு உணர்வுகள்.

---

பல சிறு சிறு தொடர்களாலும் அடைகளாலும் மனத்தின் பல்வேறு உணர்வுகளை செயல்களை எடுத்து மொழிதல் தாயுமானவரது இயல்பு.

மனிதனின் செயல்பாடுகள் அனைத்தும் மனமே காரணம். அவன் வினை கூட்டிற்கும் அதுவே அடிபடை (சச்சி.10) என்பன இவ் விளக்கங்களால் தெரிகின்றன.

அச்சம் என்பது மனத்தின் ஒரு பண்பு. உயிர் அச்சம், அதாவது மரணம் வரும் என்ற எண்ணத்திற்கே அஞ்சும் அச்சம், "தேச நீங்கும்என வெண்ணிலோ நெஞ்சம் துடித்து துயா உருவேன்" (பரிபூரண1) எனச் சுட்டப்படுகின்றது.

"இறப் பொடு பிறப்பை உள்ளே எணணினால் நெஞ்சது பகீர்எனும்" (சின்மயா.5) அவ் வெண்ணத்தைால் இரவு பகல் உறகம் இன்றி இருந்தன இருவிழிகள் என்கிறார்.

வினைப் பந்தத்தால் உள்ளம் பதைபதைக்கிறது (சுகவார.11) இறைவனை நெருங்கும்போது, "படபடென நெஞ்சம் பதைத்து உள்நடுக்குற" (கருணா.9) அமைந்தமையையும் காட்டுகின்றார்.

இந்த மனம் இருக்கிறதே, இது ஒரு விசித்தரமான ஒன்று.

நம்முடைய மனம் தான். இருந்தும் நாம் சொல்வதை கேட்பது இல்லை.

பார்க்காதே என்றால் பார்க்கும். தொடாதே என்றால் தொடும். இருப்பதை விட்டு விட்டு இல்லாததற்குப் பறக்கும்.

மனதை அடக்க வேண்டும் என்று நினைத்தால், அது நம்மை அடக்க முயற்சி செய்கிறது.

மனம் நம்மை நல்ல வழியிலும் இழுத்துச் செல்லும், கெட்ட வழியிலும் இழுத்துச் செல்லலாம்.

மனதை வலு கட்டாயாமாக ஒரு வழியில் செலுத்தினால், நிச்சயம் அது நம் கட்டுபாட்டை மீறி எதிர் திசையில் ஓடும்.

அதை, அதன் வழியில் போய், கொஞ்சம் கொஞ்சமாக நம் வழிக்கு கொண்டு வர வேண்டும்.

என் மனமே, உன்னை நான் அடி பணிகிறேன். கெட்ட பசங்க சவகாசத்தை விடுத்து, இராமானுஜரின் மேல் அன்பு செய்யும் நல்லவர்களின் திருவடிக்கீழ் என்னை கொண்டு சேர்த்ததற்கு

பேரியல் நெஞ்சே ! அடிபணிந்தேனுன்னைப், பேய்ப்பிறவிப்
பூரியரோடுள்ள சுற்றம் புலர்த்திப், பொருவருஞ்சீர்
ஆரியன் செம்மை இராமானுச முனிக்கன்பு செய்யும்
சீரியபேறுடையார், அடிக்கீழென்னைச் சேர்த்ததற்கே. **(இராமானுஜர் நூற்றந்தாதி - அடியார்க்கு அடியார் )**

இராமானுஜர் ஒரு அடியார்.
அவர் மேல் அன்பு செய்தவர்கள் அவரின் அடியார்கள்
அப்படிப்பட்ட அடியவர்களின் திருவடிக்கீழ் இவர் இருக்கிறார்...

எவ்வளவு பணிவு. எவ்வளவு தன்னடக்கம்.

ஆண்டா ஆலங்காடா உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே என்பார் சுந்தர மூர்த்தி ஸ்வாமிகள்

தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்பது தெய்வப் புலவர் சேக்கிழார் வாக்கு

அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விடு விட்டால் இன்ப நிலை தானே வந்து எய்தும் பராபரமே என்பார் தாயுமானவர்.

# 15.மனமும் மாயையும்.

அறியாமை உடைய மாயையின் செயலே மனம் என்பதை

“இடம்பெறு வீடும், மின், சேய், ஜகமும், இருநிதியும்

உடம்பைவிட்டு ஆருயிர் போம்போது கூடி உடன்வமோ?

மடம்பெறு மாயை மனமே! இனி இயங்கு வா! மவுனி!

திடம்பெற வைத்த மவுனம் சகாயம் தெரிந்துகொள்ள."
(பாயப்.16.தாஃபா.417)

மாயை என்னும் மூலப்பகுதியை வென்று உள்ளத்தில் வளரும் ஆணவத்தை பிடுங்கி எறிந்துவிட வேண்டும் என்று இடைக்காட்டுச் சித்தர் சொல்கிறார்.

"மூலப்பகுதி அறத்தாண்டவக்கோனெ – உள்ளம்

முளைத்த வேர் பிடுங்கோடா தாண்டவக் கோனே." (இடைக்காட்டுச் சித்தர்)

மாயை என்பதன் சமஸ்கிருத சொல்தான் மாயா.

யாதொன்று ஒரு வினாடிக்கு முன்பு இருந்தது போன்று இருந்து பின்பு இல்லையோ அதுவே மாயை.

அதாவது ஓயாது மாறி அமையும் தன்மை எதனிடம் உள்ளதோ அதுதான் மாயை.

நிலைவேறு என்பது மாயையிடம் இருக்காது. இந்த உலகம் மாயை் இதில் நாம் வசிப்பது மாயை.

நாம் பிறப்பது வளர்வது வாழ்ந்திருப்பது தேய்வது மாய்வது ஆகிய எல்லாம் மாயை. காலமாய் திகழ்வதும் மாயை. மனிதனிடத்து மனதாய் மிளிர்வது மாயை.

இயற்கைக்கும் மாயை என்று பெயர். மாயை என்பது நல்லதா? கெட்டதா? என்ற கேள்வி எழும்போது அது நல்லதும் அன்று கெட்டதும் அன்று என்ற பதில் கிடைக்கும். இதை ஒரு சின்ன உதாரணம் மூலம் விளக்கலாம்.

ஒரு பூனையின் பல் நல்லதா கெட்டதா என்று ஒரு எலியிடம் கேள்வியைக் கேட்டோம் என்றால் அதைவிடக் கொடியது உலகில் வேறு ஒன்றும் இல்லை என்ற பதில் வரும்.

அதே கேள்வியை பூனைக் குட்டியிடம் கேட்டால் தாய்ப் பூனையின் பல்லைவிட நல்லது – இந்த உலகில் வேறு ஒன்றும் இல்லை என்ற பதில் கிடைக்கும்.

ஆக மாயையுடன் தொடர்பு கொள்பவர் மனதிற்கேற்ப நல்லதாகவோ கெட்டதாகவோ காட்சி கொடுக்கிறது.

எல்லாம்வல் பரம்பொருள்தான் பஞ்சபூதங்களாகி கோள்களாகி அண்டங்களாகி தாவரங்களாகி விலங்குகளாகி பேரறிவைப் பெற்ற மனிதனாகவும் பிறப்பெடுத்து உள்ளது என்ற பேருண்மையை சிந்தனையால் அறிவின் திறத்தால் வளரும் வரை சிதரும் மனித மனமே மாயை ஆகும் – என்பார் வேதாத்திரி மகரிஷி.

மாயையின் பிரிவுகளாகிய 36 தத்துவங்கள்.

இறையருள் பதியும் இடம்.

சத்த தத்துவங்கள் – 5 (சிவ தத்துவங்கள்)

1. நாதம்
2. விந்து
3. சாதாக்கியம்
4. மகேச்சும்
5. சுத்த வித்தை

சுத்தா சுத்த தத்துவங்கள் – 7 (வித்தியா தத்துவசங்கள்)

1. மாயை
2. கலை
3. காலம்
4. நியதி
5. அராகம்
6. வித்தை
7. புருஷன்

அசுத்த தத்துவங்கள் 24 (ஆன்ம தத்துவங்கள்)

தன்மாத்திரை ஐம்புலன் ஐம்பொறிகள் ஐம்பூதங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1.ஓசை | 1. செவி | 1. பை | 1.ஆகாயம் |
| 2.ஊறு | 2. மெய் | 2. கை | 2. காற்று |
| 3. ஒளி | 3.கண் | 3. வாய் | 3.தீ |
| 4. சுவை | 4. நாக்கு | 4. நீர்க்கருவி | 4. நீர் |
| 5. நாற்றம் | 5. மூக்கு | 5. மலக்கருவி | 5. மண்கருவி |

## வள்ளாலார் பார்வையில் மாயை

- மாயை என்பது ;--ஆன்மாவிற்கு இயற்கையில் செயற்கையானது. பஞ்ச பூதக் கருவிகளைக் கொண்டு ஒவ்வொரு ஆன்மாவுக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் செயல் புரிவது மாயை என்பதாகும் ,ஆன்மா வாழ்வதற்காக கட்டிக் கொடுப்பது தான் மாயையின் வேலையாகும்,அதனால்தான் அதற்கு இயற்கையில் செயற்கை என்று பெயர் ,....,நல்வினை ,தீவினை என்னும் கன்மம் நீங்காத வரை , இறப்பு பிறப்பை உண்டாக்கி ,அதன் தன்மைக்குத் தகுந்தாற்போல் , ஐம்பூத உடம்பை கட்டிக் கொடுத்துக் கொண்டே இருக்கும்.ஆன்மாவில் பற்றி உள்ள,அதாவது மறைத்து உள்ள,அறியாமை என்னும் மாயாத் திரைகள் நீங்கி முழுமையான அருளைப் பெற்று ,இனி ஆன்மாவிற்கு உடம்பு தேவை இல்லை என்று ,.அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடத்தில் இருந்து ,அனுமதிப் பெற்ற பின்தான்,ஆன்மாவிற்கு வீடு கட்டிக் கொடுக்கும், தன்னுடைய வேலையை நிறுத்திக் கொள்ளும்,அதுவரை மாயையின் வேலை தொடர்ந்து கொண்டே இருக்கும்..இது எல்லா ஆன்மாக்களுக்கும் பொருந்தும்.

வள்ளலார் பதிவு செய்துள்ள பாடல் !

பெருமாயை என்னும் ஒரு பெண்பிள்ளை நீ தான்
பெற்ற உடம்பு இது சாகாத சுத்த உடம்பாக்கி
ஒரு ஞானத் திருவமுதம் உண்டு ஓங்குகின்றேன் நின்
உபகரிப்போர் அணுத் துணையும் உளத்திடை நான் விரும்பேன்
அருளாய ஜோதி எனக்கு உபகரிக்கின்றது நீ
அறியாயோ என்னளவில் அமைக அமர்க
தெருளாய உலகிடை என் சரிதம் உணர்ந்திலையோ
சிற்சபை என் அப்பனுக்குச் சிறந்த பிள்ளை நானே !

---

மாயையால் கட்டிக் கொடுப்பட்ட உடம்பை அருள் ஒளியால் வேதித்து ஒளி உடம்பாக மாற்றிக் கொள்கின்றார் நமது வள்ளலார் .,சிறந்த பிள்ளை என்ற பட்டமும் பெற்றுக் கொள்கின்றார் .

மனம் மனம் என்று பல இடங்களிலும் சொல்கிறோமே, அது என்ன? மனதின் மனிதனாகவே வாழ்வதற்காக இறைவனால் பரிசாக அளிக்கப்பட்ட ஒரு கட்டுப்பாட்டு அமைப்பே மனம்.

மனிதன் என்ற எஜமானன் ஆனந்தமாக வாழ, தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்திசெய்து கொள்ள உதவும் ஒரு வேலையாள் தான் மனம்.

மனிதனுடைய கட்டுப்பாட்டுக்குள் இருந்த மனம், மனிதனைக் கட்டுப்படுத்தும் அமைப்பாக மாறி விட்டதுதான் எல்லா பிரச்சனைகளுக்கும் காரணம்.

எஜமானன் அசந்த நேரத்தில், வேலைக்காரன் எஜமானன் போலச் செயல்பட்டால் அந்தச் சூழ்நிலை எப்படியிருக்கும்?

பக்குவபடாத வேலைக்காரன் எஜமானனாக மாறுவது, குரங்கைப் பிடித்து சிம்மாசனத்தில் உட்கார வைத்தது போல் இருக்கும்.

அதனால் தான் ஞானிகள் எல்லோரும் மனதைக் குரங்கோடு ஒப்பிட்டு "குரங்கு மனம்" என்றுஅழைக்கிறார்கள்.

சிம்மாசனத்திலிருந்து குரங்கு அகற்றப்படாத வரை பிசர்சனைகள், கஷ்டங்கள் தொடரத்தான் செய்யும்.

## மாயை என்பது .........

மனம் பல பிரச்சனைகளை, பல போலிகளை உருவாக்கிக் காண்பிக்கும் தன்மை கொண்டது. அவற்றில் ஒன்று தான் மாயை!

மாயை என்பது இல்லாத ஒன்றை இருப்பதுபோல காண்பிப்பது. இல்லாத ஒன்றை இருப்பது போல நினைத்து அதனால் அதிகம் பயப்படுவது அல்லது அதிக ஆசைப்படுவது இரண்டுமே மாயையின் வெளிப்பாடுகள்.

மாயையை இன்னும் தெளிவாகப் பரிந்து கொள்ள சிறிய கதை ஒன்றினை பார்ப்போமா.....

இரண்டு சந்னியாசிகள் திபெத் நோக்கி பயணப்பட்டிருந்தார்கள். போகும் வழியில் பிச்சை எடுத்து பசியாற்றிக் கொண்டே தொடர்ந்து சென்றார்கள்.

பணக்கார சிவபக்தர் ஒருவர் இல்லத்தில் இருவரும் விருந்து முடித்து விட்டுப் பயணத்தைத் தொடர்ந்ததிலிருந்து வயதான சந்நியாசி கொஞ்சம் பதற்றத்தோடு இருந்தார்.

வயதான சந்நியாசி நடக்கும் போது அடிக்கடி பின்னால் திரும்பிப் பாத்தபடியே நடந்து சென்றார்.

என்றுமில்லாமல் இன்று சந்நியாசி முகத்தில் ஒரு சிறிய கலவரம். நடையில் ஒரு பரபரப்பு.

காலில் சிறு நடுக்கம். அடிக்கடி தோளில் மாட்டிய பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார். உடன் வந்த இளம் சந்நியாசி, “ஏன் இவர் இப்படி கலவரமாக இருக்கிறார்?” என்று யோசித்தபடி நடந்து வந்தார்.

பின்பு ஒரு கிணற்றடியில் இருவரும் தண்ணீர் குடித்துக் கொஞ்சம் ஓய்வெடுத்தார்கள்.

கொஞ்ச நேரத்தில் வயதான சந்நியாசி கண் அயர்ந்து தூங்கி விட்டார். அவரது தூக்கத்தைக் கலைக்காமல் அவருடைய பையை இளம் சந்நியாசி எடுத்துவிட்டார்.

பையைத் திறந்து பார்த்தால், ஒரு தங்கக் கிரீடம் இருந்தது. (தங்கக் கிரீடம், சிவபக்தர் பரிசாக கொடுத்தது) வயதான சந்நியாசியின் பரபரப்பிற்கும். படபடப்பிற்கும என்ன காரணம் என்பது இளம் சந்நியாசிக்குத் தெளிவாகத் தெரிந்தது.

இளம் சந்நியாசி, பையிலிருந்து கிரீடத்தை எடுத்து தூர எறிந்துவிட்டு. கிட்டத்தட்ட கிரீடத்தின் வடிவத்தை யொத்த மரத்துண்டை எடுத்து

பையில் போட்டு, அதையே வயதான சந்நியாசியின் மடியிலேயே வைத்துவிட்டார்.

சிறிது நேரம் கழித்து எழுந்த இருவரும் மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

வயதான சந்நியாசி மீண்டும் அதே படபடப்போடு நடந்து வந்தார். பையை அடிக்கடி தொட்டுப் பார்த்துக் கொண்டே வந்தார்.

இளம் சந்நியாசி, “சாமி, ஏன் பதற்றமாக இருக்கிறீர்கள்....எதாவது பிரச்சனையா?” என்று அப்பாவி போல கேட்டார்.

வயதான சந்நியாசி, “இல்லை சாமி, அந்த சிவபக்தர் ஒரு தங்கக் கிரீடத்தைக் கொடுத்து காசியில் ஏதாவது ஒரு கோயிலில் தானம் செய்யச் சொன்னார்.

வழியில் திருடர்கள், கொள்ளையர் யார் வேண்டுமானாலும் வரலாம்!. அதனால் தான் ஒரே பதற்றமாக இருக்கிறது” என்றார்.

இளம் சந்நியாசி. “இந்தப் பைக்குள் இருக்கும் ஒரு சிறிய கிரீடமா உங்கள் சுதந்திரத்தைப் பாதித்துப் பதற்றத்தை ஏற்படுத்தியது?” என்று அப்பாவி போல் கேட்டார்.

வயதான சந்நியாசி, “ஆமாம், ஆமாம்” என்றார்.

பைக்குள் இருக்கும் அந்த கிரீடம்தான உங்களை இவ்வளவு பயமுறுத்தயது என்று உறுதியாகச் சொல்ல முடியுமா?” என்று கேட்டார், இளம் சந்நியாசி.

“ஆம்” என்றார் வயதான சந்நியாசி.

“அப்படியா! சரி -- உங்கள் பையைத் திறந்து பாருங்கள்”

என்றார் இளம் சந்நியாசி.

பையைத் திறந்து பார்த்த சந்நியாசி அதிர்ச்சிக்கு உள்ளானார். ஒரு சிறிய மரத்துண்டை தவிர்த்து அதில்வேறு எதுவும் இல்லை. கிட்டத்தட்ட ஆடிப் போய்விட்டார்.

இளம் சந்நியாசி, “கிணற்றடியில் நான்தான் கிரீடத்தை எடுத்தெறிந்துவிட்டு இந்த மரத்துண்டை வைத்தேன். இப்போது புரிகிறதா மனதின் மாயை எந்த அறவுக்கு ஒருவரை ஆட்டி வைக்கும் என்று!” உண்மையை உணர வைத்தார்.

மரதுண்டை கிரீடம் என்று நினைத்து இவ்வளவு தூரம் தேவையில்லாமல் பயந்துகொண்டே இருந்ததை நினைக்க, நினைக்க வயதான சந்நியாசிக்கு சிரிப்பு வந்தது. அதிர்ச்சியை தாண்டி வாய் விட்டு சிரித்து விட்டார்.

தங்கக் கிரீடத்தைப் போல பதவி, பணம், பொருள் என்ற மாயைகளை, பொக்கிஷம் போல கருதிக்கொண்டு அவற்றைக் காப்பாற்றுவதிலேயே மனம் முழு மூச்சாக இறங்கி விடுகிறது.

உண்மையில் நிஜத்தில் இந்தப் பதவி, பணம், பொருள் எல்லாம் தங்கக் கிரீடங்கள் அல்ல....வெறும் மரத்துண்டுகளே!

நீர்க்குமிழிபோல சில காலம் மட்டுமே உங்களிடம் இருக்கக் கூடியவை.

இந்த உண்மையைப் புரிந்து கொண்டு செயல்பட்டால், மனதை நீங்கள் கட்டுப்படுத்துவீர்கள் மனம் உங்களைக் கட்டுப்படுத்தாது!

# 16.கள்ளம் நிறைந்த மனம்

கள்ள மனம் துள்ளும்.” என்பது பழமொழி. கள்ள மனம் துள்ளும் தன்னுள்ளம் தனையே தின்னும்.

கள்ளம் பொருந்தும் மடநெஞ்ச மேகொடுங் காலர்வந்தால்
உள்ளன் பவர்கட்குண் டோஇல்லை யேயுல கீன்றஅன்னை
வள்ளம் பொருந்து மலரடி காணமன் றாடும்இன்ப
வெள்ளச்செம் பாதப் புணையேயல் லாற்கதி வேறில்லையே.

Oh! Foolish heart full of deceit!
When the cruel messengers of Death arrive,

Can they be for the devotees of love true?
No. Except for it be the blissful crimson feet -
That danced in the arena -
To match the canoe shaped feet
Of the Mother that created the world,
Except for it be, none the refuge there is.

அஞ்சும் உள்ளம், கள்ளமும் நிறைந்தது என்கிறார் தாயுமானவர்.

- மனக் கள்ள மெத்தனை. (ஆனந்த.1)
- பொய்வளரும் நெஞ்சு. (சின்மயா.4)
- கள்ளமனத்துறவு (நினைவு.6)
- கள்ளம் பொருந்து மடநெஞ்சு. (பாயப்.41)

## மனிதனின் கள்ள மனம்

ஒரு உயிருக்கு துன்பம் நேர்ந்தாலோ,

அல்லது தவறு செய்த ஒருவருக்கு தண்டனை கிடைத்தாலோ
உலகில் உள்ள அத்தனை மனித மனமும் மகிழ்ச்சி கொள்வது தான் சாமானிய மனதின் சாதுர்யமான செயலாக கருதப்படும் சமுதாய வாழ்வில்,

பிற உயிரின் துன்புறுத்தலால் நம் மனம் ஏன் அளப்பரிய ஆனந்தத்தை கொண்டாடுகிறது.....???

இதில் என்ன மர்மம் மறைந்து இருக்கிறது...???.

சற்று மனதிற்குள்ளாக குதித்துப் பார்ப்போம்.

ஒவ்வொரு மனதிற்குள்ளும் அதிகப்படியான பழி வாங்கும் வேட்க்கை அடைந்து இருக்கிறது.

அது யார் மூலமாவது வெளிப்பட்டே தீர வேண்டும்.

---

வெளிபடுத்துவதற்கு போதிய சூழலும், அதற்குரிய நபரிடமும் வெளிப்படுத்த முடியாமல்,
உள்ளடக்கமாக தேக்கி வைத்திருக்கிறது.

அந்த தேக்கம் யார் துயருற்றாலும், தண்டனைக்கு ஆட்பட்டாலும் தனக்குள் இருந்த வேட்க்கை மகிழ்ச்சி உணர்வாக வெளிப்படுகிறது.

நாம் என்னவோ ஒருவரும் பிறப்பு முதல், இறப்பு வரை தவறே செய்யாத சீலர் என்று நம் மனம் நம்மை கணக்கலிட்டு

நம்மை நாமே நல்லவர் என்ற முகமூடி போட்டுக்கொண்டு விமர்சிக்கவும், அதனை கொண்டாடவும் செய்கிறோம்.

தவறு செய்யாத மனிதரும் இல்லை, தண்டனையால் திருத்தம் பெற்ற மனித மனமும் இதுவரை இல்லை.

தவறால் தானே தண்டனை பிறக்கிறது.....!!!???!!!

தவறு ஏன் பிறக்கிறது என்று ஆராய்ந்து

அந்த அந்த தவறை நடைமுறைப் படுத்தாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று இதுவரை சிந்தித்தண்டா....???

தவறுக்கு காரணம்......

“பகட்டு வாழ்க்கையில் மனதைப் பறிகொடுக்கும் பண அசை தானே காரணமாக இருக்கிறது.
வாழ்க்கையை வாழ வேண்டுமே தவிர பகட்டை வாழ்வாதாரமாக்கினால்...

அதன் விளைவு தண்டனை தானே தவிர மகிழ்ச்சியோ ஆனந்தமோ இல்லையே

இது ஆன்மீகத்திற்கு பொருந்தும்,

இந்த கருத்து சமுதாய சூழலுக்கோ, நடைமுறை வாழ்க்கைக்கோ, அல்லது சட்ட திட்டங்களுக்கோ பொருந்தாது என்ற சம்பாஷனையும் வரும்

ஆன்மிகம், சமுதாயம், நடைமுறை வாழ்க்கை, இவை அனைத்தையும் தனித் தனியாக பார்க்கும் கண்ணோட்டம் மாறும்வரை இந்த பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது

முந்தைய காலக் கட்டத்திற்கும் தற்போது உள்ள காலத்திற்கும், எவ்வளோவோ புதுப்புது சட்டங்கள், தண்டனைகள் நடைமுறை படுத்திவிட்டாலும், தவறுகள் குறைந்துள்ளதா என்றால் இல்லை என்றே பதிலே தென்படுகிறது.

ஆக, ஒரு மனிதன் தவறு செய்யாமல், இருப்பதற்கும்,

அல்லது தவறு செய்யும் காரணத்தையும் அவனே அறிந்து,

அதை விட்டொழித்தால் ஒழிய மாற்றம் வருவதற்கு வாய்ப்பே இல்லை.

செயலுக்கு ஏற்ற விளைவு தத்துவத்தை ஒவ்வொருவரும் பாடமாக மட்டும் கொள்ளாமல்,

வாழ்வில் நடைமுறை படுத்தினால் நிச்சயம் நல்லதொரு மாற்றம் நிலவும்.

எப்படி தன் பசியை தானே உண்டால் மட்டுமே பசி என்ற துன்பத்தை தீர்த்துக்கொள்ள முடியுமோ...

அதுபோல தன தவறை தானே சிந்தித்து செயல்பட வைக்க வேண்டும்.

அதற்கு ஆன்மீக உணர்வு உணரப்பட வேண்டும். உணர்ந்தவர்கள் உணர்ந்தப் பட வேண்டும்.

------------------------------------------------------------------------------------------

அதை விட்டுவிட்டு மற்றவரை தூற்றுவதாலோ, அல்லது போற்றுவதாலோ எந்த பயனும் விளையப்போவதில்லை.

ஒவ்வொருவருக்குள்ளும் நிகழும் மனதின் ஆட்டத்தையும், அறிவின் நிலைபாட்டையும் கவனிக்க தொடங்கினால் குற்றங்களும் இல்லை, அதற்கு துணையாக தண்டனைகளும் இருக்க வாய்ப்பில்லை

என்றைக்கு ஒவ்வொரு தனி மனிதனும் அகத்துள் திரும்பி பார்த்து ஜெகத்தை ஆளப் போகிறோம்....???

தனி மனித மனதின் மாற்றமே சமுதாய மாற்றம் அன்றோ...!!!

சிந்தித்தே தெளிவோம்
சீர்மையான வாழ்வை வாழ்ந்து பார்ப்போம்
மன மாற்றத்தின் முற்றத்தில் :  தாளுமானவர் வழியில் செல்வோம்.

# 17. மனதின் இழி நிலை

மனமானது உலக வழியில் சென்று பற்று பாசங்களுக்கு உட்படுகிறது என்பதனை தாயுமானவர்,

> "நெஞ்சமே ஊசக் கயிறு போல உலக நெறியின் கண்ணே
> சென்று சென்று பற்று எனும்கட்டினுள்"

தாயுமானவரைப் போல் அப்பரும் " நெஞ்சத்தை ஊஞ்சலுக்கு உவமை காட்டுகிறார் .

ஊஞ்சல், மரத்தில் கட்டப் பெற்றிருக்கிறது. உயிரியல், வாழ்க்கையென்ற மரத்திற் கட்டப் பெற்றிருக்கிறது.

ஊசற்பலகையை மரத்தோடு இணைப்பன இரண்டு கயிறுகள். உயிரை வாழ்க்கையோடு இணைப்பன ஆசை, பாசம் என்ற கயிறுகள்.

ஊஞ்சல் புறப்பட்ட இடத்திலிருந்து முன்னே செல்லும்; பின்பு புறப்பட்ட இடத்திற்கு வரும்; திரும்ப ஏகும், வரும்;

---

இடை உலவும். இந்த ஊஞ்சலின் இயக்கத்தோடு நெஞ்சை உவமித்தது சிந்தனைக் குரிய விருந்து.

உறுகயி றூரசல்போல் ஒன்றுவிட் டொன்று பற்றி மறுகயி றூரசல் போல வந்துவந் துலவு நெஞ்சம் பெறுகயி றூரசல் போலப் பிறைபுல்கு சடையாய் பாதத் தறுகயி றூரசலானே னதிகை வீரட்டனிரே!

என்பது பாடல்.

"ஊசல் பூத்த உளம்" என்று பிரபுலிங்கலீலை பேசுகிறது. ஒன்றுவிட்டு ஒன்றுபற்றி வந்துலவும் நெஞ்சத்திற்குக் கயிறுாசல் ஒப்பு. முதன் முறையாகத் தன் நிலையை விட்டுச் சென்று பிறிதோரிடத்தைப் பற்றுவது உறுகயிறு சல். பற்றிய அவ்விடத்தை விட்டு மீண்டு, தொடங்கிய நிலைப்பக்கம் வருவது மயிகயிறுாசல்;

அந்நிலையை விட்டு மற்றொரு பக்கம் சென்று பற்றுவதும் அதைவிட்டு மீள்வதும் அவ்விரண்டு ஊசலேயாகும். இடையில் வந்து உலவும்பொழுது வாசற் கயிறு முறுக்கு அவிழ்தல் உண்டு. முறுக்கு ஏறுதல் உண்டு.

"உறுகயிறுாசல்" ஆகும் பொழுது கயிறு முறுக்கேறியும், திரும்ப மறுகயிறுாசல் ஆகும் பொழுது முறுக்கவிழ்ந்தும் ஒருவழிப்படாமல் பிறர் வழிகளில் கயிறு இயக்கப்படுவதால் கயிற்றின் வலிமை தளர்ந்து தாங்கி நிற்கும் இயல்பை இழந்து "அறுகயிறுசல்" ஆகிறது. அது போல மனமும் ஊசாடுவதை அப்பரடிகள் அருமையாக விளக்குகின்றார்.

பொல்லாத மனம் - தாயுமானவர்

பொல்லாத மாமர்க் கடமன மேஎனைப் போல்அடுத்த
எல்லாவற் றையும்பற்றிக் கொண்டனை யேயென்னை நின்மயமா
நில்லாய் அருள்வெளி நீநான்நிற் பேன்அருள் நிட்டையொரு
சொல்லாற் பதிந்து பரிபூர ணானந்தந் தோய்குவனே.(பாய 49)

என்று கூறுகின்றார்.

இந்த மனம் பற்றிய கவிதையை ரமண ஆசரமத்தின் நூலகத்தில் படித்தேன்.

---

Oh, mind, Thou art a vicious monkey
That hath seized me and all things around!
Do not transform me your way.
Oh! Void of Grace,
I shall be the way Thou art.
In a word will I enter into the trance of Grace
And sport in Pervasive Bliss Perfect.

துன்பத்திற்கு மனம் துன்பத்திற்கு காரணம் என்றும், உலகப் பொருட்களை பற்ற வல்லது என்றும் தாயுமானவர் கூறுகின்றார்.

# 18. வஞ்சம் நிறைந்த மனம்

வஞ்சம் நிறைந்த மனம் என்று தாயுமானவர் பல இடங்களில் பேசுகின்றார்.

- கண்டாய் வஞ்ச நெஞ்சே (ஏசற்ற.3)
- அறியாத வஞ்ச நெஞ்சு (பரா.195)
- மறப்பு நினைப்புமாய் நின்ற வஞ்ச, மயா மனம் (ஆனந்த11)
- களம்பெறு வஞ்ச நெஞ்சினர் (ஆரணம் 3)
- ஆழாழி யென்ன வளவுபடா வஞ்ச நெஞ்சப் ௗபாழ் (எந்.மாத.11)

திருவள்ளுவர் பார்வையில் வஞ்ச மனம்

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்.

வஞ்ச மனத்தான் படிற்றுஒழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.

வஞ்சம் நிறைந்த மனம் உடையவர் உண்மையான நல்லொழுக்கத்துடன்

-----------------------------------------------------------------------------------------

செயல்பட இயலாது. அவர் பொய்யொழுக்கம் புறத்தே காண்பித்து ஒழுக்கசீலரைப் போல வேடம் தரிப்பர். அத்தகைய பொய்யர்களைப் பார்த்து அவர் உடம்பில் தங்கியிருக்கும் காற்று, நீர், தீ, நிலம், ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களும் தம்முள் சிரித்து நிற்கும்.

## வஞ்சமில்லா இனம் தரும் – அபிராமி பட்டர்

**தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வு அறியா**
**மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா**
**இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே**
**க்னம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே**

**தனம் தரும்** – எல்லாவிதமான செல்வங்களும் தரும்

**கல்வி தரும்** – எல்லாவிதமான கல்வியையும் தரும்
**ஒரு நாளும் தளர்வு அறியா மனம் தரும்** – என்றும் சோர்ந்து போகாத மனமும் தரும்
**தெய்வ வடிவும் தரும்** – தெய்வீகமான உருவத்தையும் தரும்
**நெஞ்சில் வஞ்சம் இல்லா இனம் தரும்** – உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத நண்பர்களைத் தரும்
**நல்லன எல்லாம் தரும்** – இன்னும் என்ன என்ன நன்மைகள் எல்லாம் உண்டோ அவை அனைத்தையும் தரும்
**அன்பர் என்பவர்க்கே கனம் தரும்** – எல்லோரிடமும் அம்மையிடமும் அன்புடன் இருக்கும் அன்பர்களுக்கு எல்லா பெருமையையும் தரும்
**பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே** – பூவினைச் சூடிய கூந்தலையுடைய அபிராமி அன்னையின் கடைக்கண் பார்வையே.

மகாபாரதப்போரில் இருந்துகொண்டு இந்த வரியை வாசிக்கையில் எவ்வளவோ அர்த்தங்கள் உருவாகின்றன.

**வஞ்சம் கொள்பவரிடம் தெய்வங்கள் கேட்கின்றன, எத்தனை? எவ்வளவு? எதுவரை?ஒவ்வொன்றும், அனைத்தும், இறுதிவரை என்று உரைக்கில் மட்டுமே வஞ்சத்தில் வெற்றியை அளிக்கின்றன. வஞ்சநிறைவின் இனிமையை அளிக்கின்றன**.

வன்மம் மனதில் இருந்தால் அது எரித்து அழித்துவிடும் என்பதைத்தான் இப்படிச் சொல்லியிருக்கிறீர்கள். இதை அன்றாட வாழ்க்கையில் பார்த்துக்கொண்டேதான் இருக்கிறோம்.

ஆனால் நான் பார்த்தவரை வஞ்சம் நிறைந்த மனம் உள்ளவர்கள் வேறு ஏதோ வகையில் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு மிகப்பெரிய குறை மனசில் உள்ளது. அதைத்தான் இப்படி நிரப்பிக்கொண்டிருக்கிறார்கள் என நினைக்கிறேன்ே

*என்* வாழ்க்கையிலேயே இதைப்பார்த்திருக்கிறேன். தீராத வன்மத்துடன் வாழும் பெண்கள் பலர் உண்டு.

அவர்கள் எல்லாருமே துக்கத்தால் அவதிப்பட்டவர்கள். புருஷனால் கைவிடப்படுவது. கொடுமைப்படுத்தப்படுவது. நிர்க்கதியாக நிற்பது. அன்பே கிடைக்காமல வாழ்வது. இப்படித்தான் ஆகியிருக்கிறார்கள். அவர்களுக்கு வாழ்க்கையில் உள்ள வெறுப்புதான் இப்படி வெளிப்படுகிறது.

# 19. மங்கையர் மனம்

மங்கையர் மனம் பற்றிக் கூறுகின்ற போது மங்கையர்களது மனமானது தெளிவற்றது என்றும், வஞ்சம் உடையது என்றும் தாயமானவர் கூறுகின்றார். இந்தக் கருத்தினை

"ஆழாழி என்ன அளவுபடா வஞ்ச நெஞ்சப்
பாழான மாதர்மயல் பற்றொழிவது எந்நாளோ"
(எந்நாள்கண்ணி1137)

என்று கூறுவதால் அறிந்து கொள்ளலாம்.



அதாவது இந்தப் பாடலில் வாயிலாக ஆழ்ந்த கடலைப் போன்ற அளவில்லாத வஞ்சத்தை உடைய நெஞ்சம் உடையவர்கள் பெண்கள் எனக் கூறி, அப்பெண்களுடன்

சேராது அதிலிருந்து தான் விடுதலை அடைய வேண்டும் எனக் கூறுகின்றார்.

மனம் என்ற பொருள் தன் வசம் இல்லை என்பதனை,

"-----------------------------------------------------
மனதென்பதுமோ என் வசமாய்
வாராது தைய நின் அருளே
தனதுஎன் பதுக்கும் இடம்காணேன்." (தன்னைஒருவர்.316)

என்றும்....................................

மனம் அங்கும் இங்கும் தன்னை அழுத்தடிக்கின்றது என்பதனை

"இழுக்கடித்தாய் நெஞ்சேநீ னளென்கலைகள் சேரா
அழுக்கடிக்கும் வண்ணர்போ லாய்"

என்றும் கூறுகின்றார்.

மனம் இறைவனுக்குரிய நிறைப் பொருள் என்பதனை,

"அந்தரத்தே நின்றாடும்ஆனந்தக் கூத்தனுக்குஎன்
சிந்தை திறைகொடுத்துச் சேவிப்பது எந்நாளோ" (எந்.கண்ணி.1232)
எனக் கூறுகின்றார்.

தன் மனம் இரக்கமில்லாதது என்பதனை

" எள்ளத் தனையும் இரக்கமில்லா வன்பாவி
உள்ளத்தும் எந்தை யுலாவிடவும் காண்பேனோ"( எந்.கண்ண.1231)

எனக் சுறுகின்றார்.

குற்றம் பொருந்திய மனத்தை உடைய வஞ்சகன் என்பதனை

"மாசான நெஞ்சன் இவன் வஞ்சன் என்றோ
பேசா மௌனம் பெருமான் படைத்ததுவே" (பல்வகைக்கண்ணி.1294)

எனக் கூறுகின்றார்.

# 20. ஐம்புலன்களும் மனமும்

ஐம்புலன்களின் வழி மனம் செயல்படுகிறது என்பதனை தாயுமானவர் பாடுகிறார்.

"சிவம்ஆதி, நான்முகக் கோவந்த மாமறை செப்புகின்ற

நவமாய் இலங்கிய ஒன்றே. இரண்டுஅற்ற நன்மைபெறாது.

அவமே தரும் ஐம்புலப் பொறிக்கே என் அறிவு பொல்லாப்

பவமே லிளைக்கஎன் றோ, வெளி மான்எனப் பயாய்ந்ததுவே. (பாயப்புலி.410)

மனம் பொறி புலன் வழி செல்வதனால் தான் பிறவித் துயர் ஏற்படுகின்றது என்றும், மனம் பொறி, புலன் வழி செல்லாவிடின் பிறவித் துயர் ஏற்படாது என்றும் ஐம்புலன் வழி செல்லும் மனதினை அடக்கி கட்டுப்படுத்தும் ஆற்றல் மௌனகுருவிற்கே உண்டு எனக் கூறுகின்றார்.

இக்கருத்தினை

"என்அறிவை உள்ளடக்கி என்போல் வரும்மௌனி

தன்அறிவக்குள்ளேதான் சாரும்நாள் எந்நாளோ" (எந்நாள் கண்ணி1102)

தாயுமானவரின் மௌனகுரு

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளின் தாக்கதலால் தான் உள்ளம் துன்படைகின்றது என்பதனை..

"புலன்ஐந்தும் தானே பொறிமயங்கிச் சிந்தை

அலமந்து உழலும்அடிமை – நலம் மிகுந்த

சித்தான மோன சிவனே" (உடல்பொய்யுறவு.505)

என்ற பாடல் வாயிலாக அறிவுறுத்துகின்றார்.

இந்தக் கருத்தினை உறுதிப்படுத்தும் வகையில்

"அன்றிவரும் ஐம்புலனும் நீயும் அசையாதே"

(திருக்களிற்றுப்படியார்.இன்புறுநிலை 35 )

என்றும்...

"துள்ளயலும்புலனோடா கழுவில்பட்டுத்

துணைவனையும் அறியாது துயர் உறும்

(சிவஞானசித்தியார் சுபக்கம், 8ம் சூத்திரம்)

என்றும் கூறுகின்றன.

மனமே, ஐம்பலன்களின் வழி மனம் செல்லலகாது என்பதனை இந்நூற்கள் தெளிவாக எடுத்து இயம்புகின்றன.

## அடியார் மனம்.

சிவனடியார்கள் உள்ளம் அழகிய கோயில் என்றும். அவர்களுடைய உள்ளம் தெளிவானது என்பதும் தாயுமானவரது கருத்தாகும். இக்கருத்தினை

"சுகம்ஆகும் ஞானம் திருமேனி யாம். நல்ல தொட்டர்தங்கள்

அகமேபொன் கோயில். எமைமகிழ்ந்தே மன்றுள் ஆடியகற்

பகமே. உன் பொன்அடி நீழல்கண் டால்அன்றிப், பாவிக்கு இந்த

ஜெகமாயை ஆன அருங்கோடை நீங்கும் திறம்இலையே. (பாய்ப்புலி.408)

எனக் கூறினார்.

---

# 21. மனதின் தீமைகள்.

நமக்கு வழங்கப்பட்டிருக்கும் மிக தற்புதமான கருவியாகவும் மிக அற்புதமான வாய்ப்பாகவும் இருக்கிற மனமே, நமக்கான துயரங்களை உற்பத்தி செய்யும் இயந்திரமாக (மனதின் சர்க்கஸ்) மாறிப்போனது எப்படி?

பல்வேறு தீமைகளும் இந்த மனத்திற்கு உள்ளது என அங்கங்கே தாயுமானவர் பாடல்களில் தொகுத்து சுட்டப்படுகின்றன.

- எல்லாம் தீமையும் வல்லது அது (எங்கு.4)

"கொலை களவு கட்காமம் ஆட்சியாகக்

காதலித்திடும நெஞ்சமும்" (மௌன.9)

"வஞ்சனை பொறாமை லோபம்

வைத்த மனமமாம் கிருமி" (தேஜோ.3)

வஞ்ச அழுக்காறு ஆதி வைத்திடும் பாண்டம் ஆன

நெஞ்சனை...... (வம்ப.4)

ஏதமிகு

மோகாதி மல்லலிலே மூழ்கினையே நெஞ்சே (உடல்.17)

வஞ்சனையும் பொய்யும் உள்ளே வைத்து அழுக்காறுஆயுளுறும்

நெஞ்சனுக்கு......." (பரா.40)

# 22. மனத்தின் எதிர்நிலை

தாயுமானவர் பாடல்களில் "மனம்" என்பது - அவ்வாறு அன்றி எதிரிடையாகவே காட்டப்படுகின்றது என ஓரளவுக்குக் கூறலாம்.

- நான், நீ என்று இரண்டு இல்லை எனக் கூறி நடுவே முளைத் மனதைக் கட்டவியலாது வாடும் நிலை உண்டு (கருணா.4).

- இத்தகு மனதைச் சாராமைக்கு வழி ஒன்றுண்டு. இறைவன் அருளும் அறிவின் நிருவி கற்பாங்கமாம் சாசுவத நிட்டையே அத (சச்சி.1).
- மனமாயையைக் குடிகெடுக்க, முற்றிலும் அழிக்க இறைவனாலேயே இயலும் ((பன்மாலை.3)
- அந்நிலையில் நெஞ்சம் தேட்டம் அற, இறைவனின் அருட்செயலில் நிற்றல் வேண்டும் (ஆசைஎன்னும்.3)
- மனம் தன்னுடைய வழியற்று என் ஊழை கிடப்ப இறைவன் தண்ணருள் வேண்டும் என்பர் (ஆசை.40)
- அந்நிலையில் மன அழுக்குகளை நீக்கி இறைவன் அவன் வீருப்பப்படித் தனக்கு அருள வேண்டுகிறார் (என்கென்.1)
- மாயை தரு மனம் தன் புரைகள் தீரும் போதுதான் உயிர் ஈடேற்றம் பெற முடியும் என எண்ணுகின்றார்(மண்லம்.8)
- அம் மனமற்ற நிலையில் பரமானந்த வெள்ளம் பெருகும் (பாயப்.12)
- பூரண நிட்டையில் ஆழ முடியும் (பாயப்.24)

வாழ்க்கையில் ஒருவருக்கு வரும் கஷ்ட காலம் என்பதற்கு முதற் பாதி விதி, கர்மவினை, மறு பாதி அவரவர் மனம் தான் காரணம்..

அவர்கள் முன் நிற்பது எதிர்நிலை சூழ்நிலைகள் அல்ல, அவரவர் மனதில் தான் இருக்கிறது எதிர்நிலை.

பகைவர் வெளியில் இருப்பவர் அல்ல மாயை என்ற வேறு எந்த ரூபமும் இல்லாமல் உன் ரூபத்திலே இருக்கிறது.

உடல் நிலையற்றது முந்தைய பிறவியில் வேறு உடல் இந்த பிறவியில் வேறு உடல் ஆனால் ஆன்மா என்பது தான் நிலையுள்ளது.

நீ உன்னுள் குழம்புவதற்கு காரணம் மாயை என்ற எதிர்வினையும், ஆன்மா என்ற நேர்மறை சாயல்கள் தான்.

நல்லதை உன் மனதில் யோசனையாய் செலுத்தும் ஆன்மாவிடம் மாயை என்ற ரூபம் சண்டையிடுவது தான் மனம் படும் வேதனை.

அந்த வேதனை உன்னுள் எழும் போது உன் நிம்மதி தூள் தூளாகிறது .இவைகள் எல்லாம் உன் வாழ்க்கையில் முடிய போகிறது.

சூரியனின் வெளிச்சம் பட்டு அண்டம் எப்படி ஜொலிக்குமோ, அதை போல் என் பேரொளி பட்டு ஜொலிக்க போகிறாய்.

உன் மனம் நிம்மதி சந்தோஷம் என வாழ போகிறாய். வெற்றிகரமாக எல்லா எதிர்மறை சூழ்நிலைகளில் வென்று வந்துவிட்டாய். (நன்றி)சீரடி சாய்பாபவின் அருளுரையாகும்.

# 23. உணர்ச்சி நிலையில் மனம்...

- மனக் கோதகற்றம் பரம்பொருளே (பாயப்.16)
- அழுக் கார்ந்த நெஞ்சுடையேன் (பாயப் 34)
- அற்ப மனமே (உடல்.13)
- அல்லேற நெஞ்சன் (உடல்.15)
- பாழ் நெஞ்சே (தன்னை.1)
- ஏங்கி யிடையு நெஞ்ச ஏழை (பரா.319)
- மனதின் பண்புமோ சற்றுமிலை (மலைவளர் 6)
- பேரின்பமோ சேரவென்றாற் கள்ள மனதுமோ மெத்தவும் சிந்திக்குது. (மலைவளர்.6)
- எள்ளத்து அனையும் இரக்கமிலா வன்பாவி உள்ளத்து (காண்.1)
- மாசான நெஞ்சினவன் வஞ்சன் (பலவகை. 6
- பொய் குவித்த நெஞ்சன் (பரா.292
- அழுக்காறா னெஞ்ச மழுங்கிய புன் மாக்கள் (பரா.297)

என தாயுமானவர் பாடல்களில் உணர்ச்சி நிலையில் மனதை பற்றி சுட்டுகிறார்.

# 24. மனதின் செயல்கள், விளைவுகள்

தன்னையே நொந்து கொள்ளும் நிலையிலும், தன் நெஞ்சினை அறிவுறுத்து நிலையிலும் மனதின் செயல்கள், விளைவுகள் என்பன தெரிய வருகின்றன.

அறிவு வயப்பட்ட மனது, தெளிவாகச் சிந்திக்கும் இயல்பினது. தெளிந்த அறிவு நிலையில் மனது இருக்கும் போது இடையே மடமை பகையாக வந்து புக, சிந்தனை தெளிவற்றுத் தேயைற்று நீளுகின்றனது.

மலம், மாயை, கன்மங்கள் மீண்டும் வருமோ? பிறப்புத் தொடருமோ? என்பனவே அச் சிந்தனைகள் (பரிபூ.5)

தெளிவான நினைவில் இறைவன் குடி கொண்டிருப்பதாகத் தாயுமானவர் எண்ணுகின்றார் போலும்.

"யாது மன நியும் அந்த நினைவுக்கு நினைவாக யாதின் பாலும்

பேதமற நின்று தீதில் பரமானந்த சித்தாந்த பேரொளியைச்

சிந்தை செய்வாம். (பொருள்2)

இக்கருத்து,

"நெஞ்சத்தின் ஊடே நினைவாய் நினைவுஊடும்

அஞ்சல் என வாழுமே என தாவித்துணை நீயே. (திடமுற.210)

என்பதாலும் விளக்கம் பெறுகின்றது. கள்ள மனதில் சிந்தனை பற்றி முன்பும் நினைந்தோம். (மலைவளர்.6)

---

# 25.மனம் ஆலயம் என்பனவற்றுக்கு இடையேயான தொடர்பு

ஊனுடம்பு ஆலயம் என்று திருமுலர் சொன்னதைப் போலவே தாயுமானவரும் மனதிற்கும் ஆலயத்திற்கும் தொடர்பு காண்கின்றார்.

அதாவது இறைவனை உள்ளத்தில் பொருந்த வைத்தலே மனதிற்கு சிறப்பாகும் எனக் கூறுகின்றார். இக்கருத்தினை

"என்றும் உன்னை இதய வெளிக்குளே

துறை வைத்தன னே. அருள் ஜோதிநீ

நின்ற தன்மை நிலைக்கு என்னை நேர்மையாம்?

நன்று தீதுஅற வைத்த நடுவதே." (பொன்னை மாதரை202)

இறைவன் மெய்யறிவின் உள்ளத்தை கோயிலாகக் கொண்டவன் என்பதனை,

"களம்பெறு வஞ்ச நெஞ்சினர் காணாக்

பாட்சியே. சாட்சியே. அறிஞர்

உளம்பெறும் துணையே. பொதுவினில் நடிக்கும்

உண்மையே உள்ளவாறு இதுவே." (ஆரணம்.274) என்றும்

அகவழிபாட்டுக்கு உள்ளமே கோயில், எண்ணமே மனப் பொருள், அன்பே மஞ்சன நீர் என்பதனை,

"நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்அன்பே

மஞ்சனநீர் பூஜைகொள் வாராய் பராபரமே. (பரா.786)

வன் நெஞ்சக் கல்லைக் கோயிலாகக் கொள் என்ற தலைப்பில் அமைந்த பாடலில் பாறைவடிவான கருங்கல்லைப் போன்ற மனமானது நினக்குரிய ஆலயம் என்பதனை

"ஏதம் அற்றவர்க்கு இன்பமே பொழிகின்ற இறையோ!

பாத கக்கருங் கல்மனம் கோயிலாப் பரிந்து

............................................................................" (எனக்கென செயல் 382)

என்றும் தன் மன நிலைக் கோயிலாகக் கொண்டவன் மௌனகுரு என்பதனை

"ஞானறிக்கு ஏற்றகுரு. நண்ணரிய சித்திமுக்தி

தானம் தருமம் தழைத்தகுரு. – மானமொடு

தாய்எனவும வந்துஎன்னைத் தந்தகுரு. என்சிந்தை

கோயில்என வாழும் குரு." (உடல்பொய்யுறவு) என்றும்

பேச்சற்ற அன்பர்கள் மனத்தில் உயர்ந்த ஒளியாய் ஓங்கி வளர்ந்து விளங்குபவன் பரமபொருள் என்பதனை,

"உரைஇறந்த அன்பர்உளத்து ஓங்கஒளியாய் ஓங்கிக்

கரைஇறந்த இன்பக் கடலே பராபரமே." (பரா.641)

என்றும் கூறுகின்றார்.

அதாவது தாயுமானவர் அகவழிபாட்டிற்குச் சிறந்த இடம் உள்ளம் எனக் கூறுவதுடன் உள்ளமே ஞான ஒளி என்றும் கூறுகின்றார்

## 26.மனம் அடங்குதலால் ஏற்படும் நன்மைகள்

அடங்காத மனதினை கணவனுக்கு அடங்காதப் பெண்ணுக்கு உவமிக்கிறார் தாயுமானவர். ஏனெனில், கணவனுக்கு அடங்காத பெண் தானே வெளிச் சென்று சுற்றித்திரியும் இயல்புடையவளாகக் காணப்படுவாள்.

அது போன்று அடக்கமில்லாத மனமும் மிக வன்மமானது என்றும், தீய செயல்களைச் செய்யவல்லது என்றும் கூறி, எனவே மனம் அடங்க வேண்டும் என்றும் கூறுகின்றார்.

ஏனெனில், எண்ணங்களை அடக்கி மனதை ஒரு கட்டுக்குள் கொண்டு வருவதால், மேல்வரும் நன்மைகளை அடைய முடியும் என்பது அவர் கருத்தாக அமைகின்றது. அவை வருமாறு.

1. யான், எனது என்பன நீங்கும்.
2. குருவின் திருவருள் கிட்டும்
3. எட்டு வகையான சித்திகள் கிடைக்கும்
4. வீடுபேறு கிடைக்கும் (சீவன் முக்தி)
5. அகங்காரங்கள் நீங்கும்
6. மலங்கள் அழியும்
7. இன்ப நிலை ஏற்படும்.

மனம் ஒடுங்கப் பெறாதவர்க்கு வாய்ப்பேச்சினால் எவ்வித பயனும் இல்லை என்பதனை..

“சினம் இறக்கக் கற்றாலும் சித்திஎல்லாம் பெற்றாலும்
மனம்இறக்கக் கல்லார்க்கு வாய்ஏன் பராபரமே.” பரா.804)

என்ற பாடல் மூலம் அறிவுறுத்துகின்றார்.

---

மனம் தீய வழியில் செல்வதோடு உலகில் எங்கும் உழல்வல்லது என்பதனை தீய வழியில் செல்வதால் எவ்வித பயனும் இல்லை என்பதனை

"சூதுஆடு வார்போல் துவண்டு துவண்டுமனம்
வாதாடின் என்னபலன் வாய்க்கும் பராபரமே. (பரா.806)

என்ற பாடல் வாயிலாகத் தெளிவுபடுத்துகின்றார்.

---

# 27. இறைநிலையில் மனம்

இறைவனை அன்றி நினைவு மட்டுமன்ற நெஞ்சமே இல்லை என்ற கருத்தும் தாயுமானவர் பாடலில் உண்டு. (பரா.210)

- மனதில் நிகழ்பவைகள் அனைத்தும் சாட்சியாகவும் நிற்கிறது. (பரிபூ.8)
- அவ்வாறு அது நிற்கு நிலையும் தந்தது இறையே என்பது தாயுமானவர் கருத்து. அந்த இறைவனாலேயே அம் மனமலர் மொக்கு அவிழ்கின்றது. (பொருள்.3)
- மனம் கமழ்கின்றது. அடியர் மனம் மகிழ்கின்றது (மௌன.2)
- மனம் குறைகள் தீர்கின்றன. (மௌன.8)
- மனக் கிலேசம் மாறுகின்றன. (பொன்னை.16 – வம்பனேன்.6)
- மயக்கம் நீங்குகின்றது (பொன்.51)

## மனதின் விரிவே பிரம்மஞானம்.

பிரம்ம நிலையில் இருப்பாக இருந்த பூரணம், விரைவு, அறிவு என்ற மூன்று தன்மைகளும் அதன் இயக்கச் சிறப்பான பரிணாமம், இயல்பூக்கம், கூர்தலறம் ஆகிய திறன்களும் இப்போது மனித உடலுக்குள் அமைந்து, விரிந்து. நிறைந்து ஆற்றும் சிறப்புக் களையும் உணரும் போது, மனித மனத்தின் பூரணத் தத்துவம் விளங்குகின்றது.

மனம் தன்னைப் பற்றி உணரும் அளவே அதன் மதிப்பு ஆகும். மனம் கொடுக்கும அந்த மதிப்பு தான் பேரியக்க மண்டலம்.

இவ்வாறு மனம் விரிந்து முழுமை பெறும் போதுதான் அது தன் இருப்பு நிலையான பிரம்மத்தையும், இயக்க அலையான மனதையும் ஒன்றாகக் காணுகின்றது.

இந்த பெரும் பேறான அகக்காட்சியே “பிரம்மஞானம்” ஆகும்.

# 28. ஞான வீரர்களது உள்ளம்.

கலங்காத நெஞ்சம் உடையவர்கள் ஞான வீரர்கள் என்பதனை தாயுமானவர்,

- “கலங்காத நெஞ்சுடைய ஞான தீரர்” (கல்லாலின் 636)

என்று கூறுகின்றார்.

“சோர்வு விடுத்துச் சுயேச்சை அடைந்து உலகில்

வீரனாய் வாழ விரும்பு.” (யோகசித்தி-சுத்தானந்த பாரதியார்)

"மனத்தளர்வை நீக்கு. எல்லாக் கட்டுகளினின்றும் விடுதலை பெறு. இந்த உலகில் வீரனாக, ஆத்ம தீரனாகப் பலருக்கும் பயன்படுமாறு வாழ விரும்பு என்று சுத்தானந்த பாரதியார் பகர்கின்றார்.

யார் ஞான வீரன்? யார் தீரன்?

ஒவ்வொரு மனிதனுக்குள் ஒரு தீரன் உள்ளான். அவனே உள் மனிதன். உண்மை மனிதன்.

அவனுக்குச் சோர்வில்லை. துயர் இல்லை. கட்டில்லை. கவலை இல்லை. அவன் நித்திய முத்தன். சர்வ சுதந்தரன்.

இந்த உடல் அவன் சட்டடையே. "அந்தச் சுத்தான்ம தீரனே நான்" என்று ஒவ்வொருவரும் காண்க.!

பிறகு, எதற்காக யாருக்காக, யார் கவலைப்படுவது? கட்டுண்பது. இருவிகாரக் குழாங்களில் அலைந்து உழலும் மனத்தால் படரும் அழுக்கே கட்டும் கவலையும்.

தன்னை அறிந்தால் அச்சம், அடிமைத்தனம், கவலை, கட்டுகள் முதலிய பறந்தோடிப்போம்.

அடிமைத் தனத்திற்குக் கேடையிடி தன்னறிவே. வீரன் இயற்கை உலகை வென்று அருள் அறத்தை நிலை நாட்ட வேண்டும்.

தன் அறிவு, உலக அளிவு, உள் வெற்றி, உலகவெற்றி, வாய்மை, வலிமை, ஆண்மை, பொறுமை, அஞ்சாமை, அன்பு, நீதி, நேர்மை, ஆட்சித் திறன், தியாகம், வினைத்திட்டம், மனத்திட்பம் முதலியன வீரர் தன்மைகள்.

தன்னலம் போற்றல, பொதுநலம் காத்தல், இன்னவை யொறுத்தல, இன்பமே செய்தல், தன் உயி ரீந்தும் மன்னுயிர்ப் பேணல், கொடுமையைக் குமைத்தல், நல்லதை அமைத்தல், புண்ணியம் வளர்த்தல், அறவினை தன்னை அஞ்சாது இயற்றல், ஆணவமின்றி அருட்பணி புரிதல், பயன்பற்றின்மை, விடுதலை பெறுதல், விடுதலை யீதல் – இவையே வீரரின் இனிய உடமையாம். சரிதை வீரர் சரிதைகளை பாருங்கள்.

அப்பர். சங்கரர். புத்தர், நம்மாழ்வார். தாயுமானவர். வள்ளலார், பரமகம்சர் முதலிய பொரியார் ஞானவீரர்.

சிவாஜி, குரு கோவிந்தன், பிரதாப சிம்மன், திலகர், காந்தி முதலியோ கர்மவீரர்.

## 29 மனம் மாயை திருவருள் இவற்றிற்கிடையேயான தொடர்புகள்

மாயையின் காரணமாக மனம் ஏற்படுகின்றது என்றும், ஞான வடிவமாக உள்ள திருவருள் தான் மனம் உண்டாவதற்கு காரணம் என்றும் தாயுமானவர் கூறுகின்றார். திருவருள் தான் மனம் உண்டாவதற்கு காரணம் என்பதனை

"மோன குரு அளித்த மோனமே ஆனந்தம்

ஞான அருளும் அது நானும்அது வானாதிநீ

நின்றலையும அதுநநெஞ்சப் பிறப்பும்அது

என்று அறிந்தேன் ஆனந்தமே"

மாயாகாரியமான உள்ளம் ஒழிந்து விடின் அறிவின்பம் ஏற்படும் எனக் கூறுவதன் வாயிலாக மாயாகாரியமானது உள்ளம் என்பது தாயுமானவரது கருத்தாகும். இதனை

-------------------------------------------------------------------------------------------

"-------------------------------------

வைத்த மௌனத்தாலே மாளை மனமிறந்து

துய்த்ததுவிடும் ஞான சுகம்" (உடல்.பொய்.540)

என்று எடுத்து உரைக்கின்றார்.

மாயையின் காரியமாக இரவு, பகல், சிறிய மலை, குணம், காடு, பெரிய மலை, ஒலிக்கும் கடல், அம்பலம், வீடு, உள்ளம் ஆகியன உன்னை என்பதனை,

ஒன்றும் தெரிந்திட இல்லை. என் உள்ளதது ஒருவ! எனக்கு
என்றும் தெரிந்த இவை. அவை கேள்! இர வும்பகலும்
குன்றும் குழியும் வனமும் மலையும் குரைகடலும்
மன்றும் மனையும் மனம் ஆதி தத்துவ மாயையுமே. (பாயப்.432)

எனக் கூறுகின்றார்.

உலகு அனைத்தும் உண்டாவது மாயையினால்தான் என்பதனை

"...விலகிடும் மலம் இவற்றை

வேறு அன்று அது வே றாகி

உலகு உடல் காரணமாகி

உதித்தலும் உணர்ந்து கொள்ளே..." (சிவஞானசித்தியார் சுபக்கம்.81)

உலகும் உடல் கருவிகளும் தோன்றுவதற்க காரணம் மாயை என்பதை

"நித்தியமாய அருவ ஏக

நிலைஅதாய் உலகிற்கோர்

வித்துமாய் அசித்துமாய் எங்கும்

வியாபியாய் விமலனுக்கோர்

சத்தியாய் புவன யோகம்

தனுகர ணமும் உயிர்க்காய்

வைத்ததோர் மலமய் மாயை

மயக்கமும் செய்யுமற்றே”  (சிவஞானசித்தியார் சுபக்கம்.53)

என்று சிவஞான சித்தியார் கூறுகின்றது.

அந்த மாயையின் காரியமே மனம் என்பதனை

“காட்டிய அந்தக் கரணமும், மாயைஇக் காயம் என்று
சூட்டிய கோலமும் நானா இயங்கத், துறை இதனுள்
நாட்டிய நான். என்றுஓர் அறிவற்ற நான். இவற்றைக்
கூட்டிநின் று ஆட்டினை யே. பர மே நல்ல கூத்திதுவே.” (பாயப்புலி (48)

இந்தக் கருத்தினையே சைவசித்தாந்தமும் ஏற்று நிற்கின்றது. மாயையில் எல்லாம் நுட்பமாக அடங்கியுள்ளது என்பதனை,

“மாயையின் உள்ள வஞ்சம்

வருவது போவ தாகு(ம்)

நீஅதிங்கு இல்லை என்னின்

இகழந்திடு முயலில் கோடு

போய்உகு(ம்) இவைக ளெல்லாம்

மரங்களில் புக்குப் போதனி

ஆயிடும் அதுவும் மன்னில்

காரணம் கிடக்கவாமே” (சிவஞானசித்தியார். சுபக்கம்.15)

அதாவது அசுத்த மாயையின் காரியமே மனம் எனத் தாயுமானவர் கூற அவ்யக்தம், மூலப்பிரகிருதி மாயையிலிருந்து தான் அந்தக்கரணம் தோன்றியதாக சிவஞான சித்தியார் சுபக்கம் கூறுகின்றது. இக்கருத்தினை

“விந்துவின் மாயை யாகி

---

மாயையின் அவ் வியத்தம்

வந்திடும் விந்து தன்பால்

வைகரி ஆதிமாயை

முந்திடும் அராகம் ஆதி

முக்குணம் ஆதி மூலம்

தந்திடும் சிவன் அவன் அதன்

சந்நிதி தன்னின் நின்றே. (சிவஞானசித்தியார். சுபக்கம்.19)

என்ற பாடல் எடுத்து இயம்புகின்றது.

"மனம் அது தைச தத்தின்

வந்ததொரு பொருளை முந்தி" (சிவஞானசித்தியார். சுபக்கம்.60)

எனக் கூறுகிறது.

இவ்வாறு மனதிற்கும் மாயைக்கும் உள்ள தொடர்புகள் விவரிக்கப்பட்டுள்ளன.

மனம் ஒடுங்கின் தன்னை சிவஞானியருடன் ஒப்பிடலாம் என்பதனை

"பார்க்கின்அணுப் போல்கிடந்த பாழ்ஞ்சிந்தை மாளனின்என்னை

யார்க்குச் சரிஇடலாம் ஐயா பராபரமே." (பராபர.998)

என்றும்,

"நன்நெஞ்த்து அன்பர்எல்லாம் நாதரைச் சோர்ந்து இன்பஅணைந்தார்

வன்நெஞ்சத் தாலேநான் வாழ்வுஇழந்தேன் பைங்கிளியே." (பைங்கிளி கண்ணி.1056)

மனம் குறிக்கோளுடன் செயல்பட வேண்டும் எனவும், மனம் குறிக்கோள் இல்லாது செயல்படின், வினைகளுக்கு உட்பட்டு பிறப்பிற்கு உட்பட்டு உலகப் பிடிப்புகளில் சிக்கி அல்லலுறும் என்பதனை

---

வந்த வரவை மறந்து, உலகாய் வாழ்ந்து. கன்ம
பந்தம் உற உன்னைப் படிப்பிக்கக் கற்றவர்யார்?
இந்தமதி ஏன்உனக்கு இங்கு? என்மதிகேள் என்னாலே
சந்ததநெஞ் சே! பரத்தில் சாரின்இன்பம் உண்டாமே. (ஏசற்ற அந்நிலை7 )

என்று கூறுகின்றார்.

மனம் மாயை திருவருள் பற்றிய வள்ளலார் பாடல்களும் இங்கு ஒப்புநோக்கதாகும்.

**மனம்எனும்ஓர் பேய்க்குரங்கு மடைப்பயலே நீதான்**
**மற்றவர்போல் எனைநினைத்து மருட்டாதே கண்டாய்**
**இனமுறஎன் சொல்வழியே இருத்தியெனில் சுகமாய்**
**இருந்திடுநீ என்சொல்வழி ஏற்றிலைஆ னாலோ**
**தினையளவுன் அதிகாரம் செல்லவொட்டேன் உலகம்**
**சிரிக்கஉனை அடக்கிடுவேன் திருவருளால் கணத்தே**
**நனவில்எனை அறியாயோ யார்எனஇங் கிருந்தாய்**
**ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானே.**

**மனம் என்று சொல்லப்படும் ஒரு பேய் பிடித்த குரங்கின் செயலையுடைய அறிவில்லாத சிறுவனே!**

**நீ என்னை மற்றவர்களைப் போல எண்ணிக்கொண்டு மயக்குதல் ஒழிக; நட்புண்டாக என் சொல் வழியே இருப்பாயானால் சுகமாய் இருந்திடுக;**

**என் சொல்லை ஏற்க மாட்டாயானால் தினையளவு கூட உன் செல்வாக்கு என்னிடம் செல்லுமாறு இடங்கொடுக்க மாட்டேன்;**

**அதற்கு மாறாக உலகவர் எல்லாரும் கண்டு இகழ்ந்து சிரிக்குமாறு திருவருள் துணையால் ஒருகணப் பொழுதில் அடக்கி ஒடுக்கி விடுவேன்;**
**உன் அறிவில் என்னை இன்னார் என அறியாமல் யாரென்று கருதிக் கொண்டு என்னுள் இருக்கின்றாய்; ஞான சபைத் தலைவனாகிய சிவனுக்கு நான் ஒரு நல்ல பிள்ளை என அறிவாயாக.**

---

மனமாகிய அந்தக்கரணத்தின் சேட்டைகளைக் குறிப்பதற்கு, “பேய்க் குரங்கு மடப்பயலே” என்று உருவகம் செய்து ஏசுகின்றார்.

மனம்போன போக்கில் போகின்ற மக்களைப் போல நானும் மருண்டு திரிபவன் என நினைக்க வேண்டாம் என்பாராய், “மற்றவர் போல் எனை நினைத்து மருட்டாதே கண்டாய்” என்று கூறுகின்றார்.

அறிவில்லாத சிறுவனே என்றற்கு, “மடப்பயலே” என்று வைகின்றார். இனம்-அன்பு; நட்புமாம்.

என் சொல்லை ஏற்காவிடில் கேடு இது என்பாராய், “என் சொல்வழி ஏற்றிலையானால் தினையளவு உன் அதிகாரம் செல்ல வொட்டேன்” என்றும், “உலகம் சிரிக்க உனை அடக்கிடுவேன்” என்றும் கூறுகின்றார்.

கரணங்களில் ஒன்றாதலின் மனத்தை அடக்குதற்குத் துணை புரிய வல்லது திருவருட் சத்தியாதலால், “உலகம் சிரிக்க உனை அடக்கிடுவேன் திருவருளால் கணத்தே” என்று செப்புகின்றார்.

நனவு - உணர்வு. மனத்தை அறிவின்வழி நிறுத்தி அடக்கியாளும் வன்மை எனக்கு உண்டெனவ அறிக என்பாராய், “நனவில் எனை அறியாயோ யாரென இங்கிருந்தாய்” என்று உரைக்கின்றார்.

இங்கு என்பது உடம்பின் உள்ளகம். எல்லாம் வல்லவனாதலின் ஞான சபைத் தலைவனுக்கு நான் மகனாதலை அறிந்து அடங்குக என அறிவுறுத்தற்கு, “ஞான சபைத் தலைவனுக்கு நல்ல பிள்ளை நானே” என்று நவில்கின்றார்.

இதனால் மனமாகிய தத்துவத்தை அடக்கும் திறம் புலப்படுத்தியவாறாம். (திருவருட்பா 4836.)

மாயைஎனும் படுதிருட்டுச் சிறுக்கிஇது கேள்உன்
 மாயைஎலாம் சுமைசுமையா வரிந்து கட்டிக் கொண்டுன்
 சாயைஎனும் பெண்இனத்தார் தலைமேலும் உனது

**தலைமேலும் சுமந்துகொண்டோர் சந்துவழி பார்த்தே
பேய்எனக்காட் டிடைஓடிப் பிழைத்திடுநீ இலையேல்
பேசுமுன்னே மாய்த்திடுவேன் பின்னும்முன்னும் பாரேன்
ஆய்எனைநீ அறியாயோ எல்லாஞ்செய் வல்லார்
அருள்அமுதுண் டருள்நிலைமேல் அமர்ந்தபிள்ளை நானே.**
**(திருவருட்பா 4844.)**

மாயை என்னும் சத்தியாகிய மிக்கு திருட்டுத் தன்மையுடைய சிறுக்கியே; நான் சொல்லும் இதனைக் கேட்பாயாக;

உன்னுடைய மாயச் செயல்களை எல்லாம் சுமைசுமையாக இறுகக் கட்டிக் கொண்டு உன்னுடைய சாயை என்று கூறப்படும் பெண் கூட்டத்தின் தலைமேலும் உனது தலைமேலும் சுமந்து கொண்டு பலர் செல்லாத ஒரு சந்து வழியை நோக்கிப் பேய்த் தன்மை எனப்படும் காட்டினுள் ஓடிப் பிழைத்துக் கொள்வாயாக;

இல்லையாயின், பின்முன் பாராமல் நீ வாய் திறந்து ஒரு சொல் பேசுதற்கு முன்பே மாய்த் தொழிப்பேன்;

என்னை நீ ஆய்ந்து நோக்கிற்றிலை போலும்; எல்லாம் செய்யவல்லவராகிய சிவபெருமானுடைய அருள் ஞான அமுதத்தை உண்டுத் திருவருள் பீடத்தில் அமர்ந்திருக்கும் பிள்ளையாவேன். எ.று.

மாயை என்பது பரிக்கிரக சத்தி என்னும் ஒரு தத்துவம். அது மயக்கம் செய்வதாகலின் பெண்ணாக உருவகப் படுத்தி, "படு திருட்டுச் சிறுக்கி" என்று ஏசுகின்றார்.

மாயையின் வடிவம் பெண் எனப்படுவதால், "உன் சாயை எனும் பெண் இனத்தார்" என்று கூறுகின்றார்.

சந்து - பலர் செல்ல முடியாத குறுகிய வழி. பேய் என்றது பேய்த் தன்மை. ஆய் எனை என்பதற்கு நுண்ணறிவினனாகிய என்னை என்று பொருள் கொள்ளினும் பொருந்தும்.

# 30. இறைநிலையுடைய மனம்

- இறைவன் குடிபுகும் போது, அண்டவெளியால் அவனைப் போன்றே மனமும் வெளியாகின்றது (பொருள்.10)
- அப் பர வெளியின் உண்மை காட்டும் போது அது பற்றுவிட்டு மனவெளி யாகின்றது (சுகவாரி.8)
- இந்நிலைக்கு முன்னோடியாகப் போலும் அது செயல் இழக்கும் நிலையில் வலியாகின்றது. (கருணா.8)

மனம் திரும்புங்கள் - இயேசு மனம்அறுகுணவயப்பட்டு எண்ணம் சொல் செயல் வழியாக பாவச்செயல்களை செய்து துன்பம் அடையாமல் மனம் தனது பிறப்பிடமாகிய உயிரின் மீது

அதே மனம் மூலமாக கவனம் செலுத்துவதையே
“மனம் திரும்புங்கள்” என்றார் இயேசு மகான்.

அடுத்தொரு கோணத்தில், பிரத்யாகரா என்ற பதஞ்சலி அட்டாங்க யோக படி நிலையை இயேசுவின் மனம் திரும்புங்கள் வாக்கியம்
ஐம்புலன் வழி செல்லாமல்,உயிரை நோக்கி உட்செல்வதை குறிப்பால் உணர்த்துகிறது.

புலன்கள் மூலம் மனதை வெளியில் பரவ விடுதல் புற மனம்
இது 90° வெளியில் செல்லும் மனதை தியானம் செய்தல் மூலம்
உள் முகமாக திருப்புவது அகம் திருப்புதல் அல்லது நடு மனம் 180°

நடு மனதிற்கு திருப்பிய மனதை, மனதின் ஆழ் நிலைக்கு நகர்த்த முற்படுவது ஆழ் நிலை தவத்தின் துணை கொண்டு செய்வது - 270° - (ஆழ் மனம்.)

ஆழ் மனதில் லயித்திருக்கும் போது தானாக மனமற்ற நிலையில் நிலைத்திருக்கும் நிலையே “போகத்திற்கு வராத மனம்” - 360° புறத்தில் அலையும் மனதை, அகம் நோக்கி திருப்பினால்

புறத்தில் உள்ள பிரபஞ்சம் அனைத்தும் அகத்தில் இருப்பதை உணர முடியும் என்பதைத் தான் "மனம் திரும்புங்கள்" என்று இயேசு கூறி இருக்கிறார்.

அப்படி திருப்பினால் --பரலோக ராஜ்யம் சமீபத்தில் உள்ளதை உணர முடியும் இது நடு மனம்.

ஆழ் மனதில் உணர்வு மட்டும் போகத்திற்கு வராத மனதில் உணர்வையும் கடந்து இறைநிலையாக உறைந்து இருத்தல்.

நடு மன நிலையில் பரலோக ராஜ்யம் இருக்கும் அங்கே தட்டினால் ஆழ்மன கதவு திறக்கப்படும்.

கேட்டால் கொடுக்கப்படும் ஆழ்மனதின் நிலையில் கேட்டுப் பெற வேண்டியது ஏதுமில்லை.

நிறை நிலையை உணர்ந்த நிலை நான்காவது நிலையாகிய போகத்திற்கு வராத நிலையில் கேட்ப்பவனும் இல்லை, கேட்க்கப் படும் பொருளும் இல்லை இருப்பது நிறை நிலை மட்டும்.

இதுவே" மனம் திரும்புங்கள் "

புறப் பொருட்களோடு தொடர்பு கொள்ளாமல் இருக்க முடியாது மாறாக, அளவு முறை மீறும் நிலையில் கவனம் கொண்டு விழிப்புணர்வோடு இருந்தாலே மனம் அந்த ஷணத்தில் நின்று தானாக திரும்பும் - 360 டிகிரி மனதின் முழு வட்டத்தின் அளவுகோல் தான் இந்த 360 டிகிரி 360 டிகிரி கோணத்தில் தான் எந்தவொரு வட்டமும் முழுமைக்கு வரும்.

அதுபோல நம்முடைய வாழ்வின் வட்டமும் முழுமை பெற வேண்டுமானால்

360 டிகிரி என்ற அளவில் மனமதை திரும்பி பார்க்க வேண்டும்

எங்கிருந்து துவங்கியதோ அங்கே வந்து நின்றால் தானே முழுமை அடையும்

அது தானே முழுமையும் ஆகும்

முக்கால்வாசி தூரத்தை கடந்து வந்து இருப்போம்

ஆனால்,

மனதை திருப்ப தெரியாமல் பயணம் மிக நீண்ட தூரம் என்று கருதி
வந்த வழியை எண்ணி எண்ணி சலிபுறுவதும் தான் மனதின் அவல நிலை
கடந்து வந்த தூரத்தைவிட
திரும்பி பார்க்கும் தூரம் வெகு அருகாமையில் இருந்தபோதும்
அதை திரும்பி பார்க்க மனதில் தோன்றுவதில்லை
இதனை உணர்ந்த இயேசு மகான்
"மனம் திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் சமீபத்தில் உள்ளது" என்று விளிக்கிறார்
மனதை திரிகோண அமைப்பில் கனக்கிட முடியாது
மனதின் நிலை இரண்டு
1. அலை.
2. நிலை
மனம் இயல்பாக அலையும் தன்மை கொண்டது
ஏன் நிலைப் படுத்த வேண்டும்....???
உண்மையை உணர்வதற்கு
தோற்றப் பொருட்கள் அனைத்தும் அலையும் தன்மை கொண்டது
நாமும் மனதைக் கொண்டு அலைந்து தான்
இயற்கையின் ரகசியத்தை அறிந்து கொள்கிறோம்
ரகசியத்தில் தலயாய ரகசியம்
இயற்கையின் நிலைத் தன்மையை புரிந்துகொள்வது
அதற்கு மனம் நிலை கொள்ள வேண்டும்
பயிற்சியைக் கொண்டோ, சிந்தனையைக் கொண்டோ மனதை நிலைப் படுத்தினால்
இயற்கை ரகசியங்கள் புரியும்
ஆக,
மனதை கணக்கு போடுவதை விட்டுவிட்டு
புரிந்து கொண்டாலே போதும்.
மனம் தானாக நிலை கொள்ளும்.

# 31. அடியார் மனம்.

சிவனடியார்கள் உள்ளம் அழகிய கோயில் என்றும் அவர்களது உள்ளம் தெளிவானதும என்பது தாயுமானவர் கருத்தாகும். இதனை,

“சுகம்ஆகும் ஞானம் திருமேனி யாம். நல்ல தொண்டர் தங்கள்

அகமேபொன் கோயில். எனமகிழ்ந் தேமன்றுள் ஆடியகற்

பகவே. உன் பொன்அடி நீழல்கண்….” (பாயப்பலி 408)

என்று கூறுகின்றார்.

சிவனடியார்கள் உள்ளம் சஞ்சலம் அடைவதில்லை என்பதை

“சித்தம் தெளிந்தோர் தெளிவில் தெளிவுஆன

சுத்த சுகக்கடலுள் தோயுநாள் எந்நாளோ. (எந்நாள்கண்ணி. 1215)

எனக் கூறுகிறார்.

**இராமானுஜர் நூற்றந்தாதி - அடியார்க்கு அடியார்**

இந்த மனம் இருக்கிறதே, இது ஒரு விசித்தரமான ஒன்று.

நம்முடைய மனம் தான். இருந்தும் நாம் சொல்வதை கேட்பது இல்லை.

பார்க்காதே என்றால் பார்க்கும். தொடாதே என்றால் தொடும். இருப்பதை விட்டு விட்டு இல்லாததற்குப் பறக்கும்.

மனதை அடக்க வேண்டும் என்று நினைத்தால், அது நம்மை அடக்க முயற்சி செய்கிறது.

மனம் நம்மை நல்ல வழியிலும் இழுத்துச் செல்லும், கெட்ட வழியிலும் இழுத்துச் செல்லலாம்.

மனதை வலு கட்டாயாமாக ஒரு வழியில் செலுத்தினால், நிச்சயம் அது நம் கட்டுபாட்டை மீறி எதிர் திசையில் ஓடும்.

அதை, அதன் வழியில் போய், கொஞ்சம் கொஞ்சமாக நம் வழிக்கு கொண்டு வர வேண்டும்.

அமுதனார் சொல்கிறார்,

என் மனமே, உன்னை நான் அடி பணிகிறேன். கெட்ட பசங்க சவகாசத்தை விடுத்து, இராமானுஜரின் மேல் அன்பு செய்யும் நல்லவர்களின் திருவடிக்கீழ் என்னை கொண்டு சேர்த்ததற்கு

பேரியல் நெஞ்சே ! அடிபணிந்தேனுன்னைப், பேய்ப்பிறவிப்
பூரியரோடுள்ள சுற்றம் புலர்த்திப், பொருவருஞ்சீர்
ஆரியன் செம்மை இராமானுச முனிக்கன்பு செய்யும்
சீரியபேறுடையார், அடிக்கீழென்னைச் சேர்த்ததற்கே.



இராமானுஜர் ஒரு அடியார்.

அவர் மேல் அன்பு செய்தவர்கள் அவரின் அடியார்கள்
அப்படிப்பட்ட அடியவர்களின் திருவடிக்கீழ் இவர் இருக்கிறார்...

எவ்வளவு பணிவு. எவ்வளவு தன்னடக்கம்.

ஆண்டா ஆலங்காடா உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே என்பார் சுந்தர மூர்த்தி ஸ்வாமிகள்

தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்பது தெய்வப் புலவர் சேக்கிழார் வாக்கு

அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விடு விட்டால் இன்ப நிலை தானே வந்து எய்தும் பராபரமே என்பார் தாயுமானவர்.

# 32. அத்துவிதம்

மனமும் இறைவனும் இரண்டற கலத்தலே அத்துவிதம் என்பது தாயுமானவரது கருத்தாகும்.

பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவைத

மெய்கண்ட நாதன்அருள் மேவுநாள் எந்நாளோ. (எந்நாள்கண்ணி-1097-குருமரபின் வணக்கம். 4)

## அத்துவிதத்தின் நான்கு அடிப்படைக்கொள்கைகள்

1. என்றும் நிலைத்திருக்கும் பொருள் ஒன்றே ஒன்றுதான். அதுதான் ‘ஸத்’ என்றும், (பரப்-)பிரும்மம் அல்லது பரமாத்மா என்றும் அழைக்கப்படுகிறது. அதைத்தவிர வேறு எதுவும் மெய்ப்பொருளல்ல.

2. *பிரும்மம்* என்பது பெயர் உருவம் ஆகிய எந்த குணங்களும் அற்றது. அதனால் அதை நிர்க்குணப்பிரும்மம் என்று சொல்லி, நாம் மனதால் நினைக்கக்கூடிய குணங்களுடன் சேர்ந்த கடவுள் என்ற பரம்பொருளை ஸகுணப்-பிரும்மம் என்றும் வேறுபடுத்தவேண்டும்.

3. அனைத்துயிர்களுக்கும் உயிருக்குயிராகவும் அறிவுக்கறிவாகவும் இருக்கும் ஜீவாத்மா, வெறும் தோற்றமான அகில உலகிற்கும் அடிப்படை மெய்ப்பொருளாக இருக்கும் பிரம்மம், ஆகிய இரண்டும் இரண்டல்ல, ஒன்றே.

4. உபநிடதங்கள் மெய்ப்பொருளை குணங்களுள்ளதாக விவரிக்கும்போது அதை (சகுனப் பிரம்மம்) ( உருவத்துடன் கூடிய இறைவன்) இடைநிலை விள்க்கங்களாகவும், குணங்களற்றதாக

விவரிக்கும்போது அதை (நிர்குணப் பிரம்மம்) [உருவம் அற்ற இறைவன்) கடைநிலை விளக்கமாகவும் கொள்ளவேண்டும்.




அருணகிரிநாதப் பெருமான் ‘சுருதிமுடி மோனஞ்சொல்’ எனத்தொடங்கும் பழநிமலைத் திருப்புகழில் முருகப் பெருமானை, ‘வேதமுடிவாய் மோனநிலையைக் காட்டும் சிற்பரம ஞானமாயதும், சிவசமய வடிவாய் வந்ததும், அத்துவிதமான பரசுடரொளியாய் நின்றதும்,

நிட்கள சொரூபமுதலானதும் ஆன ஒரு வாழ்வே’ எனத் துதிக்கின்றார். **‘சிவ சமய வடிவாய் வந்த அத்துவிதமான** பர’ என்று முருகனைத் துதித்ததால் சிவசமயம் அத்துவிதக் கொள்கையினது என்பதை அருணைமுனிவர் வலியுறுத்துகின்றார்.

இக்காரணங்களால் சைவசித்தாந்தம் கூறும் அத்துவிதம் ‘பிரிவரும் அத்துவிதம்’ என்றும், ‘சுத்தாத்துவிதம்’ அழைக்கப்படுகின்றது.

இதனைப் “பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவிதம்” என்றார், தாயுமான சுவாமிகள்.

பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவைத

மெய்கண்ட நாதன்அருள் மேவுநாள் எந்நாளோ. (எந்நாள்கண்ணி-1097-குருமரபின் வணக்கம். 4)

மண்டலப்ராஹ்மணோபநிடதம், “தந்மநோ விலயம்யாதி தத்விஷ்ணோ: பரமபதம்|தல்லயாச் **சுத்தாத்வைத ஸித்தி**: பேதபவாத்: ஏததேவ பரமதத்வம்||” என்றோதியது.

இதனால் தென்னாட்டு சைவ சித்தாந்தம் கூறும் அத்துவிதம் வேதத்துக்கும் ஏற்புடையதே என்பது பெறப்படுகின்றது என்பதோடு ‘அத்துவிதம்’ என்றசொல் இந்தியத் தத்துவஞானத்தில் ஒரு பிரிவுக்கே உரியதெனும் அறியாமையும் விலக்கப்படுகின்றது.

## 33. இறையை அடைய மனதின் பல படி நிலைகள்

இறை நிலையடைய, மனம் பல படி நிலைக் கடக்கின்றது. முதற்படியாக, அந்த உயர்வுக்கு இதயம் ஏங்குகின்றது. அருகே அணைதல் கிட்டாமையால் வாடுகன்றது.

“எந்தநாள் கருணைக்கு உரித்தாகு நாள்எனவும்

என் இதயம் எனை வாட்டுதே (சுகவாரி.11)

இனிது எமக்கு அவனருள் வருமோ எனக் கருதி

ஏங்குதே நெஞ்ச மையோ.. (சச்சி. 5)

---

புண்ணாளர் போநெஞ்சம் புலம்பி உள்ளே

நீராளமாய் உருகிக் கண்ணீர் சோர (ஆகார.24)

அடுத்ததாக விருப்பத்தை வெளியிடுகின்றது.

“கையினால் தொழுது ஏத்திக் கசிந்து உளம்

மெய்யினால் உனைக் காண விரும்பினேன். (பொன்னை.59)

தன் நிலையை எடுத்து மொழிகின்றது.

......கற்பகமேஜோதியே தொண்டனே நின்னை

இரந்து நெஞ்சு உடைந்து கண்டுயில் பெறாமல் இருந்தும் (ஆரணம் 5.)

.......................................................வினைத்

தடையால் தளையிட்டு நெஞ்சம் புண்ணாகத் தளர (பாயப்புலி.55)

எண்ணாத எண்ணமெலாம் எண்ணி எண்ணி ஏழை நெஞ்சம்

புண்ணாகச் செய்தது போதும்” (பரா.33)

குறைகளைச் சுட்டி, விழைவை எடுத்து மொழிகின்றது.

- “அருள் மோன வள்ளலையே (நித.அன்பு)
- பூணக் கருது நெஞ்சு (உடல்.29)
- அடிமை மனம் விகசிப்பது எந்நாளோ (சித்தர்.8)

என இவ்வாறு பல நிலைகள் கடந்து தீதற்ற நெஞ்சத்தில் இறைவன் வீற்றிருக்கின்றான்.

- நல்லோர் நெஞ்சம் மன்றாக இறைவன் இன்பக் கூத்தாடல் (பன்மாலை.8 – எனக்கென்.12)

பற்றிய குறிப்பு இதனைத் தெளிவுறுத்தும். இறை அமிர்தத்தை நெஞ்சக் கிண்த்தில் பருகும் நிலையை அழகாகச் சித்திரிக்கின்றார் தாயுமானவர்.

.......“கோது இலா அமிர்தமே. நின்னை

வாட்ம் இல் நெஞ்சம் கிண்ணமாகச் சேர்த்து,

வாய்மடுத்து அருந்தினன்.. ஆங்கே. (ஆசை.30)

நெஞ்சம், இதயம், உள்ளம் என்பன பெரும்பாலும் நற்பண்புகளுடன், நன்மை உடையனவாக. சிறந்தவையாகவே காட்டப்படுகின்றன.

# 34. பிறப்பு இறப்பில் மனம்

வாழ்க்கையின் பிறப்பையும் இறப்பையும் கூட மனத்தை வைத்து தாயுமானவர் விளக்குகின்றார்.

“மறக்கின்ற தன்மை இறத்தல் ஒப்பாகு மனம் தோன்றிற்

பிறக்கின்ற தன்மை பிறத்தல் ஒப்பாகும். (பாயப்.47)

அதனாலேயே, இப் பேய்ப்பிறவி இருக்கின்ற பிறக்கின்ற எல்லைகட்கு அளவில்லை என்றும் மொழிகின்றார்.

எனவே உடல்நிலை பிறப்புக்கு அப்பால் ஒரு மனநிலைப் பிறப்பிறப்பு இருக்கும் உண்மையும் புலப்படுகின்றது.

நெஞ்சமே, மனமே இப் பிறப்பிறப்புக்கு அடிப்படையாயினமையைப் பிறிதொரு பாடலும் நிறுவும்.

“உன்னை உடலை உறுபொருளைத் தாஎனவே

என்னை அடிமைக்கு இருத்தினான் – சொன்ஒரு

சொல்லை மறவாமல்ஆய்ந்தால் நெஞ்சே உன்னால்

இலலை பிறப்பு ஏது எனக்கே. (உடல்.71)

குரு சொன்ன சொல், “மௌனம்” என்பது மிகத் தெளிவான கருத்து. எனவே. பிறப்பற வேண்டுமானால், குரு சொல்படி நிற்றல் தேவை என்பது பெறப்படுகின்றது.

"மோன குருஅளித்த மோனமே ஆனந்த

ஞான அருளும் அது நானும்அது – வான்ஆதி

நின்ற நிலையும் அது நெஞ்சப் பிறப்பும் அது

என்று அறிந்தேன் ஆனந்தமே. (உடல்.75)

நெஞ்சத் சுத்தம் உடற்பிறவியை அறுப்பதைப் பிறிதோர் இடத்தும் சுட்வர் தாயுமானவர்.

"நித்தன் பரமகுரு நேசத்தால் – சுத்தநிலை

பெற்றோமே நெஞ்சே! பெரும்பிறவி சாராமல்

கற்றோமே மோனக் குரு. (உடல்.83)

# 35 மனம் இன்பம் அடைவதற்குரிய வழிகள்

மனம் சிவனே என்று சும்மா இருந்தால் இன்பம் கிட்டும் என்பதனை

சும்மா விருக்கச் சுகஞ்சுகம் என்று சுருதியெல்லாம்
அம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டும் அறிவின்றியே
பெம்மான் மவுனி மொழியையுந் தப்பிஎன் பேதைமையால்
வெம்மாயக் காட்டில் அலைந்தேன் அந் தோஎன் விதிவசமே.( பாய6.)

இவ்விடத்தில்

"உள்ளும் புறமும் நினைப்புஅறில் உன்னுள்ளே

மொள்ளா அமுதாம் என்று உந்தீ பற

முளையாது பந்தம் என்று உந்தீ பற."(திருவுந்தியார் பாடல்)

மனம் எதனையும் நினைக்காமல் வெறுமனே சும்மா இருப்பதினால் பந்த பாசங்களை நீக்கி இன்பமாக வாழலாம் என்கிறது திருவுந்தியார் பாடல் ஒன்று.

அன்பால் நெகிழ்ந்து கண்ணீர் உருகினாலும் இன்பம் கிடைக்கும் என்பதனை

துன்பக் கடலில் திளைந்ததெலாந் தீர்ந்ததே
இன்பக் கடலில் இருமென்ன-அன்பில்
கரைந்து கரைந்துருகிக் கண்ணருவி காட்ட
விரைந்துவரும் ஆனந்தே மே. (உடல் பெ.38 . 497)

என்ற பாடல் எடுத்து இயம்புகிறது.

மனம் இறைவனை அடைந்தால் இன்பம் உண்டாகும் என்பதனை,

அல்லும் பகலும்பே ரன்புடனே தானிருந்தால்
கல்லும் உருகாதோ கல்நெஞ்சே-பொல்லாத
தப்புவழி என்நினைந்தாய் சந்ததமும் நீ இறந்த
எய்ப்பிலே ஆனந்த மே. (உடல் பெ.40. 499)



கடவுளைக் கண்டவர்கள் சும்மா இருப்பார்கள், மோனிகள் (மவுன நிலை) ஆகி சொல்லற்றுப் போய்விடுவார்கள். இதுதான் பேசா அநுபூதி.

ஆயினும் ராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு ரகசியத்தை வெளியிட்டுள்ளார்.

சிலர் மட்டும் பிரம்ம சாகரத்தில்= பேரானந்தக் கடலில் குதித்து முத்தெடுக்கப் போகும் முன், "அடடா, இப்பேற்பட்ட பேருண்மையை மக்களுக்கும் சொல்லிவிட்டு வருவோம்" என்று ஓடிவந்து விடுவார்களாம்.

அப்படிப்பட்ட ஞானிகளில் பரமஹம்சரும் ஒருவர்.

ஆகையால்தான் நமக்கு இந்த ரகசியம் தெரிந்தது. ஞானசம்பந்தர், விவேகானந்தர், மாணிக்கவாசகர் எல்லோரும் இளம் வயதிலேயே இறைவனை அடைந்துவிடுவதன் ரகசியமும் இதுவே.

சில ஞானிகள் தன்னுடன் மற்றவர்களையும் அழைத்துச் செல்வர்.

ஞான சம்பந்தர், ராம பிரான் ஆகியோர் இப்படி தன்னுடன் இருந்தவர்களையும் முக்தி நிலைக்கு அழைத்துச் சென்றனர்.

கீதையில் கண்னபிரானும் ஏகாந்தம் பற்றிப் பேசுகிறார் (6-10)

யோகி யுஞ்சீத சததம் ஆத்மானம் ரஹசி ஸ்தித:

ஏகாகி யதசித்தாத்மா நிராசீ: அபரிக்ரஹ:

எப்போதும் ஏகாந்தத்தில் (ரஹசி) இருக்க வேண்டும் தன்னந்தனியனாய் உடலையும் உள்ளத்தையும் கட்டுப் படுத்த வேண்டும். ஆசை இருக்கக் கூடாது. உடமைகள் எதுவும் இருக்கக் கூடாது. யோகியானவுடன் இப்படி உறுதிபெற வேண்டும்.

நாமும் தனிமையில் இனிமை காணும் பக்குவம் பெறுவோம்.

# 35. மனம் ஒடுங்க வழி

மனதை ஒரு நிலைப்படுத்தி அடக்கி இருத்தல் இயலாத காரியம் என்பதனை தாயுமானவர் அடியிற்கண்ட உதாரணங்களுடன் அறியத் தருகின்றார்.

அதாவது கட்டுத்தறியைக் குறிக்கும் மத யானையினை வசப்படுத்த முடியும்.

கரவு, புலயினை அடக்கலாம். சிங்கம் ஒன்றின் முதுகில் அமர்ந்து செல்லலாம் நஞ்சினையுடை பாம்பினைப் புற்றினின்று எடுக்கலாம்.

பாதரசத்தையும் உலோகத்தையும் உண்ணலாம். தேவர்கள் நம் ஏவலைச் செய்யுமாறு செய்யலாம்.

எப்பொழுதும் இளமையுடன் இருக்கலாம். வேறொருவரின் உடலில் புகலாம்.

ஆனால், மனநிலை நல்வழிப்படுத்தும் திறத்தைச் செய்து உள்ளத்தை அடக்குவது இயலாத காரியமாகும் எனக் கூறுகின்றார் தாயுமானவர். இக்கருத்தினையே....

---

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாங்
கரடிவெம் புலிவாயையுங்
கட்டலாம் ஒருசிங்கம் முதுகின்மேற் கொள்ளலாங்
கட்செவி எடுத்தாட்டலாம்
வெந்தழலின் இரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்
விண்ணவரை ஏவல்கொளலாஞ்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம் மற்றொரு
சரீரத்தி னும்புகுதலாஞ்
சலமேல் நடக்கலாங் கனல்மே லிருக்கலாந்
தன்னிகரில் சித்திபெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறமரிது சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே. (தேசோ மயானந்தம் 8).

இவ்வாறு மனத்தினை அடக்குதல் எளிதன்று எனக் கூறினாலும் மேல்வரும் வழி பின்பற்றினால் மனதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என்பதை தாயுமானவர் உணர்த்துகின்றார்.

மனம் அடங்குவதற்கு யோகப் பயிற்சி அவசியம் என்றும், நீ என்பது அடங்கும் அந்நிலையே நிட்டை என்றும், யான், எனது என்ற செருக்கு நீங்குதல் இன்ப நிட்டை என்றும், மௌனமே நிட்டை என்றும் தாயுமானவர் கூறுகின்றார். இக்கருத்தினை

சொல்லால் மவுன மவுனமென் றேசொல்லிச் சொல்லிக்கொண்ட
தல்லால் மனமறப் பூரண நிட்டையி லாழ்ந்ததுண்டோ
கல்லாத மூடன் இனிஎன்செய் வேன்சகற் காரணமாம்
வல்லாள னான மவுன சதானந்த மாகடலே. (பாய24.)

என்ற பாடல் அறியத்தருகிறது.

கல்லால மரத்தின் கீழ் இருக்கின்ற இறைவனைவணங்குவதனால் உள்ளம் ஒடுங்கும் என்பதனை,

---

ஆரணம் ஆகமம் எல்லாம் உரைத்த அருள்மவுன
காரண மூலங்கல் லாலடிக் கேயுண்டு காணப்பெற்றால்
பாரணங் கோடு சுழல்நெஞ்ச மாகிய பாதரசம்
மாரண மாய்விடும் எண்சித்தி முத்தியும் வாய்ந்திடுமே. (பாய25. தா.பா.425)

என்ற பாடலும்,

இறைவனது திருவருளினால் உள்ளம் ஒடுங்கும் என்பதனை,

வாராய்நெஞ் சேயுன்றன் துன்மார்க்கம் யாவையும் வைத்துக்கட்டிங்
காராய் அடிக்கடி சுற்றுகின் றாயுன் அவலமதிக்

கோரா யிரம்புத்தி சொன்னாலும் ஓர்கிலை ஓகெடுவாய்
பாரா யுனைக்கொல்லு வேன்வெல்லு வேன்அருட் பாங்குகொண்டே. (பாய50. 450)

என்ற பாடலும்

எல்லாஞ் சிவன்செயல் என்றறிந் தாலவன் இன்னருளே
அல்லாற் புகலிடம் வேறுமுண் டோஅது வேறிலையா
நில்லாய் உன்னால்தமி யேற்குக் கதியுண்டிந் நீள்நிலத்தில்
பொல்லா மயக்கத்தி லாழ்ந்தாவ தென்ன புகல்நெஞ்சமே. (பாய45. தா.பா.445)என்ற பாடலும்

ஆழாழி கரையின்றி நிற்கவிலை யோகொடிய
ஆலம்அமு தாகவிலையோ
அக்கடலின் மீதுவட அனல்நிற்க வில்லையோ
அந்தரத் தகிலகோடி
தாழாமல் நிலைநிற்க வில்யோ மேருவுந்
தனுவாக வளையவிலயோ
சத்தமே கங்களும் வச்ரதர னாணையில்
சஞ்சரித் திடவில்லையோ
வாழாது வாழவே இராமனடி யாற்சிலையும்
மடமங்கை யாகவிலையோ
மணிமந்த்ர மாதியால் வேண்டுசித் திகள்உலக
மார்கத்தில் வைக்கவிலையோ
பாழான என்மனங் குவியஒரு தந்திரம்

பண்ணுவ துனக்கருமையோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூர ணானந்தமே.           (பரிபூ 9 .  தா.பா.12)

என்ற பாடலும் அறியத்தக்கன.

இறைவனின் திருவருள் கிட்டடியமை உள்ளத்தின்  ஆசை, பொறாமை என்பன நீங்கிவிடும் என்பதனை,

உய்யும் படிக்குன் திருக்கருணை
ஒன்றைக் கொடுத்தால் உடையாய்பாழ்ம்
பொய்யும் அவாவும் அழுக்காறும்
புடைபட் டோடும் நன்னெறியாம்
மெய்யும் அறிவும் பெறும்பேறும்
விளங்கு மெனக்குன் னடியார்பால்
செய்யும் பணியுங் கைகூடுஞ்
சிந்தைத் துயருந் தீர்ந்திடுமே. (தன்னை ஒருவர் 6.  தா.பா.316)

என்று கூறுகின்றார்.

மனம் அடைக்கலம் புகுவதற்குரிய இடம் இறைவனது திருவருள் என்பதனை.

“எல்லாம் சிவன் செயல்  என்று அறிந்தால், அவன் இன்னருளே

அல்லால் புகல் இடம் வேறும் உண் டோ?  அதுவேநிலையா

நில்லாய். உன் னால் தமி யேற்குக் கதிஉண்டு.  இந் நீள்நிலத்தில்

பொல்லா மயக்கத்தில் ஆழ்ந்துஆவது என்ன புகல்நெஞ்சமே.” (மண்டலத்தின்.445)

ஆணவமலம் நீங்கினால் மனம் ஒடுங்கும் என்றும் அவ்வாறு ஒடுங்கினால் உலகியல் பொருட்கள் யாவும் அருள் வடிவாக் காணப்படும் எனக் கூறுகின்றார். இக்கருத்தினை

பட்ட பகல்போலப் பாழ்த்தசிந்தை மாளின்எல்லாம்

வெட்டவெளி ஆக விளங்கம் பராபரமே. (பரா.362  தா.பா.997)

---

ஞானம் கைவரப்பட்ட சித்தர்களின் சித்துக்களை விடவும் அரிதானது மனதை உருகச் செய்தல் என்பதனை...

பாட்டளி துதைந்துவளர் கற்பகநல் நீழலைப்
பாரினிடை வரஅழைப்பீர்
பத்மநிதி சங்கநிதி இருபாரி சத்திலும்
பணிசெய்யுநம் தொழிலாளர்போல்

கேட்டது கொடுத்துவர நிற்கவைப் பீர்.பிச்சை
கேட்டுப் பிழைப் போரையும்
கிரீடபதி ஆக்குவீர். கற்பாந்த வெள்ளம் ஒரு
கேணியிடை குறுகவைப்பீர்.

ஓட்டினை எடுத்து ஆயிரத்து எட்டு மாற்றுஆக
ஒளிவிடும் பொன் ஆக்குவீர்
உரகனும் இளைப்பு ஆற யோகதண் டத்திலே
உலகுசுமை ஆகவருளால்

மீட்டிடவும் வல்லநீர், என்மனக் கல்லைஅனல்
மெழுகு ஆக்கி வைப்பது அரிதோ?
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே . (சித்தர் கணம் 58)

வீண்வார்த்தைகள் பேசுவதை தவிர்த்து விட்டு கங்கை அணிந்த திருமுடியுடையவனை நாவால் கூற மனம் கரையும் எனக் கூறுகின்றார் . இக்கருத்தினை

நேராயம் மௌனநிலை நில்லாமல் வாய்பேசி
ஆராய் அலைந்தீர்நீர் ஆகெடுவீர்-தேரீர்
திரையுந் திரையுநதிச் சென்னியனை நாவால்
கரையுங் கரையுமனக் கல். (உடல் பொ.12. 471)

என்ற பாடல் விளக்குவதை பார்க்கலாம்.

# 37. மனோநாசம்.

ஆனந்த களிப்பில் இது அழகான சுலோகம். ஆழ்ந்தகருத்தமைந்தது. ஆழமான கருத்துள்ள பாடல்.

குருவினுடைய இலக்கணத்தை மூன்று வரிகளில் வர்ணனைகிறார். குரு எனக்கு என்ன செய்தார்? என்று தாயுமானவர் கூறுகிறார்.

அதனால் தனக்கு என்ன ஏற்பட்ட விளைவுகளையும் இப்பாடலில் விளக்குகிறார்.

(10.)அன்பருக்கு அன்புஆன மெய்யன்-ஐயன்
ஆனந்த மோனன் அருள்குரு நாதன்
தன்பாதம் சென்னியில் வைத்தான் என்னைத்
தான்அறிந் தேன்மனம் தான்இறந் தேனே-

தோழி! அன்பரிடம் அன்பு செய்யும் மெய்யானவன். ஐயன் பேரின்ப மௌனன். அருள்குரு நாதன். தன் திருவடியை தலைமேல் வைத்தான். என்னையே நான் அறிந்தேன். அப்பொழுது என் மனம் அது இறந்து பட்டது.

குருவானவர் அன்பருக்கு அன்பானவர். ஆனந்தத்துக்கு காரணமான மௌனியாக இருப்பவர். இறையருள் பெற்ற குரு தேசிகர்.

அவருடைய பாதத்தை என்னுடைய தலையில் வைத்தார். நான் என்னை அறிந்தேன். என் சொரூபத்தை அறிந்தேன். மனமற்ற நிலை அடைந்தேன். என் மனமானது இறந்து விட்டது.

"அன்பருக்கு அன்புஆன மெய்யன்".

ஸ்ரீராமகிருஷ்ணர் உடல்நலம் குன்றி படுத்தபடுக்கையாய் இருந்தார். .கடும்நோய் அவரைப் பாதித்திருந்தது . பல சீடர்கள் ஒருவருக்கொருவர் சளைக்காமல் அவருக்கு சேவை செய்துவந்தனர் .

---

அதில் மிகமுக்கிய பங்கு வகித்தவர் திரு சசிபூஷணர் . தன் குருவின் கழிவுக் கலயமெடுத்து தினமும் சுத்தம் செய்வார் .

ஒரு நாள் வழக்கம்போல் இரவில் எழுந்து கழிவுக்கலயத்தை சுத்தப்படுத்த வெளியே சென்றார் .

வெளியே கடும்குளிர் . தன் வேலைமுடிந்து திரும்பி வர அவரது கண்கள் தன்னுடைய குருவின் மேல் விழுந்தன .

படுக்கையில் கிழித்த நார்போர்கிடந்த குருதேவர் சற்று அசங்கினார் .அருகில் இருந்தக் கோலை எடுத்து தட்டுத்தடுமாறியபடியே எழுந்தார்.

பின் மெள்ள மெள்ள கஷ்டப்பட்டு நடந்தார். பின் ஒரு போர்வையை எடுத்துக்கொண்டார் .

திரு சசிபூஷணர் அவர்பின்னால் வேகமாகச்சென்றார் . "பாவம் குருதேவருக்கு குளிர் அதிகமாகத்தெரிந்திருக்கும் . நம் ஒருவரையும் சிரமப்படுத்தக்கூடாது என்று தானே நடந்து போர்வயை எடுத்திருக்கிறார். நான் இதை முதலிலேயே செய்யாமல் விட்டேனே" என மனம் வருந்தினார்.

பின் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் '"குருதேவ் நான் எத்தனைக்கவனக்குறைவாக இருந்து விடடேன் .என்னை மன்னித்துவிடுங்கள். என்னிடம் தாங்கள் ஒரு போர்வை ஒன்று கேட்டிருந்தால் நான் உடனே வந்து கொடுத்திருக்க மாட்டேனா என்ன!
இத்தனை உடம்பில் தாங்களாகவே எழுந்து.........."

அவர் முடிப்பதற்குள் குருதேவ் சொன்னார் " என் அன்பு மகனே நீ இந்தக்குளிரில் வெளியே போவதைப்பார்த்தேன் .உன்னைத்தாக்கிய குளிர என்னையே தாக்குவது போல் தோன்றியது .மனம் வேதனையுற்றது ஆகையால்
உனக்குப்போர்வை எடுத்துவரத்தான் நான் எழுந்திருந்தேன்."

சீடரின் கண் கலங்க அவர் காலில் அப்படியே விழுந்தார்.

குரு அன்பானவர். கருணை உள்ளவராக இருப்பார் குருவின் அன்பு அபரிதமானது.

தாயுமானவருக்கு குருவருளால் கிடைத்தவை பல. உலகத்தை இந்திர ஜாலம், கனவு, கானல் நீரென் நினைக்கும் மனப் பக்குவம் ஏற்பட்டது.

- இறையைச் சார்ந்து வாழும் வாழ்வு கிட்டியது.
- பத்தி மகிழ ஆனந்த வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது (பொருள். 6)
- யான், எனது என்பன அற்றன (மண்டலத்.100)
- மேல வாயுவைக் கீழ்படுத்து மூலத்து வெந்தழலை எழுப்பி அமிர்தம் பருகும் தகைமை உருவாயிற்று (பாயப்.28)
- இன்ப நிட்டை கிட்டிற்று (உடல்.72)
- தத்துவப் பேயோடே தலையடித்துக் கொள்ளாமலிருக்கும் வாய்ப்பு வந்தது (உடல்.29)

## ஆனந்த மோனன்

மௌன நிலையிலே இருந்தும் கூட செயல்கள் புரியலாம். அங்கே நிலைத்து விட்டால், நாம் நமது அடையாளமாக இப்பொது இருக்கிறோமே, அதை இழந்து விடுவோம் என்று பயமும், சிற்றின்ப நிலையாக அந்த பற்றும் இருப்பதால், மனிதன் இறையை நோக்கிச் செல்வதை மறுக்கிறான்.

அது தான் தோன்றும் பொருள்களின் மீது பற்று கொண்டு, மேன்மேலும் சிக்கல்களில் சிக்கி, தனது இயல்பு மௌனமே என்கிற அமைதி, ஆனந்த நிலையை மறக்கிறான்.

இதுவே தன்முனைப்பு. தன்முனைப்பு குருவின் தன்மையிலே இருந்து விலகி விட்ட நிலை.

குருவானவரின் தன்மை மௌனம் என்று சொல்லப்படும் போது, நாம் நினைப்பது, அப்படி எனில் அவர் ஏன் பேசினார் என்று.

கேட்பவர் மௌனத்திலே இல்லாதது தான் இது நிரூபிக்கிறது... குரு பேசுகிற போது, மௌனத்திலே இருந்து குரு விழிப்பு நிலையை விட்டதாக ஒரு உதாரணம் தர முடியுமா? என்றால் முடியாது.

அப்படி என்கிற போது புறத்திலே தோன்றும் ஒரு விசயத்தை விட, குருவின் தன்மை எப்போதும் உயர்ந்ததே என்று தீர்மானமாகும். வார்த்தைகளை பிடித்துக்கொண்டு குருவை தவற விடும் நிலை எப்போதும் நல்ல பலன்களைத்தராது.

நாம் இப்போது பிறர் என்றும், பிற மார்க்கம் என்றும், பிற குரு என்றும் பிரிக்கிற அனைத்தும் கூட நமது முனைப்பு எடுத்த பிற வடிவங்கள் தான்.

நாம் மௌனத்திலே நிலைத்தால் இதெல்லாம் இருக்கிறதா... நீடிக்கிறதா என்று தெரிந்து விடும். வெளியில் ஒரு பொருள் இருப்பதாகவும், அதற்கு வடிவம் கொடுப்பதும் எண்ணமே தான். தோற்றங்களுக்கெல்லாம் ஆதியாம் மௌனம்.

எண்ணத்திற்க்கு முன்னும் பின்னும் மௌனமே தான். இந்த விழிப்பு நிலையைத் தொட்டுக்கொண்டே இருந்தால், வாழ்விலே எங்கும் சிக்கல் இல்லை.

குரு பேசுகிறாரா? பேசட்டும்... குருவின் தன்மையாம் மௌனத்திலே இருந்து, அப்பா உங்களை விட்டு நான் பிரியமாட்டேன் என்று சீடன் இருக்கிற போது, அந்த நிலையிலே செயல்கள் செய்யும் போது, முனைப்பு என்பது முளைக்காது மௌனமே இந்த செயலின் மூலம் என்று ஒடுங்கும்.

தன்னுடைய இருப்பைத்தேடி சீடன் உயரும்போது, தியானத்திலே இருப்பை நோக்கி தானாகவே செல்கிறார்... அங்கே தனது இருப்பு என்பது இறை நிலையே என்கிற வாய்ப்பு மட்டும் கிடைக்கும் போது தான் சரணாகதி தேவைப்படுகிறது...

சரணாகதிக்கு என்று தனியாக முயற்சி வேண்டியதில்லை... சீடன் முடிவெடுத்திருந்தால், அவனது உறுதியின் அளவுக்கு ஏற்றார் போல, மௌனத்திலே மூலத்தோடு தூக்கி நிறுத்தும் பொறுப்பு குருவுடையது...

அங்கே நமது அப்பன் நின்று கொண்டே பார்த்துக் கொண்டிருக்கிறார்... பல நுண்ணிய நிலைகளின் சாரம் சீடனின் கருமையத்திலே பதிக்கப்படுகிறது. கேட்காவிட்டாலும் கூட.

அந்த நிலையிலே இருந்து, இறை நிலையிலே நுழைவதற்கு முன், இந்த மனம், உயிர் தன்மாற்றங்கள், தியானிக்கிற உடலிலே ஏற்படும் மாற்றங்கள், இதயத்தின் இயக்கம் என்ற பல வித நுண்ணிய நிலைகளின் விளக்கம் கருமையத்திலே பதிவாகி விடும்.

மௌனத்திலே நீடித்து நிற்கும் அளவுக்கு அனைத்து விசயங்களும் இங்கே முறையாக, சீடனுக்குள் அறிவாக அமைந்து விடும். அதுவே குருவின் தன்மை.

குரு என்றால் சாதாரணம் அல்ல… அவர் உடலைக்கொண்டு இங்கே பேசுவார் ஆனால் அங்கே சீடனுக்காக தனது இயக்கத்தை எடுத்துக்காட்டிக்கொண்டே இருப்பார்… குருவைக்கட்டுப்படுத்த எவராலும் இயலாது.

ஒன்று நிச்சயம். குருவானவர் எப்போதும் தன் பிள்ளைகளுக்காக காத்துக்கொண்டு தான் இருக்கிறார்.

தன்னை அன்றி ஒரு பொருளும் இல்லை என்று சீடன் ஒடுங்கி நின்று உணர்ந்தால் ஒழிய புறப்பொருள்களால் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததே.

அங்கே குரு சொல்வார், மௌனத்தினை விட்டு அசைந்தால் பிறந்து விடுவாய். பிறந்துவிட்டால், செயல்களும் விளைவுகளும் அனுபவித்தே தீர்வாய். அதனால், கருவுக்குள்ளே பிறக்காதிரு. உம்மை அடை போல காப்பது எமது வேலை என்று நிம்மதியாக, ஆனந்தத்திலே நிலைத்து நில்..

## அருள்குரு நாதன்

குழந்தைக்கு உலகைப் பொருள்படுத்தும்அறிவு வருகிற வரையில் தாய் அதைக் காப்பாற்றுகின்றாள்.

குழந்தைக்குத் தாய் வழி காட்டியாக இருந்து தந்தையையும் மற்ற உற்றார் உறவினர்களையும் உலகப் பொருள்களையும் விளக்குகின்றாள்.

எனவே தாய் குழந்தைக்கு முதல் குரு ஆகின்றாள்.

உலகில் வாழ்வதற்கு வேண்டிய சொத்தையும் உலக அறிவையும் உலக வாழ்வுக்கு வேண்டிய தொழிலையும் தந்தை தருவன் மூலம் அவர் இரண்டாவது குரு ஆகிறார்.

அக்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தைத் தருபவர் ஆச்சாரியர் ஆகின்றார். அவர் மெய்ப்பொருளைக் காட்டித்தருகிறார்.

குருவானவர் மௌனமாகவே இருப்பார். அதிகம் பேசமாட்டார். ஆனந்தத்தை தருகின்ற மௌனத்தில் இருப்பார். மௌனத்தில் ஆனந்தமாக இருப்பார், ஆனந்தத்திற்குக் காரணமான மௌனத்தில் இருப்பார்.

அக்ஞானத்தை அகற்றுவதால் அவரே மெய்ஞ்ஞானகுரு ஆகிறார். அவரைத்ததான் அருள்குரு என்று சொல்ல வேண்டும்.

## தன்பாதம் சென்னியில் வைத்தான்

குருவை விட குருவின் திருவடிக்கே மதிப்பு அதிகம்.

குருவின் திருவடிகளை உறுதியாகப் பற்றிக் கொண்டால் சகலமும் கிடைக்கும் காரணம் குருவின் திருவடிச் சிறப்பு அத்தகையது.

ஆதி சங்கரர் அம்மாவின் திருவடிகளை சௌந்தர்யலகரியில் புகழ்ந்து போற்றுகிறார்.

“அம்மா! உன் திருவடிகள் எம் போன்ற பக்தர்களைக் காக்கின்றன. பயத்தை அகற்றுகின்றன.உன்னைத் தவிர வேறு யார் எங்களைக் காக்க முடியும்?

கேட்பதற்கு அதிகமாகவே வரம் அருளும் தாய் அல்லவா நீ! உன் திருவடியை வணங்குகின்றோம். எம்மைக் காத்து ஆரோக்கியமாக வாழ ஆசிர்வதிப்பாயாக! என்று வேண்டுகிறார்.

குருவடி என்பது அவரவர் இஷ்ட தெய்வத்தின் திருவடி! இது தான் சூட்சமம்! ரகசியம்! புரிந்து கொள்ளுங்கள்.

உடலில் உள்ள நோயைத் தீர்ப்பதற்கு மருந்தை ஊசியின் மூலம் உடலுக்குள் செலுத்துகிறோம். அருள்குருநாதன் ஞானத்தை உள்ளத்தினுள் செலுத்துவதற்குத் தீட்சை என்று பெயர்.

கண்ணின் மூலமாகவும், ஸ்பரிசத்தின் மூலமாகவம், சங்கல்பத்தின் மூலமாகவும் ஞானகுரு ஞானத்தை நம் உள்ளத்தினுள் செலுத்துகிறார்.

கண்ணின்மூலம் அவர் அச்செலைச் செய்யும்பொழுத அது துரிய தீட்சை எனப்படுகிறதது.

அவர் சங்கல்பத்தின் மூலம் அச்செயலைச் செய்யும்பொழுது அது சங்கல்ப தீட்சை எனப்படும். ஸ்பரிசதின் மூலம் அவர் அதைச் செய்தால்அது ஸபரிச தீட்சை என்படும்.

ஸ்பரிச தீட்சையை ஞானகுரு தம் திருவடிகளின் மூலம் செய்வாரானால் அது திருவடி தீட்சை எனப்படும்.

ராமகிருஷ்ணர் விவேகானந்தரின் நெஞ்சில் தம் வலக்கரத்தை வைத்து அவருக்குப் பர ஞானத்தைத் தந்தார்.



கபீர் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றியவர். எனவே இராமனந்தர் இஸ்லாம் மதத்துப் பெரியாரிடமிருந்து தீட்சைப் பெற்றுக் கொள்ளும்படி கபீருக்கு அறிவுரை கூறித் தாம் அவருக்குத் தீட்சை தர மறுத்தது விட்டார்.

ஆனால் கபீர் இராமனந்தரிடம்தான் தீட்சை பெற வேண்டுமென்ற பேரார்வம் கொண்டிருந்தார்.

இராமனந்தர் ஒவ்வொரு நாளும் காலை சரியாக நான்கு மணிக்குக் கங்கயில் நீராடப் போவார். அதைக் கபீர் கவனித்து வந்தார்.

அமாவாசை அன்று இராமனந்தர் கங்கையில் நீராட இறங்கிப் போகும் படிக்கட்டில் கபீர் படுத்துக் கொண்டார்.

-----------------------------------------------------------------------------------------------

இருளாக இருந்தமையால் அவர் படுத்திருந்தது தெரியவில்லை. இராமனந்தர் பாதம் கபீர் மேனியின்மேல் பட்டதும் “ராம்” என்று ராமானந்தர் கூறினார்.

கிடைத்தது மந்திர தீட்சை என்று கபீர் பேருவையுடன் எழுந்திருந்தார்.

இராமனந்தரிடம் தீட்சையும் ஆசியும் பெற்றுக் கபீர் ஞானியானார். இவ்வாறு அருள் குரு நாதன் தாம் பெற்ற ஞானத்தைச் சீடர்களிடம் செலுத்துவதுண்டு.

இங்கு தாயுமானவர் தலையில் குருவானவர் அவரது திருவடியை வைத்து உபதேசித்தார்.

## என்னைத்தான்அறிந்தேன்

வேதாந்தக் கோட்பாட்டின்படி நாம் பிரம்மம் ஆகின்றோம். நம்மைப் பிரம்மத்துக்கு அன்னியமாக நினைப்பதும் – உணர்வதும் நம்மை அறியாத நலையே ஆகும்.

தந்தையும் தாயும் நம் உடலை வளர்த்து அதற்கு ஓர் பெயரிட்டு நம்முடைய உண்மைச் சொரூபத்துக்கு அன்னியமானவற்றை எல்லாம் நம் மயமாகக் கருதும்படி நமக்குப் பயிற்சி தருகிறார்கள்.

நம்முடைய பழைய வினையும் நம் பெற்றோர்கள் நமக்குக் கொடுக்கும் பயிற்சியும் நம்மமை யார் என்று அறிந்து கொள்ளாது தடுத்து வைக்கின்றன.

நம்முடைய உண்மை சொரூபத்தை அறிந்து கொள்ளாது நம்மை என்னென்னவாகவோ கருதி மயக்க நிலையில் இருந்து வருகின்றோம்.

ஞானகுரு நம் மயக்கத்தைப் போக்கி நம்முடைய உண்மையான சொரூபத்தை நமக்குக் காட்டித்தருகிறார்.

நம்மை நாம் அறிந்து கொள்ளாத வரையில் நமக்கு விமோசம் இல்லை.

நிறை கர்ப்பமாக இருந்த பெண் புலி ஒன்று ஆட்டுமந்தையின் மீது பாய்ந்தது. அந்த பாய்ச்சல் வேகத்தில் அதன் வயிற்றிலிருந்து குட்டி வெளியெ வந்துவிட்டது.

அப்புலிக்குட்டி ஆட்டு மந்தையுடன் வளர ஆரம்பித்தது. ஆட்டைப் போலவே புல்லை மேய்ந்து பயந்த நிலையில் வளர்ந்து வந்தது.

தான்புலி என்பதை மறந்து தன்னை ஆடாகக் கருதி ஆடுகளோடு சேர்ந்து வாழ்ந்து வந்ததது.

மற்றொரு சமயம் வேறொறு புலி அந்த ஆட்டு மந்தையைத் தாக்க வந்தது.

தன் போன்ற மிருகம் அங்கு இருப்பதைப் பார்த்தது. அதை அந்த ஆட்டுமந்தையிலிருந்து பிரித்துக் காட்டுக்குள் வெகுதூரல்ம் துரத்திச் செனறது.

பிறகு அந்த ஆட்டுப்புலி வாயில் மாமிச் துண்டைத் திணித்தது. “நீயும் நானும் ஒன்று” என்று கூறி புலி உறுமியது.

ஆட்டுப் புலியும் தன் சொந்த சுபாவத்தைப் பெற்றுத் தான் புலி என்பதை உணர்ந்து அதன் பிறகு ஆட்டுமந்தையை வேட்டையாட ஆரம்பித்து விட்டது.

நாம் ஆன்ம பொரூபம் என்பதை மறந்து நம்மை உடல் சொரூபமாகவும் மனோ சொரூபமாகவும் கருதி துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஞானகுரு மந்திர தீட்சையின் மூலம் நம்முடைய சொரூபத்தை நமக்குக் காட்டித் தருகிறார்.

தம் குருநாதர் தம் சொரூபத்தைக் காட்டத் தாம் அறிந்து கொண்டதை “ என்னைத்தான்அறிந்தேன்” என்று தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

“தன்னை உணராமல் வாழ்ந்து என்ன பயன்? தன்னை உணர அனைவரும் ஒன்று என தெரியும். குடும்பத்தில் உலகத்தில் பிரச்னை குறையும்.

---

குருவை நேரில் சந்தியுங்கள், உபதேசம் பெறுங்கள் தீட்சை பெறுங்கள். தவம் செய்யுங்கள்! தன்னை உணர தடையாய் இருக்கும் கர்ம வினைகளை அழியுங்கள்.

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனி பெருங்கருணை அருட்பெருஞ்சோதி." என்பது வள்ளலார் வாக்கு.

## மனம் தான்இறந் தேனே-

"மனநாசம் மெய்யென்று உன்வாசம் அறிவேனே..
பலவேசம் கொண்டாலும் உன்பாதம் பிறியேனே..

என்னோடு நீ இருந்தால்!"

குருவானவர் தம் தலையில் பாதத்தை வைத்ததால் தாயுமானவருக்கு என்ன நேர்ந்தது.

மனோநாசம் ஏற்பட்டது. மனமற்ற நிலையை அடைந்தார்.

"மனம்" இல்லா, இழந்த நிலையைத் தூயநிலை எனத் தாயுமானவர் குறிப்பிடுகின்றார். இந்த "இன்மை", மனதின் செயலற்ற நிலையாக இருக்க வேண்டும்.

இதனைத் தாயுமானவரின் பாடல்களின் சில அடிகள் தெளிவுறுத்துகின்றன.

- நான்-நீ யென்று இரண்டிலை எனக் கூறி நடுவே முளைத்த மனதைக் கட்டவியலாது வாடும் நிலை உண்டு (கருணா.4)
- இத்தகு மனதைச் சாராமைக்கு வழியொன்றுணடுட. இறைவன் அருளும் அறிவின் நிருவி கற்பாங்கமாம் சாசுவத நிட்டையே அது (சச்சி.1)
- மனமாயைக் குடிகெடுக்க. முற்றிலும் அழிக்க இறைவனாலேயே இயலும் (பன்மாலை.3)
- அந்நிலையில் நெஞ்சம்தேட்டம் அற, இறைவனின் அருட்செயலில் நிற்றல் வேண்டும் (ஆசையெனும்.3)
- மனம் தன்னுடைய வழியற்று என்னுழை கிடப்ப இறைவன் தண்ணருள் வேண்டும் என்பர் (ஆசை.40)
- அந்நிலையில் மன அழுக்குகளை நீக்கி இறைவன் அவன் விருப்பப்படித் தனக்கருள வேண்டுகின்றார் (எனக்கென்.1)

- மாயை தரு மனம் தன் புரைகள் தீரும் போதுதான் உயிர் ஈடேற்றம் பெற முடியுமென எண்ணுகின்றார் (மண்டலம்.8)
- அம் மனமற்ற நிலையில் பரமானந்த வெள்ளம் பெருகும் (பாயப்.12)
- பூரண நிட்டடையில் ஆழ முடியும் (பாயப்.24)
- மறிந்த மனமற்ற மவுனம் செறிந்திடவே...(உடல்,76)
- "உள்ளதே போது நானானெனக் குளறியே யொன்றைவிட் டொன்று பற்றிப் பாசக் கடற்குளே வீழாமல்மதற்ற பரிசுத்த நிலையை யருள்வாய் (பரிபபூரணாா.10)
- மனமில்லை அம்மனத் தினமில்லை வேறுமொரு வரவில்லை போக்குமில்லை (ஆனந்த.10)

இத்தகு, மனதற்ற பரிசுத்த நிலை பெற வழியும் கூறுகின்றனார் நம் தாயுமானவர்.

ஆசையறுத்தல், யோகம், பிராணலயம் என்பனவற்றால் இந்நிலை வரும் என்பது தெரிகின்றது.

மனோலயத்திற்கும் மனோநாசத்திற்கும் என்ன வேறுபாடு?

மனம் விருப்பமான ஒன்றிலோ அல்லது துன்பமான ஒன்றிலோதான் லயமாகும். அப்படி ஏதாவது ஒரு பொருளில் நிறுத்தி வைப்பதற்கு லயம் என்பது பெயர். ஒரு மனிதன் சிரிக்கிறான் என்றாலும் அழுகிறான் என்றாலும் மனோலயம்தான்.

ஆனால் மனோநாசம் என்பது ஒரு மனத்தினுடைய தன்மை அறிந்து அந்த மனத்தின் கிளைகளை உருவாக்காமல் தனித்து விடப்பட்ட மனம். அதற்கு அடுத்தபடியாக தொடர்ச்சியான இன்னொன்றுக்கும் உள்ள இடைவெளிக்குத்தான் மனோநாசம் என்று பெயர்.

மனோலயம் என்பது மகிழ்ச்சியை உருவாக்கும்; அறிவை உண்டாக்கும். ஆனால் மனோநாசம் என்பது ஞானத்தை உருவாக்கும்.

உலகமக்கள் விரும்புவது மனோலயம் ஞானிகள் விரும்புவது மனோநாசம்.

ஆகவே துன்பத்தில் மனம் சார்ந்து துன்பத்தில் மனோலயம் ஆகாமல் ஆனந்தமான நிலையில் மனோலயம் ஏற்படுத்தி அனுபவிப்பதே ஆன்மிகம்.

மனதை வெட்டவெளியாக்கி மனதை நிர்மூலமாக்கினால் பிரபஞ்ச ஞானம் உண்டாகும். இதனையே ஒரு ஞானி

சினம் இறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனம் இறக்கக் கல்லார்க்கு வாய் ஏன் பராபரமே! –

என்று கூறுகிறார்.

## மனம் ஒரு பொக்கிஷம்:

ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவுண்டு.

அந்த விளைவிலிருந்து யாரும் தப்ப முடியாது.

ஒவ்வொருவரும் தனக்கோ, பிறருக்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ, உடலுக்கோ, உயிருக்கோ தீங்கு நேரா வண்ணம் நடந்து கொள்ள வேண்டும்.

அப்போது தான் அமைதியும், இன்பமும் ஏற்படும். அறிவு வளர்ச்சிக்கும் வழி ஏற்படும். இன்றேல், அமைதி குன்றி வளர்ச்சி தடையுறும்.

அவரவர்கள் செய்யும் தவறுகள் தான் மதவாதிகளால் பாவங்கள் என்றும், சிந்தனையாளர்களால் தவறுகள் என்றும், அரசியல்வாதிகளால் குற்றங்கள் என்றும் கூறப்படுகின்றன.
இந்த மூன்றுமே ஒரே பொருளைக் குறிப்பது தான்.

நாம் ஒரு முறை ஒரு செயலைச் செய்துவிட்டால், அது நமது உடலுறுப்புகளில் பதிந்து மீண்டும் அதையே செய்யத் தயாராகி விடும்.

இந்தப் பதிவு, எண்ண அழுத்தமாக மூளையிலும் பதிந்து விடுகிறது. அதுவுமின்றி, சந்ததித் தொடர்புக்குக் காரணமாக உயிர் வித்திலும் அது பதிந்து விடும்.

ஆகவே தான், தீமையைத் தவிர்த்து நல்லதே செய்ய நாம் பழகிக் கொள்ள வேண்டியிருக்கிறது. இதற்குத் தான் ஒழுக்கம் என்று பெயர்.

பிறர்க்கு எவ்வகையிலும் தீமை ஏற்படாதபடி எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றையும் ஒழுங்குபடுத்திக் கொண்டு வாழ்வதுதான் ஒழுக்க வாழ்வு ஆகும்.

---

மற்ற எல்லாம் இழுக்கான வாழ்வாகிய துன்பத்தையே தான் கொடுக்கும். இதனால், காரண காரிய விளைவு அறிந்து இன்பம் தரும் நற்செயல்களிலேயே ஒருவன் ஈடுபடவேண்டுவது அவசியமாகிறது.

இதே உத்தி நிலையை, மனம் இறத்தல் என்பதாகத் தாயுமானவர் நினைத்ததை முன்பும் பார்த்தோம். அவர் பாடல் முழுமையிலும் இந்தக் கருத்து பயின்று வருகின்றது.

"நான்" என்னும் ஆணவ மயக்கம் இருக்கும் வரை, மனம் இறையோடு கலந்த வெளி ஆவதில்லை. அத்தகு மாய மனம் இறக்கும்போது. மாயை விலகும் போ ஞானசுகம் கிடைக்கின்றது.

"வைத்த மௌனத்தாலே மாயை மனம் இறந்து

துய்த்துவிடு ஞான சுகம். (உடல். 81)

---

---

# 38. மனமும் மௌனமும்

மனம் இறக்கும் போது, மௌனம் மட்டுமே மீந்திருக்கின்றது. (மறிந்த மனமற்ற மௌனம். (உடல்.76)

இத்தகு மனத்தைத் தாயுமானவர் வென்மையை அவர் கூறுவது, வாழ்க்கை வரலாற்றுச் செய்தியாக அமைகின்றது எனில் மிகையாகாது.

"உள்ளபடி யாதும்என உற்றுணர்ந்து எனக்கணமே

கள்ளமனம் போனவழி காணேனன் பராபரமே" (பரா.75)

அந்த நிலைக்கு முன்நிலையாக மனதைப் போக்கலின் தேவையும், அதை அறியாமையும், அறியாமல் அலைந்தமையும் அவரல் அழகுறச் சுட்டப்படுகின்றன.

---

“சினம் இறக்கக் கற்றாலும் சித்திஎல்லாம் பெற்றாலும்

மனம் இறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே (பர.169)

பூராய மாய் மனதைப் போக்க அறியாமல் ஐயோ

பாராய் அலைந்தேன் அரசே பராபரமே. (பரா.168)

மௌனம் என்னும் மந்திரமொழி.

வார்த்தைகள் இல்லாத புத்தகம் மௌனம் . ஆனால் வாசிக்க வாசிக்க இதற்குள் வாக்கியங்கள்.

மௌனம் என்பது வெளிச்சம். நம்மமை நாமே இதற்குள் தரிசிக்கலாம்.

மௌனம் என்பது இருட்டு. எல்லாத் துன்பங்களையும் இதற்குள் புதைக்கலாம்.

மௌனம் என்பது மூடி. இதைத் தயாரித்து விட்டால் எல்லா உணர்ச்சிககளையும் புட்டி வைக்லாம்.

மௌனம் என்பது போதி மரம். இதுவரை சொல்லாத உண்மைகளை இது போதிக்கும்.

மௌனம் என்பது வரம். நம்மிடம் நாமே பெறுவது. இனபம், துன்பம் இரண்டையும மௌனம் கொண்டு சந்தித்தால் எப்போதும் இதயம் இயல்பாக இருக்கும். இதழ்களை இறுக மூடி நாம் நமக்குள் இறங்குவோம்.

அதிகம் பேசாதவனை உலகம் விரும்புகிறது. அளந்து பேசுகிறவனை உலகம் மதிக்கிறது. பேசாத ஞானியை உலகம் தொழுகிறது. அமைதி மேலோட்டமானது. மௌனம் உள்ளிருந்து வருவது.

மௌனம் வார்த்தைகள் அற்ற நிலை. எண்ணங்கள் அற்ற நிலை. ஓம் எனும் பிரணவத்தின் பொருள் – அறிவாக உள்ள இறைவனை உயிராக உணர்கிற மனிதன், பேரின்ப நிலையாகிற மௌனத்தில் ஆழ்கிறான் என்பதே.

"தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னை" என மாணிக்கவாசகர் கூறுகிறார்.

நம்மை முற்றிலும் அவருக்குக் கொடுகின்றளவு அவர் நம்மை ஏற்றுக்கொண்டு அவரை நமக்குக் கொடுத்து விடுகிறார்.

அவரை நாம் பெறுகின்றளவு பேரானந்தத்தை அனுபவிக்கும் பேற்றினைப் பெற்று மோன நிலையை அடைகின்றோம்.

பேரானந்தப் பெருங்கடலிலிருந்து வீசிய காற்று பட்டதும் நாரதர் தம்மை மறந்து பக்திப்பரவசமடைந்தார்.

எப்பொழுதும் "நாராயண, நாராயண" என்று உச்சரித்த வண்ணம் ஆனந்தத்தில் மூழ்கி இருந்தார்.

சுகர் பேரானந்தக் கடலைப் பார்த்தார். பார்த்தவுடன் உடல் உணர்வை எல்லாம் கடந்து ஞானப் பெருநிலையை அடைந்து விட்டார்.

மகாதேவர் அப் பேரானந்த கடலின் நீரை ஒருகை அள்ளிப் பருகினார். அது அவருக்கு போதுமானதாகப் போய்விட்டது.

இனி யார்தான் அதை முற்றிலும் அறியமுடியும், நம்மை நாம் அவருக்குக் கொடுக்கின்ற பொழுது அவர் நம்மை தம் வசம் ஆக்கிப் பேச்சற்ற பெருநிலையில் வைத்து விடுகின்றார்.

இதனைத் தாயுமானவர் "மடக்கிக்கொண் டான்என்னைத் தன்னுள்-சற்றும் வாய்பேசா வண்ணம் மரபும்செய்தான்" என்கிறார்.

## 39. மனம் பேரின்பம் அடைவது எப்போது?

அறிவு மனத்தைச் செலுத்தும் போது, மனம் எதிர்க்கிறது. ஏசுகின்றது. இடையே அகர்பட்ட நெஞ்சம் கருகுகின்றது. இறைஅருளை நாடுகின்றது.

. . . . . . . . . . . . . . . . .. . அதைக்கேட்ட
அன்று முதல் இன்று வரையும்

---

அநியாய மாய் எமை அடக்கிக் குறுக்கே
அடர்ந்து அரசு பண்ணி,எங்கள்

முன்னாக நீஎன்ன கோட்டைகொண் டாய் என்று
மூடமன ம் மிகவும்ஏச,
மூண்டு எரியும் அனலில் இட்ட மெழுகாய் உளங்கருகல்
முறைமையோ? பதினாயிரம்

சொன்னாலும் நின் அருள் இரங்க இலையே இனிச்
சுகம்வருவ து எப்படிசொலாய்.
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரம்
சோதியே சுகவாரியே. (சுகவாரி12)

அத்தகைய மன வேறுபாடுகளி ஒழியும் போதுதான் அல்லல் ஒழிகின்றது. பேரின்பம் கிடைக்கின்றது.

"ஒருமை மனதாகியயே அல்லல்அற நின் அருளில்

ஒருவனான் வந்திருக்கின்..................................................... (எங்கு.1)

"பிறியாத தன்அருட் சிவஞானி யாய்வந்து

பேரிசய வாசி யாலே

பேரின்ப உண்மைளை அறித்தனை என் மனது அறப்

பேர் அம்பலக் கடவுளாய்.... (தேஜோ.6)

அதற்குப் பல வகையில் இறையை வேண்டுகின்றார்.

- வேண்டியமை கிடைக்கும் போது. மனம் தனக்கு என வழியற்று ஓய்ந்து கிடக்கின்றது. (ஆசை.40)

- அந்நிலையில் இறைவன் விருப்பப்படி அனைத்தும் ஆகின்றது. (எனக்கென்.1)

அதற்கு மௌனம் மௌனம் என்று சொன்னால் போதாது. மௌனம் கடைபிடிக்க வேண்டும்.

"சொல்லால் மவுனம் மவுனம் என்றே சொல்லிச் சொல்லிக் கொண்டே

தல்லான் மனம் அறப் பூரண நிட்டையில் ஆழந்தது உண்டோ? (பாயப்.24)

- கல்வியால் இந்த உயர்வு கிடைத்தது எனக் கூறின் நெஞ்சம் கொதித்து எழும் (பரா.37)
- அந்த நிலையில் அது தீ உண்ட மெழுகுபோலப் பக்குவப்படுகின்றது. (பாயப்.21).
- சின்முத்திரையையே மெய்யாகத் தெளிகின்றது (பாயப்.42)
- உள்ளம் ஞான ஒளி பெறுகின்றது (உடல்.4)
- மனம் மதிப்பு இழந்து விடவேண்டும். (உடல்.72)
- மெய்ப்பொருளோடு யானிருக்கும்போது நெஞ்சம் போய் ஒலிக்கின்றது (ஏசற்ற.9)
- இறைவன் தண்ணருள் கிடைத்த விடத்து, நெஞ்சம் தேடினாலும் காணப்படாது (ஏசற்ற.10)

மனத்தின் இந்த அலை இயக்கம், எப்பொழுதும், தூக்க நேரம் போக மற்ற நேரங்களிலிலும் இயங்கிக்கொண்டே இருக்கிறது.

பிறந்தது முதற்கொண்டு இறக்கும் வரையில் அதன் இயக்கம் தொடர்ந்து நடைபெறுகிறது.

அதை நிறுத்திவிட வேண்டும் என்று= சிலர் நினைத்தால் அது அறியாமைதான்.

முதலாவது மனத்தினுடைய தத்துவம் அறியாததனால் தான் அதை நிறுத்திவிட வேண்டும் நினைக்கிறார்கள்.

மனத்தை நிறுத்திவிட வேண்டும் என்று நினைப்பதை விட அதை நல்ல முறையிலே பழக்கிவிட வேண்டும் என்று நினைக்கலாம்.

உதாரணமாக, மனம் அமைதியாக இருக்க வேண்டும், மனம் நிலைத்து இருக்க வேண்டும் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

அது நல்லது. நிறுத்திவிட வேண்டும் என்பது வேறு, நிலைத்து இருக்க வேண்டும் என்பது வேறு.

"அஞ்சும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலர்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கு இல்லை
அஞ்சும் அடக்கின் அசேதனம் என்று இட்டு
அஞ்சும் அடக்கா அவறிந் தேனே"

மனம் துரியத்தில் செயல்படும் போது "நிலைபேற்றுநிலை" என்றும்,

துரியாதீதத்தில் வருகிறபோது "நிறைபேற்றுநிலை" என்றும் சொல்கிறோம்.

துரியாதீதத்தில் மனம் நிறைநிலை அடையும்.

அந்த நிலையே தவத்தில் கடைசியாக அடைய வேண்டியது.

நாம் அவ்வாறு தவத்தில் பழகி மனதைச் சாதாரணப் பொருளிலிருந்து உயிருக்கு கொண்டு வந்து, உயிரிலிருந்து பரத்துக்கு கொண்டு வந்து எல்லாமாக  மாற்றி எந்த நிலையிலேயும் நிலைத்து நிற்கப் பழகவேண்டும்.

அது தான் தவம், யோகம் என்பதும் அதுவே. – (வேதாத்திரி மகரிஷி.)

## துரியாதீதத்தில் மனம் லயித்தால் பேரின்பம்.

துரியாதீத தவ வழிமுறையில் மனோ நாசம் கிட்டுமா….??? பேரின்பம் கிட்டுமா???

நிச்சயமாக அந்த மனோ நாசம் நிகழ்ந்தே தீரும்.

அப்படி நிகழ்ந்து நெகிழ்ந்தவர்கள் பல்லாயிரக்கணக் காணோர் இருக்கிறார்கள்.

பிராணனை சகஸ்ராதாரத்தில் நிலைப் படுத்தி பழகுவதற்காகத் மகரிஷி துரிய தவத்தை கொடுத்துள்ளார்கள்.

இதில் நல்ல தேர்ச்சியும் கால நீடிப்பும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

இந்த இரெண்டும் இருக்கும்போது மனம் தானாக நிலைப்படும். எண்ணங்கள் எழாது.

சரி துரியாதீதத்தில் எங்கு மனோ நாசம் கிட்டும் என்று மகரிஷி கூறியிருக்கிறார் என்றால்,

ஞானமும் வாழ்வும் என்ற புத்தகத்திலும், ஞானக்களஞ்சியம் என்ற புத்தகத்திலும் நிறைய பாடல்களில் வெகு அருமையாக விவரித்துக் காட்டியுள்ளார்.

நாம் அந்தப் பாடல்களை படித்து, அந்த அலை இயக்கத்தில் நம்மை சங்கமித்தால் மனோ நாசம் கிட்டும்.

அவைகளில் மிக மிக முக்கியமான பாடல்களில் ஒன்று தான்

*இறைநிலையோடு எண்ணத்தை கலக்க விட்டு
ஏற்படும் ஓர் அமைதியில் விழிப்பாய் நிற்க
நிறைநிலையே தானாக உணர்வதாகும்,
நித்தம் நித்தம் உயிர் உடலில் இயங்கும் மட்டும்
உறைந்து உறைந்து இந்நிலையில் பழகிக்கொள்ள
உலக இன்பங்களிலே அளவு கிட்டும்
கறை நீங்கி அறிவு மெய்ப்பொருளாகும்,

கரைந்துபோம் தன்முனைப்பு காணும் தெய்வம்- மகரிஷி

இவ்வளவு எளிமையாக விளக்கம் கூறி நம்மை செம்மை படுத்திவிட்டார் மகரிஷி.

எல்லா யோக மார்க்கங்களும் முயற்சியை மையமாக வைத்து தான் கூறி இருக்கிறது.

நாமும் எதுவரை முயச்சி செய்ய வேண்டும் என்றால்,

இறைநிலையோடு எண்ணத்தை கலக்க விடும் வரை முயற்சி செய்தால் போதும்.

இதில் நம்மை முழுமையாக உணர்வு ரீதியாக நம்முடைய உணர்வை அகன்ற நிலைக்கு கொண்டு போகப்போக ஒரு கட்டத்தில் தானாக விரிய முடியாமல்,

விரிந்து செல்வதற்கு இடமும் இல்லாமல் ஒரு நிலைக்கு மனம் வரும்.
அப்போது அந்நிலையில் ஒரு அமைதி நிலை ஏற்படும்.

அந்நிலையில் மனம் விழிப்போடு நின்றால் அமைதியில் மனம் உறைந்து காணாமல் போகும்.

அமைதி என்பது கற்பிப்பது அல்ல, கற்பிக்கப் படுவதும் அல்ல.

உருவாக்குவதும் அல்ல, உருவாக்கப் படுவதும் அல்ல.

தானாய் தானே நிலை பெறுவதே அமைதி நிலை.

இது தான் மௌன நிலையம் ஆகும்.

இந்த நிலையை வார்த்தையால் விளக்கிச் சொல்லவே முடியாது.

---

அப்படி சொன்னால், அது பொய் தான்.

இங்கு தான் ‘தியானம்’ என்று ஒன்று மலரவே ஆரம்பிக்கிறது.

இதற்க்கு முந்தைய நிலை வரை மனம் ஓர்மை படுவதற்கு ஒரு பயிற்சி முறை தானே தவிர, அவைகள் தியானமாக கருதுவது தவறு.

தியானம் என்பது ஒரு செயல் அல்ல.

தானாக நிகழ்வது.

ஏன் விழிப்பாய் நிற்க வேண்டும் என்றால்,

இங்கு கூட நம்முடைய கர்ம வினை நம்முடைய உணர்வு தளத்தை தாக்குவதற்கு தயாராக இருக்கும்.

நம்மை அங்கேயே தங்க வைப்பதற்கு தன்னுடைய முழு முயற்சியோடு செயல்படும்.
அதனால், விழிப்போடு இருப்போமேயானால், இங்கு என்ன இருக்கிறது…??? என்றால்,

முன்னால் உற்பத்தியான சுத்தவெளி என்ற நிலையைக் கடந்து,
நம்மால் உருவான எண்ணமற்ற, சூன்யமான அரூபமான எங்கும் முடிவில்லாத, உணர்வு தளம் வரும்.

அதுதான் சுத்தவெளி உணர்வு.

இந்த ஆகாய பெருவெளியில் வெறும் உணர்பவன் மற்றும் உணரப்படும் சூன்ய பெருவெளி மட்டுமே இருக்க முடியும்.

முதலில் நாம் உருவாக்கிய வெளி.

---

பிறகு அதுவே நமக்குள் தானாக மலர்ந்த ஒரு விஷயம்.

இது தானாக சித்தியான ஒரு நிலை.

அமைதி வந்துவிட்டால் தேடுதல் நின்று விடும்.

தியானத்தின் மீதான ஈர்ப்பும், கவர்ச்சியும் விட்டு விலகிவிடும்.

இந்த இடத்தில் தான் நிறைய பேருக்கு குழப்பம் உண்டாகும் இடம்.

அதனால் இதன் அருகில் வந்தவுடனயே அது தான் சுத்தவெளி அனுபவம் என்று உறுதி செய்து கொண்டு அதில் இன்னும் ஆழ்ந்து போகாமல், அடுத்த அடுத்த மார்கங்களை நோக்கி நகர ஆரமித்து விடுகிறார்கள்.

இந்த இடத்திற்கு வந்துவிட்டோமானால் சர்வ நிர்விகல்பத்தை நெருங்கி விட்டோம் என்று பொருள்.

இந்நிலையில் நாம் இன்னும் ஆழ்ந்து நம்மை இழக்க தயாராகிவிட்டால் சர்விகல்ப நிலை.

இந்த உணர்வை உணர்வது யார்....???
எது.......??? உடலா.....??? இல்லை மனமா......??? உயிரா.......??? தெரியாது. ஆனால் உணர்வு மட்டும் இருக்கும்.

ஆக, நம்மால் உணரப்படும் அந்த எல்லையற்ற மௌனம்,

தெய்வீக வெளி, இந்நிலையில் தான் *நிறைநிலை* என்ற அடுத்த கட்டம் நிகழும்.

இந்த வார்த்தைகள் எல்லாம் மகரிஷி யோசித்து எழுதவில்லை.

அது (இறை) அவராக தன்னை வெளிப்படுத்தி வந்தவைகள் தான்.

---

இது தான் தற்செயல் இயக்கம்.

ஏனெனில், மகரிஷி என்ற ஒரு தனி மனிதன் அங்கு இல்லை.
செயல் மட்டுமே இருக்கிறது, செய்பவன் இல்லாமல் இருக்கிறது.

இது தான் "நிறைநிலையே தானாக உணர்வதாகும்". உணரப்படும் காணாமல் போய்விட்டது.

உணர்பவனும் காணாமல் போய்விட்டான்.

அதனால் தான் *நரன் என்ற சிற்றறிவை நான் கடந்த போது நான் நீயாய் கூர்தலறம் வந்தியல்பு அறிந்தேன்* என்று கூறுகிறார் மகரிஷி.

ஆக, இயல்பில் அறிவதற்கு ஒன்றுமே இல்லை.

நான் உருவாகினதும் போய்விட்டது.
என்னுள் உருவானதும் போய்விட்டது.

நான் நானாகவே நிற்கிறேன்.

அனால், பழைய நான் இல்லை.

கவனித்த நான் காணாமல் போய்விட்டேன்.

அப்போ இருப்பது என்னவென்றால் அது தான் "தான்" (தானாய், சுயமாய், இறையாய்) என்ற முழுமை நிலை.

அப்போ மனோ நாசம் எங்கு துவக்கம் ஆகிறது என்றால்,
*ஏற்படும் ஓர் அமைதியில் விழிப்பாய் நிற்கும் நிலையில் தான்*

இங்கு வரும் வரை முயற்சி செய்து வந்துவிட்டால், அந்த இருப்புனர்வை தொட்டுவிட்டால், அது நம்மை துரத்த ஆரம்பித்துவிடும்.

நாம் எங்கு என்ன வேலை செய்து கொண்டு இருந்தாலும் நமக்குள்ளே ஊடுருவி அது மட்டும் தான் இருக்கும். வேறு எதுவும் இருக்காது.

இது தான் மனமற்ற நிலை.

மனம் இறக்கும் கலை, மனோ நாசம், என்பதாகும்.

இது எண்ணங்கள் அற்ற நிலை. எண்ணங்களுக்கு அப்பாலான நிலை.

இதை நாம் உணரும்போது மிஞ்சுவது ஞானமும் இல்லை, அஞ்ஞானமும் இல்லை.

இருப்பது அந்த ஒன்றினோடு ஒன்றுபட்ட நிலை மட்டுமே.

இயற்கையோ, நம்முடைய குருவோ நம்மை அனாதையாக நம்மை பிச்சை எடுக்க வைத்துவிட்டு போகவில்லை.

நமக்கு எனென்ன வேண்டுமோ அத்தனையும் இங்கே போதிய அளவிற்கு மேல் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

அதனால் வேண்டிப் பெறுவதற்கோ, கேட்டுப் பெருவதற்கோ ஏதுமில்லை.இருப்பதை உணர்ந்து கொள்வதற்கு தான் உண்டும்.

இந்த நிலையை தான் இயேசு மகானும் *கண்ணுள்ளவன் காணக் கடவன், காதுள்ளவன் கேட்க்கக் கடவன்* என்று கூறி இருக்கிறார்.

இந்நிலையை நாம் அடைந்துவிட்டால், கால்கள் இல்லாமல் நடக்க முடியும், சிறகுகள் இல்லாமல் பறக்கவும் முடியும்.

பறப்போம் பரவெளியில். பரவச நிலையில் திளைத்திருப்போம் என்றும் பேரானந்தமாக!!!

---------------------------------------------------------------

# 40. மனத்துறவு

---

பார் அனைத்தும் பொய்எனவே பட்டினத்து பிள்ளையைப்போல்

ஆரும் துறக்கை அரிதுஅரிது. நேரே

மனத்துறவம் அப்படியே. மாணா! இவற்றில்

உனக்கும் இசைந்த வாறு ஒன்றே ஓர். (உடல் பொய்.516)

பாரதம் பல துறவியர்களைப் பெற்றிருந்த போதும் மெய் ஞானத் துறவியாகவும், மிகச்சிறந்த கவிஞராகவும்.

'பார் அனைத்தும் பொய் எனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல் ஆரும் துறக்கை அரிது! அரிது!

என்று ஞானியர்களே வணங்கிப் போற்றிய மகானாகவும் விளங்கிய பெருமைக்குரியவர் பட்டினத்தாரே ஆவார்.

சோழமண்டலத்தில் காவிரி கடலோடு கலக்கும் காவிரிப் பூம்பட்டினத்தில் பிறந்த பட்டினத்தார் வணிகம் செய்து பெரும் செல்வத்திற்கு அதிபதியாக விளங்கினார்.

நவநிதியமும், மாடமாளிகையும் கொண்ட அவர் 'பூலோக குபேரர்' என்றே போற்றப்பட்டார்.

செல்வத்தின் சிகரத்திலே இருந்த அவர் 'காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே!' என்ற ஒற்றை வரி உபதேசத்தை உணர்ந்த மறுநொடியில் அனைத்து வசதிகளையும் உதறித் தள்ளி, தன் செல்வம் எல்லாவற்றையும் தானமாக ஏழையர்க்குத் தந்துவிடச் சொல்லி கோவணத்தோடு புறப்பட்டார். துறவியாகி தெய்வ அனு பூதியில் ஒன்றினார்.

அதற்குப் பிறகு அவர் எப்படி இருந்தார் என்பதை அவரின் ஒரு பாடல் மூலமாகவே நாம் அறியலாம்.

பேய்போல் திரிந்து பிணம்போல் கிடந்து இட்ட பிச்சை எல்லாம்

நாய்போல் அருந்தி நரிபோல் உழன்று நன் மங்கையரைத்
தாய் போல் கருதித் தமர்போல் அனைவர்க்கும் தாழ்மை சொல்லிச்
சேய் போல் இருப்பர் கண்டீர்! உண்மை ஞானம் தெளிந் தவரே!

பட்டினத்தடிகளின் துறவுக்கோலம் பற்றிக் கேள்விப்பட்ட அவ்வூர் அரசர் அவர் இருந்த பொது மண்டபத்திற்குச் சென்று அவரைப் பார்த்தார்.

குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடை மெலிந்த ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர்
என்ற பெரியோரின் வாசகத்திற்கு இணங்க
எல்லாவற்றையும் வினாடி நேரத்தில் வீசி எறிந்துவிட்டு
அம்மண்டபத்தின் ஒரு மூலையில் அமர்ந்திருந்த அடிகளைக் கண்டார் வேந்தர்.

அவரைப் பார்த்துக் கேட்டார் 'மண்ணுலகில் இந்திரனாக மாட மாளிகைகளோடு செல்வச் செழிப்பில் விளங்கிய தாங்கள் இத்துறவு நிலையை அடைந்ததால் பெற்ற பயன் என்ன?

பட்டினத்தார் பதில் பொருள் பொதிந்த தாக இருந்தது. 'இந்நிலையில் யாம் அடைந்துள்ள பயன் உமக்குத் தெரியவில்லையா. இது வரையில் நீர் உட்காரவும் நாம் நிற்கவுமாய் இருந்தது. இப்பொழுது நீர் நிற்கவும், நாம் உட்காரவும் ஆயிற்று என்றார்.

'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்பதைத் தான் நாமெல்லாம் அறிவோமே!
'பட்டினத்தார் நல்ல நல்ல பாடல் செய்யும்
பாட்டினத்தார்'
என்று உவமைக்கவிதர் சுரதா அவரை உளமாரப் பாராட்டி மகிழ்கின்றார்.

ஆம்! அற்புதமான வாழ்வியல் தத்துவங்களை, அனுபூதி அனுபவங்களை, உலகினர்க்கு தேவையான உபதேசங்களை, இறைவனின் இணையற்ற பெருமைகளை எல்லாம் இதயம் கவரும் இலக்கிய நடையில் விவரித்துள்ளார் பட்டினத்தடிகள்.
மற்ற நாட்டு பெருமக்கள் ஞானம் பெற்றதோடு தன் அளவில் நின்று

விட்டார்கள். ஆனால் நம் நாட்டிலோ ஞானிகள் கவிஞர்களாகவும் விளங்கிய காரணத்தால் தங்களின் மெய்ஞான உணர்வுகளை அமுதத் தமிழில் அழகுக் கவிதைகளாக ஆக்கிக் கொடுத்துள்ளார்கள்.

''என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய் தமிழ் செயுமாறே!
என்பது தானே அவர்களின் பெருமிதம்!

பட்டினத்தார் மனித குலம் முழுமைக்கும் அவர்கள் வாழ்நாள் முழுமைக்கும் ஆன ஒரு உபதேசத்தைத் தந்துள்ளார்.

நறுக்குத் தெறிக்காற் போல் நான்கே வரிகளில் தெரிவித்துள்ள அந்த பட்டினத்தாரின் உபதேசம் நம் செவிகளிலும், சிந்தையிலும் பட்டால் போதும்! நமக்கு ஞானம் துளிர்விடத் தொடங்கும்!

'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே!' என்ற ஒற்றை வரியில் அவர் உயர்ந்த ஞானச் சிகரத்தை அடைந்தது போல அவரின் நான்கே வரிகளை நாம் வாழ்வில் கடைப்பிடித்தால் போதும். அர்த்தமுள்ள வாழ்க்கை வாழலாம். எடுத்துக்காட்டு மனிதராக வரலாற்றில் நாம் இடம் பெறலாம்.

வாழ்வில் இன்பமும் வரும். துன்பமும் வரும் ஒளியும் இருளும் பனியும் வெயிலும் மாறிமாறி வந்தாலும் அனைத்தையும் ஒரே மனப் பக்குவத்துடன் நாம் எதிர்கொள்ள வேண்டும் இன்பம் வந்தால் எகிறிக் குதிப்பதும், துன்பம் வந்தால் துவண்டு போவதும் இல்லாமல் சம நிலையில் எதுவாக இருந்தாலும் எதிர் கொள்ளவேண்டும்.

அனைத்தும் ஆண்டவனின் திருவிளையாடலே! அவனின்றி ஒரேணுவும் அசையாது என்பதை பரிபூரணமாக நாம் உணர வேண்டும் என்று பாடலின் ஆரம்ப வரி உணர்த்துகின்றது.

'ஒன்றென்றிரு ! தெய்வம் உண்டென்றிரு!'
பிறக்கும் போது நாம் செல்வத்தை
எடுத்துக் கொண்டு வந்தோமா?

---

இறக்கும் போது நம்மிடம் உள்ள பணத்தை எடுத்துக் கொண்டு செல்கிறோமா இடை நடுவில் சேர்கின்ற செல்வத்தை நம்முடையது என்று எண்ணி சேர்த்து வைக்காமல்
அறச் செயல்களில் ஈடுபடு! அன்னதானம் செய்! உத்தமசீலர்களோடு உறவு வைத்துக் கொள் என்கிறது பாடலின் அடுத்தவரி.

‘உயர்செல்வம் எல்லாம் அன்றென்றிரு!
பசித்தோர் முகம் பார்!
நல்லறமும் நட்பும் நன்றென்றிரு.

பாடலின் இறுதி, உபதேசமாக பட்டினத்தார் பகர்வதை இப்போதைய மக்கள் இதயத்தில் பதிக்க வேண்டும்.
‘நடு நீங்காமலே நமக்கு இட்ட படி
என்றென்றிரு!
முன் வினையின் பாவ புண்ணியங்களின் படி இறைவன் நமக்கு தந்துள்ள வாழ்க்கை, வளம், வசதி இவ்வளவே என்ற மன நிறைவுடன் நடு நிலை பிறழாமல் அநீதியான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் அமைதியாக வாழ்வினை மேற் கொள்வாய்! என்கிறார் அடிகளார்.

உபதேச ரத்தினமாகத் திகழும் பட்டினத்தாரின் இப்பாடலை ஒவ்வொருவரும் வாழ்வின் உறுதிமொழியாக ஏற்றால் போதும் ! புதுயுகம் பூத்துவிடும்!

ஒன்றென்றிரு! தெய்வம் உண்டென்றிரு!
உயர்செல்வம் பூத்துவிடும்
அன்றென்றிரு! பசித்தோர் முகம் பார்!
நல் அறமும் நட்பும் நன்றென்றிரு!
நடு நீங்காமலே நமக்கு இட்ட படி என்றென்றிரு!
மனமே! உனக்கே உபதேசம் இதே!

---

# 41. மன அடக்கத்தால் கிடைக்கும் பலன்

---

இத்தகு மன அடக்கத்தால் கிடைப்பன பல. அவற்றை எடுத்து மொழிகின்றார் தாயுமானவர்.

"சூது ஆடு வார்போல் துவண்டு துவண்டுமனம்

வாதாடின் என்னபலன் வாய்க்கும் பராபரமே."

"சினம் இறக்கக் கற்றாலும் சித்திஎல்லாம்பெற்றாலும்

மனம் இறக்கக் கல்லார்க்கு வாய்ஏன் பராபரமே."

வட்டம் இட்டு ஒளிர்பி ராண வாயு எனும்
நிகள மோடு கனம்செயும்
மனம் எனும்பெரிய மத்த யானையைஎன்
வசம் அடக்கிடின்ஈ மும் மண்டலத்து,

இஷ்டம் உற்றவள ராச யோகம் இவன்
யோகம் என்று அறிஞர் புகழவே
ஏழை யேன் உலகில் நீடு வாழ்வன்.இனி
இங்கி இதற்கும்அனு மானமோ?

பட்ட வர்த்தனர் பராவு சக்ரதர
பாக்யம் ஆனசுப யோகமும்,
பார காவிய கவித்வம் நான்மறை
பராய ணம்செய்மதி யூகமும்,

அட்ட சித்தியும்நல் அன்ப ருக்கு அருள
விருது கட்டியபொன் அன்னமே!
அண்ட கோடிபுகழ் காவை வாழும்அகி
லாண்ட நாயகி என் அம்மையே!          (அகிலாண்ட நாயகி 1.)

- உள்ளத்தினுள்ளே சிவானந்த வெள்ளம் ஊறுகின்றது (என்.ஆனந்)
- மயக்குறு மனம் மயக்கம் தீர்கின்றது (கல்.24)
- நெஞ்சம் இளகிக் கரைந்து அன்பு உருவாய் நிற்கின்றது (பரா.21)

மனம் செம்மைபடுவதற்கு அறிவுரைகள் தரும் பாடல்களாக தாயுமானவர் பாடியிருக்கிறார். இப்பாடல்கள் மனித மனதை நெறிப்படுத்த- மனதை அறிய- மனதை அடக்க- மனதை ஒழுங்குப் படுத்த உதவும் என்பதில் ஐயமில்லை.

# 42. மனம் என்னும் விளைநிலம்

மனதைவிடப் பெரிய பொருள் இந்த பிரபஞ்சத்திலேயே இல்லை. ஏனெனில் மனதைக் கொண்டுதான் மனதையும் அறிய முடியும்.

விஞ்ஞானத்தால் எவ்வளவோ கருவிகளைக் கொண்டும் அறிய முடியாத பிரபஞ்ச ஆற்றலாகிய (Unified Force) இறைவளியைக் கூட மனம் தான் யூகித்துணருகிறது.

மனம் என்ற நிலத்தில் எது போட்டாலும் விளையும். ஆனால் எது போட வேண்டும் என்று சிந்தித்து போட வேண்டும்.

சிந்தைப் பிறந்ததும் ஆங்கே-அந்தச்
சிந்தை இறந்து தெளிந்ததும் ஆங்கே
எந்த நிலைகளும் ஆங்கே-கண்ட
யான்தான் இரண்டுஅற்று இருந்ததும் ஆங்கே-

தோழி! ஓர் எண்ணம் பிறந்ததும் ஆங்கே. அந்த எண்ணம் இறந்துபட்டு,தெளிவு பிறந்ததும் ஆங்கே. எந்த ஒரு நிலையும் ஆங்கே. கண்ட நான் , தான் என்று இரண்டற்று இருந்ததும் ஆங்கேதான்.

மனம் எங்கிருந்து தோன்றியதோ அங்கு ஒடுங்கியது. சிந்தை தெளிந்ததும் மனம்தான்.

சாட்சியில்தான் சிந்தை தெளியும். எல்லா நிலைகளும் அஙகுதான் தோன்றி ஒடுங்குகிறது.

இதையெல்லாம் உணர்ந்த நான் இரண்டற்றவனாக, அதாவது அத்வைதியாக இருப்பதும் அவ்விடத்தில்தான்.

"சிந்தைப் பிறந்ததும் ஆங்கே-அந்தச்
சிந்தை இறந்து தெளிந்ததும் ஆங்கே"

சூரியனை முதன்மையாகக் கொண்டு தோன்றிய மேகமமானது சிறிது நேரத்திற்கு சூரியனையே மறைத்து விடுகிறது.

சூரியனுடைய வெப்பத்தால் கடல் நீர் ஆவியாக மேகமாக மாறுகிறது. பின் அம்மேகம் தன்னிடத்திலுள்ள் நீரை மழை யாக பொழிந்துவிட்டு மறைகிறது.

மழை நீரானது அருவியாகவோ, ஓடையாகவோ ஆறாகவோ ஓடி இறுதியில் கடலில் கலக்கிறது.

கடலிலிருந்து வந்த நீர் மீண்டும் கடலையே சென்றடைகிறது. மேகம் போன்று இறைவனிடதிலிருந்து தோன்றிய மனம் இறைவனையே மறைக்கின்றது.

நல்வினை தீவினையாகிய செயலைப் புரிந்து கடையியில் மனம் ஆத்மபொரூபத்தில் நசித்துப் போகிறது.

"எந்த நிலைகளும் ஆங்கே-கண்ட
யான்தான் இரண்டுஅற்று இருந்ததும் ஆங்கே"

மனம் இறைவனிடதிலிருந்து ஜீவனை பிரித்து வைத்துள்ளது.

மனம் உள்ளவரையில் ஜீவன் தன்னைப் பரமாத்மாவுக்கு அன்னியமாக எண்ணிச் செயல் புரிந்து வருகின்றான்.

தான்வேறு பரமாத்மா வேறு என்ற நிலையை மனம் நம்மிடத்து ஏற்படுத்தி இருக்கின்றது.

மனம் தெளிவடைகின்ற பொழுது ஜீவாத்மன் தன்னைப் பராமாத்மாவக்கு வேறானவன் என்ற உணர்வையும் கடந்து தானும் பரமாத்மாவும் ஒன்றே என்பதை உணர்கின்றான்.

## மன ஒழுக்கத்தால் ஆனந்தம் கிடைக்கும்

- தாயுமானவர் உபதேசங்களைப் பின்பற்றினால் நலமுடனும், நன்றாகவும், நிம்மதியாகவும் வாழலாம்.

- மனம் அன்புடையதாகவும், பற்றற்றும், நோய் இல்லாமலும் தைரியமாகவும் இருக்கலாம்.

இன்றைய காலகட்டத்தில் ஒழுக்கத்தைப் போதிக்கும் கல்வி சொல்லித் தரப்படுவதில்லை.

சந்தோஷம், நிம்மதி வேண்டும் என்றால் உண்மையைப் பேச வேண்டும். பெற்றோரிடம் குழந்தைகள் பொய் சொல்லக் கூடாது.

நிம்மதிக்கு அடிப்படை உண்மை. மனதில் வரும் ஒழுக்கத்தால் உங்களுக்கு ஆனந்தம், எல்லா சக்திகளும் கிடைக்கும்.

இறை பக்தருக்கு ஆன்மிக சிந்தனை தேவை. எல்லோரும் நேசத்துடன் இருக்கலாம். இதன் மூலம் நாம் இறைவனைக் காண்பதற்கான வழி ஏற்படும். அதன் மூலம் மோட்சத்தை அடையலாம்.

இந்த உலகுக்கு சுகம், அழிவற்ற வாழ்வு, அளவில்லாத அறிவு, தர்மம் ஆகியவைதான் யுக தர்மம். இறைவன், ஆன்மா, நிலையான தர்மம் ஆகியவை மாறாது.

தாயுமானவரைப் பற்றி நாம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். அவரது பாடல்களைப் படித்தவர்களுக்கு தாயுமானவரின் பெருமைகள் தெளிவாகப் புரியும்.

படிப்படியாக ஆன்மிக வாழ்வில் முன்னேற வேண்டும். நல்லோர் கூட்டத்தில் நாம் கலந்து கொள்ள வேண்டும். இதனால் நமக்கு தன்னம்பிக்கை கிடைக்கும்.

ஆனந்தக் களிப்பு பாடலுக்குள் சென்றால், இறைவனை அடையும் வழி கிடைக்கும். உண்மையான அறிவு கிடைக்கும்.

## 43. மனதில் செயலினை சுட்டிக்காட்டுவதற்கு தாயுமானவர் பயன்படுத்திய உவமைகள்.

உயிரினங்கள்.

1, ஆடு.

2. மான்,
3. தேள்,
4. குரங்கு
5. புழு

### உயிரற்ற பொருள்கள்

1. வானம்,
2. கடல்,
3. மலை,
4. காற்றாடி,
5. கல்,
6. மரக்கலம்,
7. இரும்பு,
8. நீர்க்குமிழி,
9. பம்பரம்,
10. பஞ்சு,
11. பாதரசம்.

### பண்புப் பெயர்கள்

1. அறிவிலி,
2. வஞ்சகம்,
3. கள்ளத்தனம் என்பவை

## நிறைவுரை

மனத்தை மனம் அறிவதுதான் ஞானத்தின் உச்சம். இந்த உச்சத்தை அடையவில்லையே என்று தன் வாழ்நாளில் கடைசி நாட்களில் ஏங்கித் தவித்தார் ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்.

"உன்னையே நீ அறிவாய்" என்ற கிரேக்க நாட்டு தத்துவத்திற்கும் "நான் என்னை அறியும் போது உலகையே அறிகிறேன்" என்ற ஒரு சுபியின் வாக்கும் வள்ளலாரின் வாக்கினையே வலியுறுத்துகின்றன.

எனவே நாம் நம்மையறிய , நமது மனதை செம்மைப்படுத்த தாயுமானவர் நமக்கு வகுத்தளித்த மனம் பற்றிய சிந்தனைகளையும், வாழ்வியல் நெறிகளையும், நாம் நம்முடைய வாழ்வினில் பின்பற்றினால் இன்பமான இனிய வாழ்வு நமக்கு அமையப்பெறும என்பதில் எள்ளவும ஐயமில்லை.

# பொருளடக்கம்

1. மனம் ஒரு அறிமுகம்
2. மனமே மனிதன்.
3. மனம் ஒரு மாபெரும் பொக்கிஷம்
4. மனதைப் பற்றி ஆராய்ந்தவர்கள்.
5. தாயுமானவர் பாடல்களில் மனம்
6. மனதின் தன்மை
7. மனம் ஒரு நிலையற்ற, நிலையாமை உடைய பொருள்
8. மனதின் இயல்புகள்
9. மனம் பல செயல்கள்
10. மனதின் அறியாமை
11. மனதின் பல்வேறு பெயர்கள்
12. மனம் இழந்த நிலை
13. பலவகைப் பற்றுகள் உள்ள மனம்.
14. மனதின் பல்வேறு உணர்வுகள்.
15. மனமும் மாயையும்.
16. கள்ளம் நிறைந்த மனம்
17. மனதின் இழி நிலை
18. வஞ்சம் நிறைந்த மனம்
19. மங்கையர் மனம்
20. ஐம்புலன்களும் மனமும்
21. மனதின் தீமைகள்.

22. மனத்தின் எதிர்நிலை
23. உணர்ச்சிநிலையில் மனம்
24. மனதின் செயல்கள், விளைவுகள்
25. மனம் ஆலயம் என்பனவற்றுக்கு இடையேயான தொடர்பு
26. மனம் அடங்குதலால் ஏற்படும் நன்மைகள்
27. இறைநிலையில் மனம்
28. ஞான வீரர்களது உள்ளம்.
29. மனம் மாயை திருவருள் இவற்றிற்கு இடையேயான தொடர்புகள்.
30. இறைநிலையுடைய மனம்
31. அடியார் மனம்.
32. அத்துவிதம்
33. இறையை அடைய மனதின் பல படி நிலைகள்
34. பிறப்பு இறப்பில் மனம்
35. மனம் இன்பம் அடைவதற்குரிய வழிகள்
36. மனம் ஒடுங்க வழி
37. மனோநாசம்.
38. மனமும் மௌனமும்
39. மனம் பேரின்பம் அடைவது எப்போது?
40. மனத்துறவு
41. மன அடக்கத்தால் கிடைக்கும் பலன்
42. மனம் என்னும் விளைநிலம்
43. மனதில் செயலினை சுட்டிக்காட்டுவதற்கு தாயுமானவர் பயன்படுத்திய உவமைகள்.

# துணைநின்ற நூல்கள்.

1. தாயுமானவர் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம் ,விஜயா பதிப்பகம், கோவை.
2. அறிவொளி, மெய்கண்ட சாஸ்திரம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை
3. தாயுமானசுவாமிகள் வரலாறு, சி. இராமலிங்கம், திருப்பனந்தாள் மடம் திருப்பனந்தாள்.

---

4. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.
5. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
6. வேதங்கள் ஏற்றுப் போற்றும் தமிழ் இலக்கியங்கள். லட்சுமிநாராயணன், அண்ணாநகர். சென்னை.